முஸ்லிம் முரசு

3342.

நவம்பர் 1956, சென்னை விலை 6 அணா

الرئيس جمال عبد الناصر



நாகரீகமான தோற்றம்
நவீனமான தயாரிப்பு!
பல நவீன இயந்திரங்கள் புயல் வேகத்தில் உற்பத்தி செய்யும் மில் துணிகளின் வியாபாரத்தையே மந்த மடையச் செய்து சவால் விடும் வகையில், மக்களில் ஒரு சாரார் எப்போதும் கைத்தறி நெசவுகளையே விடாப்பிடியாக ஆதரித்து வந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம்— தொழில நுட்பமும், கைத்தறி நெசவில் அநுபவமும் உடையவர்களாக, நவீனமும் நாகரிகமும் வாய்ந்த தபால் பெட்டி மார்க் கைத்தறி கைலிகளை அதன் உற்பத்தியாளர்கள் என்றும் மங்காத தரத்துடன் தயாரித்துக் கொடுக்கிறார்கள்
நீடித்த உழைப்பும், மங்காத சாயமும் கொண்ட தபால் பெட்டி மார்க் கைத்தறி கைலிகளை ஆதரிக்க, மக்களுக்குத் தனியாகச் சொல்லவும் வேண்டுமோ ?
தபால் பெட்டி மார்க்
கைத்தறி கைலிகள்
M.A. NAINA MOHAMED &
INDIA HANDLOOM
தபால் பெட்டி
LETTER BOX
REGD TRADE MARK.
Post Box No. 1678 Madras
M.A. நெய்னாமுகம்மத் & கோ
கைத்தறி கைலி வர்த்தகர்கள்
76, லிங்கிசெட்டி தெரு, சென்னை.

அன்புள்ள ஆசிரியருக்கு

அஸ்ஸலாமு அலைக்கும்!

இவ்வருட மீலாத் மலர் முந்திய மலரைவிட அழகிய அட்டைப் படமும், கதை கட்டுரைகளும் உடையதாய் வெளிவந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

எம். பி. ஏ. முத்தலிப்.
ஒத்தக்கடை.

"ஜே எம்"யின் "மூடிய கதவு" சிறுகதை மிக நன்றாக இருந்தது.

கே. கே. நாகூர் மீரான்,
முனீரா பாத்

முஸ்லிம் முரசு மீலாத் மலர் பிரமாதமாக இருக்கிறது.

ஓ. எம் ஷேக்தாவூத்.
அதிராம் பட்டினம்,

முஸ்லிம் முரசில் வெளிவரும் கதைகள் போற்றத் தக்கவைகளாயிருக்கின்றன. ஆனால் ஒரு விஷயம், ராவுத்தர், சாஹிப், மரைக்காயர் போன்ற வால்களைக் கதாபாத்திரங்களுடன் ஒட்டிக் கொள்வதுதான் முஸ்லிம்களிலும் வேற்றுமைகள் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றன. இது காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்றதல்ல. ஆகவே, இனி எழுதும் கதைகளில் இத்தகைய பெயர்களை இணைக்க வேண்டாமென்று கதாசிரியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

டி.கே. எம். முஹம்மது ஹுஸைன்
லுமுட், மலாயா.

செப்டம்பர் இதழில் வெளியான 'முள்' போன்ற பல கருத்தோவியங்கள் நம்சமுதாயத்திற்கு அதிகம் தேவைப்படுகின்றன.

. எஸ். பக்கீர் முஹம்மது,
சோழபுரம்

மீலாத் மலரிலுள்ள "திருநபினப் பாட்டு" எங்கள் உள்ளங்களையும் உதடுகளையும் ஊரச் செய்துகொண்டே இருக்கின்றன.

தாஜுத்தீன், காதர், ரபீக், இல்யாஸ். மாபோலை, இலங்கை.

செப்டம்பர் இதழில் வெளியான "முள்" என்ற சிறுகதை அரசமரத்து அவலியாவின் இரகசியத்தை வெளியிட்டிருப்பது சில அறியாத மக்களுக்குப் படிப்பினையாக இருக்கும்.

ஏ. கே. சீனி சய்யிது,
சுங்கை பட்டாணி. கிட்டா.

முஸ்லிம் முரசு மீலாத் மலர் கலை மணம் கமழும் ஓர் வண்ண மலராக, கவினுறும் காவியமாகத் திகழ்கின்றது.

எம். இ. மரியம் பேகம், திட்டச்சேரி

மீலாத் மலர் அருமையாக அமைந்து விட்டது.

கு வெ ஜானகிராமன். குடந்தை.

மீலாத் மலர்...இஸ்லாமிய கலை, நாகரிகம், பண்பு இவைகளைத் தமிழ் உலகிற்கு எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு உயர்தர பத்திரிகை முரசு, அது நீடூழி வாழ்க!

பா. காதர் முகையதீன், திருச்சி.

மீலாத் மலரில் நபிநாயகம் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டீர்கள். அதே விதமாய் மற்ற நபிமார்களின் வரலாறுகளையும் வெளியிடுவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

பி. முஸாஹிதீன், திருவாவடுதுறை.

எஸ். சுந்தரமூர்த்தி அவர்கள் இஸ்லாத்தைப் பற்றியும் நபிமார்களைப் பற்றியும் எழுதி வருவதைப் படித்து மகிழ்ச்சி யடைகிறேன். மலரில் "மூடிய கதவு", நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு, 'நோயும் விட்டகலும்', அட்டைப் படம் யாவும் என் மனத்தைக் கவர்ந்தன

எஸ். எம் அப்துஸ் ஸலாம் ஷா,
மஹ்பூப் நகர்.

என்றும் கண்டிராத விதமாக மீலாத் மலரில் இனிய கதை

களும் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

ஏ. சி. எம். முபாரக். பஸ்யாலை,
இலங்கை.

மீ. மலர் ஒரு அறிவுப் பொக்கிஷம். கண்ணைக் கவரும் அட்டை, கருத்தைக் கவரும் இனிய வசனங்கள்! "ஜேயெம்" மின் மூடிய கதவு பலே ஜோர்!

ஏ. சி. எம். ராசீக், பஸ்யாலை.
இலங்கை.

மீலாத் மலர் மிகச் சிறந்த அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. ஒரு சிறு விஷயத்தை உட்பொருளாகக் கொண்டு, அழகான கதையைச் சிருஷ்டித்துள்ளார் மகுதூம்.

ஏ. முஹம்மது ஷேக்காதி.
அதிராம்பட்டினம்.

மீலாத் மலர் என் மனதைக் கவர்ந்தது. அதில் "பூவும் பகையும்" என்ற கதை மிகவும் நன்றாய் அமைந்துள்ளது.

எம். செ. எம். அன்ஸார்,
கொழும்பு.

நம் முஸ்லிம் சமூகத்தில் அவ்லியாக்கள் பெயரால் நடத்தப்பட்டு வரும் அனுசார இருள் நீங்க இது ('முள்') போன்ற அறிவூட்டும் சிறு கதைகளை முஸ்லிம் முரசு வெளியிட வேண்டும்.

எஸ் ஏ.எம். அபூபக்கர், சிங்கப்பூர்.

அருமையான கதைகள் கட்டுரைகளுடன் வெளிவந்திருக்கும் மீலாத் மலர், ஒவ்வொரு முஸ்லிமும் வைத்துக் காப்பாற்றத்தக்க அறிவுப் பொக்கிஷம்.

கே. ஏ. காதிர் முகையதீன்,
சென்னை-13.

அழகாகவும், அக்கரையுடனும் மலரைத் தயாரித்து வெளியிட்டுள்ளீர்கள். தங்களுக்கும், பத்திரிகைக்கும், தமிழ் முஸ்லிம்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்!

"மகரம்" மதராஸ்-7.

வருடா வருடம் மீலாத் மலரின் சிறப்பு வளர்ந்து கொண்டே வருகிறது. அதில் வந்த மூடிய கதவு கதை அற்புதம்! மாசு படிந்த உள்ளத்தைத் தூய்மைப் படுத்துகிறது "கீமியா-யெ-ஸஆதத்".

எம். எம். சய்யிது இபுராஹீம்.
வால்டேர்.

மீலாத் மலர் படிக்கப் படிக்க தேனினும் இனிமையாக இருக்கிறது.

வி. காதர் மைதீன். சிந்துவாரா,
மத்தியப்பிரதேசம்.

மலரின் அட்டைப் படமும். "மறக்கவில்லை மணி விளக்கே" என்ற கவிதையும் மிக நன்றாயிருக்கின்றன.

கா. முகம்மது யூசுப், மதுரை.

காதற் கதைகளையே படித்து அலுத்துப்போன தமிழக வாசகர்கள் சமூகத்தின் புரையோடிப் போயிருக்கும் குறைகளை சவுக்கடி கொடுத்து நிறைவுபெற விழையும் கதைகளும் காவியங்களும் நிறைந்த இம்மலரைப் படித்துப் பயனுறுவார்கள் என்பது வெள்ளிடை மலை.

நீடூர் அ. முகம்மது சயீது.

நன்றி

பாப்பு ராஜபுரத்தில் எங்களுக்கு நடைபெற்ற திருமணத்தை முன்னிட்டு நேரில் வந்திருந்து எங்களை வாழ்த்தியருளிய உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும், அன்பளிப்புகள் வழங்கியவர்களுக்கும் வெளியூர்களிலிருந்தும், மலாயா முதலான அயல் நாடுகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்பர்கள் அனைவர்க்கும் எங்கள் மனமுவந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்

ஏ. ஹஸன் நிஜாம்,
எச் சிராஜுன்னிஸா.

பாப்புராஜபுரம்,
(தஞ்சை ஜில்லா)

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

மலர் 9	சென்னை, நவம்பர் 1956 ஹிஜ்ரீ 1376, ரபீயுல் ஆகிர்	இதழ் 5

வாழ்க, எகிப்தின் சுதந்தரம்!		தலையங்கம்	... 4
முரசொலி			... 8
இஸ்லாமியக் காதைகள்			... 10
முற்போக்குப் பாதையிலோர் முஸ்லிம் தீவு			... 17
நபிகள் நாயகம் (ஸல்) வாழ்க்கை வரலாறு			... 20
பெண் புத்தி	(சிறுகதை)	சம்பந்தம்	... 26
கீமியா-யெ-ஸஆதத்		அ. அப்துர் ரஹீம்	... 32
தாயகக் கவிதையில் நாயகத் திருமேனி		கா. அப்துல் கபூர்	... 37
பக்தியும் பகுத்தறிவும்		இ. ஜீ. முஹ்யித்தீன்	... 42
புது வாழ்வு	(தொடர் கதை)	'எஸ்கேஜி'	... 47
நான் அறிந்த இஸ்லாம்		எஸ். சுந்தரமூர்த்தி	... 55
ஹைதராபாத் நிஜாம்	கவிக்குஜ் ஜமான்		... 59
கேள்வி—பதில்		"கமால்"	... 63

முஸ்லிம் முரசில் வரும் கதைகளும் அவைகளிலுள்ள பெயர்களும் யாரையும் குறிப்பிடுவனவல்ல; எல்லாம் கற்பனை!

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் உங்களுக்குத் தவறாமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு
18, ராமசாமி தெரு,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6. இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்...

விலாசம்...

முஸ்லிம் முரசு

வாழ்க எகிப்தின் சுதந்தரம்!

எகிப்தின் மீது போர் தொடுக்குமாறு இஸ்ராயிலைத் தூண்டிவிட்டு, இஸ்ராயீல் தாக்குதலால் சூயஸ்கால் வாய்க்கு அபாயம் வந்து விட்டது என்று பறை சாற்றிக் கொண்டு, கயமைத்தனமாக எகிப்தை தாக்கி, சூயஸ் கால் வாயை மீண்டும் கைப்பற்றிக்கொள்ள விரும்பிய பிரிட்டிஷ் பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியர்கள் தங்களின் குறிக் கோளில் படுதோல்வி அடைந்துவிட்டார்கள்.

அக்டோபர் 31-ந் தேதி யன்று எகிப்தின் மீது பிரிட்டனும் பிரான்ஸும் இஸ்ராயீலும் சேர்ந்து தொடுத்த அக்கிரமப் போர் இப்போது (7-11-56) நிறுத்தப்பட்டு விட்டது.

24 மணி நேரத்தில் போரை நிறுத்த வேண்டுமென்று சில நாட்களுக்கு முன் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை பிரிட்டிஷ் பிரெஞ்சுப் பிரதமர்கள் இலட்சியம் செய்யவில்லை. முன்னைவிட மும்முரமாகவே எகிப்தின் மீது பிரிட்டிஷ் பிரெஞ்சு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து, குழந்தைகளையும் பெண்களையும் கொலை புரிந்தன; மஸ்ஜித்களையும் ஆஸ்பத்திரிகளையும் தாக்கின. ஆனால் இப்பொழுது திடீரெனத் தமது படைகளுக்குப் போர் நிறுத்த உத்திரவு அனுப்பிவிட்டதாக பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் அறிவிக்கின்றார்.

இவ்விதமே பிரெஞ்சுப் பிரதமர் மாலேயும், இஸ்ராயீல் பிரதமர் பென் குரியனும் எகிப்தில் போரை நிறுத்திவிட்டதாக அறிவித்திருக்கின்றனர்.

எகிப்தின் மீது வலுத் தாக்குதலை ஆரம்பித்து, ஐ. நா. பொதுச் சபையின் தீர்மானத்தையும் அலட்சியம் செய்து, சூயெஸ் கால் வாயைக் கைப்பற்றும் வரையில் போரை நிறுத்துவதில்லை என்று உறுதி பூண்டிருந்த பிரிட்டிஷ் பிரெஞ்சுப் பிரதமர்கள் தங்கள் குறிக்கோளில் வெற்றி பெறு முன்பே திடீரெனத் தங்களின் படைகளுக்குப் போர் நிறுத்த உத்திரவு அனுப்பியதற்கு என்ன காரணம்?

பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ராயீல் ஆகிய மூன்று நாடுகளின் பிரதமர்களுக்கும் ரஷ்யப் பிரதமர் புல்கானின் எழுதிய கடுமையான எச்சரிக்கைக் கடிதங்களே இந்த ஆக்கிரமிப்பாளர்களின் திடீர் மன மாற்றத்துக்கு முக்கிய காரணம் என்று நம்புகிறோம்.

"எகிப்தின் மீது நீங்கள் தொடுத்த ஆக்கிரமிப்புப் போரை உடனே நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் அந்த ஆக்கிரமிப்பை முறியடிக்கவும், மத்தியக் கிழக்கில் சமாதானத்தை நிலை நாட்டவும் ரஷ்யா பூரணமாக உறுதிகொண்டு விட்டது" என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின் எழுதிய கடிதங்கள் அவர்களிடம் போய்ச் சேர்ந்த சில மணி நேரத்துக்குள் போர் நிறுத்தம் பற்றிய செய்தி வெளியாகியுள்ளது!

"உங்கள் நாட்டைவிட வலிமையுள்ள நாடுகள் பயங்கர நவீன ஆயுதங்களைக் கொண்டு பிரிட்டனைத் தாக்கினால் அதன் நிலைமை எப்படியிருக்கும்?" என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின், பிரிட்டிஷ் பிரதமர் ஈடனைக் கேட்கின்றார்!

புல்கானின் குறிப்பிடும் 'பயங்கர நவீன ஆயுதம்' என்பது பல்லாயிரம் மைல்கள் பறந்து சென்று தாக்கக் கூடிய 'ராக்கெட்' குண்டுகளையே குறிப்பிடுகின்றது. 'பிரிட்டன் மீதோ அல்லது பிரான்ஸ் மீதோ 'ராக்கெட்கள்' உபயோகிக்கப்பட்டால், அதனை நீங்கள் 'காட்டுமிராண்டிகளின் செயல்' என்றுதானே வருணிப்பீர்கள்" என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின் ஈடனைக் கேட்கின்றார்!

இது போன்ற கேள்விகளும், எச்சரிக்கையுந்தான் பிரிட்டிஷ் பிரெஞ்சுப் பிரதமர்களின் போர் நிறுத்த உத்திரவுக்கு உடனடியான காரணம் என்று நம்புகிறோம்.

ஐ. நா. பொதுச் சபையின் பெரும்பாலான பிரதிநிதிகள் நிறைவேற்றிய தீர்மானத்துக் கிணங்க, மூன்று நாட்களுக்கு முன்பே இவர்கள் போரை நிறுத்தியிருந்தால், "ஈடனும் மாலேயும் சோவியத் ரஷ்யாவின் ராக்கெட் குண்டுகளுக்குப் பயந்து விட்டனர்" என்று உலகம் எள்ளி நகைபாடக் கூடிய நிலைமை இன்று ஏற்பட்டிராது.

எகிப்தைத் தாக்கி, குயஸ் கால்வாயைக் கைப்பற்றி, கர்னல் நாஸரையும் கைது செய்து கடுமையாகத் தண்டிப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டு போரில் இறங்கிய ஈடனும் மாலேயும் நடுவழியில் நிலை குலைந்து நின்று விட்டதற்கு ரஷ்யப் பிரதமரின் கடுமையான எச்சரிக்கைதான் காரணம் என்பதில் ஐயமில்லை.

புல்கானின் எழுதிய பயமுறுத்தல் கடிதமோ, அல்லது உலக மக்களெல்லாம் ஒன்று சேர்ந்து பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் எதிராக எழுப்பிய கண்டனக் குரலின் வேகமோ, அன்றி எகிப்தியர்கள் தங்களின் தலைவர் நாஸரை ஒரு போதும் கைவிடமாட்டார்கள் என்று ஈடன் கண்ட உண்மையோ, அல்லது அமெரிக்காவின் வற்புறுத்தலோ, அன்றி, பிரிட்டிஷ் மந்திரி சபையிலே மாறுபட்ட கருத்துடையோர் வெளியேறத் தீர்மானித்ததோ, காமன்வெல்த் நாடுகளின் கண்டனக் குறிப்போ, எக்காரணம் பற்றியோ ஏகாதிபத்ய வெறியர்கள் எகிப்தின் மீது துவக்கிய ஆக்கிரமிப்புப் போரை நிறுத்திக்கொண்டு விட்டனர். ஆயினும் இவர்கள் நடத்திய போரினால் ஏற்பட்டுள்ள பயன் என்ன?

நீண்டகாலமாக பிரிட்டனை ஆதரித்து வந்த அநேக ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் இன்று, பிரிட்டனின் பகை நாடுகளாய் மாறி விட்டன.

பிரிட்டிஷ் காமன்வெல்த் கலகலத்துப் போய்விட்டது. இந்தியா பாக்கிஸ்தான் முதலான காமன்வெல்த் உறுப்பு நாடுகள் பிரிட்டிஷ் காமன் வெல்த்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள பொது மக்கள் தங்கள் அரசாங்க அதிபர்களை வற்புறுத்துகின்றனர்.

"எண்ணெய்தான் எங்களுக்கு உயிர் நாடி" என்று சொல்லிக் கொண்டே இந்த ஆக்கிரமிப்புப் போரில் இறங்கிய ஈடன், தமது

அடாத செயல்களால் எண்ணெய் தரும் இஸ்லாமிய நாடுகளை யெல்லாம் பிரிட்டனின் விரோதி நாடுகளாகச் செய்து விட்டார்!

"மண் எண்ணெயும் பெட்ரோலும் இல்லாவிட்டால் நாங்கள் மடிந்து போவோம்" என்று கூறிய அந்தோனி ஈடன் அந்த எண்ணெயும் பெட்ரோலும் விளையும் இஸ்லாமிய நாடுகளையே பகைத்துக் கொண்டது என்ன ராஜதந்திரமோ தெரியவில்லை!

இவருடைய முட்டாள் தனமான கொள்கையைக் கண்டிப்பதற்காகவே மூன்று அமைச்சர்கள் பிரிட்டிஷ் மந்திரி சபையிலிருந்து ராஜிநாமா செய்திருக்கின்றனர்.

அந்தோனி ஈடனின் செயல் அவருடைய நாட்டுக்கே எவ்வளவு பாதகமாய் முடிந்திருக்கிறதென்பதைத்தான் இந்த மந்திரிகளின் வெளியேற்றம் எடுத்துக் காட்டுகிறது.

ஈடன் எகிப்தின் மீது போர் தொடுத்தது பிரிட்டனின் தற்கொலைக்கு ஒப்பான செயல் என்பதில் சந்தேகமில்லை. பட்டப்பகலில் அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடத்தி விட்டு, அதனைப் "போலீஸ் நடவடிக்கை" என்றுதான் இன்னமும் கூறுகிறார் ஈடன்! இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நிகழ்ந்த முதல்தரமான துராக்கிரமிப்பு யுத்தம் இதுதான் என்பதை ஈடன் உணர வேண்டும். அதற்குத் தகுந்த தண்டனையை அவருடைய நாட்டு மக்களே அவருக்கு அளிக்கப்போகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஈடனின் செயலை அவருடைய நாட்டு மக்களே "கிரிமினல் குற்றம்" என்று வருணிக்கின்றனர். அவர் செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனையை அவருடைய நாட்டு மக்களே அவருக்கு விதித்தால் போதாது. உலகப் பொதுச் சபையான ஐக்கிய நாடு மன்றம் தான் ஈடன், மாலே, பென் குரியன் ஆகிய மூவருக்கும் தகுந்த தண்டனை விதிக்கவேண்டும். இப்படிச் செய்தால் தான் உலகத்துக்கு அது ஒரு படிப்பினையாக இருக்க முடியும். மீண்டும் இதுபோன்ற ஒரு துராக்கிரமிப்பும், கிரிமினல் குற்றமும் உலகில் நடைபெறாதபடி பார்த்துக்கொள்ள இதுதான் வழி. இல்லாவிட்டால் ஐக்கிய நாடுகளின் மன்றம் செத்து விட்டதென்றே சொல்லப்படும்.

வேலியே பயிரை மேய்வது போல், ஐக்கிய நாடு பாதுகாப்புக் கவுன்ஸிலின் நிலையான ஐந்து உறுப்பு நாடுகளுள் இரண்டாக விளங்கும் பிரிட்டனும் பிரான்ஸும் சேர்ந்து இக்குற்றத்தைச் செய்துள்ளன. எனவே, இந்த இரண்டு நாடுகளும் பாதுகாப்புக் கவுன்ஸிலிலிருந்து உடனே நீக்கப்பட வேண்டும்.

எகிப்திலிருந்து பிரிட்டிஷ் பிரெஞ்சுத் துருப்புகள் அடியோடு வெளியேற வேண்டும். இஸ்ரேயில் துருப்புகளும் அந்த நாட்டிலிருந்து வாபஸாக வேண்டும்.

பிரிட்டிஷ் பிரெஞ்சு இராணுவ நடவடிக்கைகளால் எகிப்து நாட்டுக்கு ஏராளமான பொருள் நஷ்டமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளன. சூயஸ் கால்வாயில் கப்பல் போக்கு வரவுக்குத் தடை ஏற்பட்டு விட்டது. இதற்காக எகிப்துக்கு பிரிட்டிஷ், பிரெஞ்சு இஸ்ரேயீல் நாடுகள் தகுந்த நஷ்டயீடு அளிக்க வேண்டும். இதற்கெல்லாம் உலக மன்றம் வழி செய்யாவிட்டால், வல்லவர்கள்தான் இந்த உலகில் வாழ முடியும், நல்லவர்கள் வாழ முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விடும். அப்படியானால் ஐக்கிய நாடுகளின் அமைப்பு எதற்காக இருக்கிறது?

ஐக்கிய நாடுகளின் மன்றம் இல்லாவிட்டால் கூட ஆசிய ஆப்ரிக்க நாடுகள் ஒன்று சேர்ந்து பிரிட்டனையும் பிரான்ஸையும் பணிய வைக்க முடியும். பிரிட்டனின் உயிர் நாடியான எண்ணெயும் பெட்ரோலும் ஆசிய அரபு நாடுக

ளிடம் தான் இருக்கின்றன. இவைகள் பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் சப்ளை செய்யப்படாமல் சிறிது காலம் நிறுத்தப்பட்டால் அரபு நாடுகள் அழிந்துவிடப் போவதில்லை. ஆனல் பிரிட்டன் உயிர் வாழ முடியாது என்று ஈடனே சொல்லுகிருர்!

இரண்டாவதாக, பிரிட்டிஷ், பிரெஞ்சு உற்பத்திப் பொருள்கள் விற்பனை யாகவேண்டிய பெரிய மார்க்கெட்டுகள் ஆசிய, ஆப்ரிக நாடுகளிலேதான் இருக்கின்றன. உலகின் பெரும் பகுதி மக்கள் இங்கேதான் வாழ்கின்றனர். இவர்களெல்லாரும் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் பொருள்களை வாங்குவதில்லை என்று உறுதி கொண்டு விட்டால், தங்கள் வாழ்வுக்கு வியாபாரத்தையே பெரிதும் நம்பியிருக்கும் பிரிட்டனும் பிரான்ஸும் என்ன செய்யும்? இவைகளின் வியாபாரம் நசித்துப் போனல் வாழ்வும் நசுக்குண்டது என்று தான் அர்த்தம்.

சூயஸ் கால்வாயை மீண்டும் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற குறிக்கோளுடன் தான் பிரிட்டனும் பிரான்ஸும் சேர்ந்து இந்த ஆக்கிரமிப்புப் போரை ஆரம்பித்தன. இக்குறிக்கோளில் அந்த நாடுகள் வெற்றி பெற முடியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுவது ஆசிய ஆப்ரிக நாடுகளின் கடமையாகும். பிரிட்டனும் பிரான்ஸும் இந்த ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்து நடத்தாமல் நிறுத்திக் கொண்டதற்கு ஆசிய ஆப்ரிக நாடுகளின் ஒற்றுமையும் ஒரு காரணம் என்பதில் சந்தேகமில்லை. எகிப்தில் நடைபெற்ற போரினல் வெள்ளையர் கற்றுக் கொண்ட பாடங்களில் இதுவும் ஒன்று. ஆசிய ஆப்ரிக்க நாடுகளின் ஒற்றுமையே உலக சமாதானத்தை உறுதிப் படுத்த முடியும்.

பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் செய்த தவற்றைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக பிரிட்டிஷ் மக்களே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு விட்டனர். இந்த வகையில் நாமும் ஏதாவது செய்தாக வேண்டும். ராஜாஜி கூறுவது போல் பிரிட்டனும் பிரான்ஸும், இஸ்ராயீலும் சேர்ந்து எகிப்துக்கு விளைவித்துள்ள மகத்தான நஷ்டத்துக்கு ஈடு செய்யாத வரையில் பிரிட்டிஷ் காமன்வெல்திலிருந்து இந்தியாவும் பாக்கிஸ்தானும் விலகிக்கொள்ளப் போவதாக ஈடனுக்கு அறிவித்துவிட வேண்டும். இந்தியாவின் நேச நாடான எகிப்தை பிரிட்டன் அநியாயமாகத் தாக்கிய பிறகும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இந்தியாவும் ஒரு உறுப்பு நாடாக இருப்பது நமது கண்ணியத்துக்கும் சுயமரியாதைக்கும் இழுக்கல்லவோ?

ஏ, எகிப்திய வீரர்களே! உங்கள் சுதந்தரத்துக்காக நீங்கள் நடத்திய வீரப் போராட்டத்தைக் கண்டு உலகம் வியக்கின்றது. பிரிட்டிஷ், பிரெஞ்சுப் பாரசூட் படைகள் பல்லாயிரக் கணக்கில் பறந்து வந்து உங்கள் நாட்டின் மீது இறங்கி உங்களைத் தாக்கிய போது நீங்கள் சரணடைந்து விடுவீர்கள் என்றுதான் எதிரிகள் எதிர்பார்த்தனர். ஆனல் நீங்களோ சரணடையவில்லை; சளைக்காமல் சண்டை செய்தீர்கள். விரோதிகளும் வியக்குமாறு வீரப் போர் புரிந்தீர்கள். எதிரிகளின் படைபலங் கண்டு நீங்கள் தொடை நடுங்கவில்லை. உலகத்தின் அனுதாபமெல்லாம் உங்களுக்கே இருக்கிறதென்ற நம்பிக்கையின் மீது எதிரிகளின் மகத்தான மிருக பலத்தை எதிர்த்து நின்றீர்கள். அதன் பயனுய் உங்கள் சுதந்தரம் பிழைத்தது. உங்களின் தைரியமும் தன்னம்பிக்கையும் சுதந்தர தாகமும் உலக மக்களுக்கெல்லாம் ஒரு படிப்பினையாக இருக்கட்டும்! வாழ்க நீங்கள்! வாழ்க உங்கள் சுதந்தரம்!

கனவு பலிக்கவில்லை!

எகிப்தின்மீதுபோர்தொடுத்து, அந்த நாட்டு மக்களைப் பணிய வைத்து, அவர்களின் துன்பம் துயரங்களுக்கெல்லாம் எகிப்தின் ஜனாதிபதி ஜமால் அப்துல் நாஸிரே காரணம் என்று எகிப்தியர்களை நம்பச் செய்து, மக்களிடமிருந்து நாஸிரைப் பிரித்து, அவருக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தனர் பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடனும், அவருக்குத் துணைபோன பிரெஞ்சுப் பிரதமர் கை மாலேயும். ஆனால் இவர்களின் கனவு பலிக்கவில்லை.

உலக மக்களின் வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் ஆளாகி அவமானப் பட்டதுதான் இவர்கள் கண்ட பலன். ஆனால் எகிப்தின் தலைவர் நாஸிரையோ அவருடைய நாட்டு மக்கள் இன்னமும் தங்களின் "விடுதலை வீரன்" என்றுதான் கொண்டாடுகின்றனர். அவருக்காக ஆயிரமாயிரம் எகிப்திய இளைஞர்கள் தங்கள் அரிய உயிர்களைப் பலியிடவும் தயாராக இருக்கின்றனர். பிரிட்டிஷ் போர் விமானங்கள் ஒரே இரவில் 32 தடவைகள் எகிப்தின் தலைநகரைத் தாக்கியிருக்கின்றன!

எகிப்து நாட்டின் மீது மொத்தம் இரண்டாயிரம் பிரிட்டிஷ் வெடிகுண்டுகள் போடப்பட்டிருக்கின்றன! இவ்வளவு பெரிய தாக்குதலுக்கு இலக்கான எகிப்திய மக்கள் எத்துணைப் பொறுமையுடன் இருந்தார்கள் என்பதை எண்ணும் போது இஸ்லாத்தின் பரம்பரைப் பண்பும், எகிப்தியத் தலைவரின் தன்னம்பிக்கையும் திறமும்தான் நம் நினைவுக்கு வருகின்றன.

சூயஸ் கால்வாயைக் கைப்பற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் ஆகாய மார்க்கமாய் வந்திறங்கிய அந்நிய பாரசூட் படைகளை எகிப்திய வீரர்கள் எதிர்த்துத் தாக்கிய வீரத்தையும் வேகத்தையும் கண்ட

ஹஸன் நிஜாம்-ஸிராஜ்

மணமகன்

மணமக்கள் நீடூழி வாழ்க!

சென்னை "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப் அவர்களின் செல்வப் புதல்வி ஸிராஜுன்னிஸாவுக்கும், குடந்தையைச் சேர்ந்த பாப்புராஜபுரம் ஜனாப் ம. அப்துர் ரஹீம் அவர்களின் ஏகப் புதல்வர் ஏ. ஹஸன் நிஜாம் அவர்களுக்கும் 25-10-56ல் பாப்புராஜபுரத்தில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

நிறைவாழ்வு பெறுக!!

ஈடனும் மாலேயும் தங்கள் எண்ணம் நிச்சயமாக ஈடேறப் போவதில்லை என்று தெரிந்து கொண்ட பிறகே, ஐ. நா. போர் நிறுத்த உத்திரவுக்கு இணங்கினர் என்று லண்டன் செய்தியொன்று கூறுகிறது!

எகிப்தை முறியடித்து, கர்னல் நாஸிரையும் ஒழித்துக் கட்டி, இன்னும் இருநூறு ஆண்டுகளுக்கு சூயஸ் கால்வாயில் ஆதிக்கம் செலுத்தலாம் என்று இன்பக் கனவு கண்ட ஈடனின் எண்ணத்தில் இடி விழுந்து விட்டது. மாலேயின் மனக்கோட்டை தகர்ந்து தரை மட்டமாகிவிட்டது.

எகிப்தை பிரிட்டனும் பிரான்ஸும் சேர்ந்து தாக்கிய பிறகுதான் கர்னல் நாஸிரின் பெருமையும் செல்வாக்கும் உலகில் உயர்ந்து விட்டது என்று மாஜி பிரிட்டிஷ் பிரதமர் அட்லீ கூறுகின்றார்.

“நம் அரசாங்கம் செய்த முட்டாள் தனமான காரியத்தினால் கர்னல் நாஸிர் இன்று இஸ்லாமிய உலகின் தலைவராக உயர்ந்து விட்டார்” என்றும் அட்லீ கூறுகின்றார்.

“எங்களுக்குப் பணிந்து பிழைத்துப்போகிறீர்களா? அல்லது நாஸிரின் வழியைப் பின் பற்றி நாசமாகப் போகிறீர்களா?” என்று பிரிட்டிஷ் விமானங்களிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசியெறிந்து எச்சரித்த ஏகாதிபத்திய வாதிகளுக்கு எகிப்தியர்கள் நல்ல பதில் கொடுத்து விட்டார்கள். எகிப்திய மக்களின் தன்னம்பிக்கைக்கும் வீரத்துக்கும் சின்னமாக விளங்கும் ஜமால் அப்துல் நாஸிரின் உருவப்படமே இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கின்றது. எகிப்தின் விடுதலை வீரன் வாழ்க!

கேள்வி-பதில்

இந்த இதழில் தலைக்கு மூன்று ரூபாய் விதம் அன்பளிப்புப் பெற்றவர்கள்.

கே. ஏ. ரஹ்மான், திருச்சி ரூ. 3.

எம். ஏ. ஷரீப், அரியலூர் ரூ. 3.

மு. இப்ராஹீம், மதுரை ரூ. 3.



விமானம் அல்லது கப்பல் பிரயாணத்துக்கு வேண்டிய டிக்கட்டுகளை எங்கள்மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

சுபேதார் அன் சன்ஸ்,

பிரயாண ஏஜண்டுகள், பம்பாயிலும் சென்னையிலும் லைசென்ஸ் பெற்ற டிக்கட் புரோக்கர்கள்.

சென்னை ஏஜெண்ட்:

Hafez abdur Rashid M. Khan, 7. Francis Joseph Street,
(Near Y. M. C. A.—G. T.) MADRAS—1.
Telephone: Avl: 4694.

கவனிக்க: பாஸ்போர்ட், விஸா, ஹெல்த் இன்கம்டாக்ஸ் சர்டிபிகேட் முதலியவைகளைப் பெறவும் உதவி செய்வோம்.

இந்த இளைஞர்கள் யார்?

"போர் புரிவதற்குரிய வாகனம் தருவீரென்று உம்மிடம் வந்தவர்களுக்கு 'உங்களை ஏற்றிச் செல்லக்கூடிய வாகனம் என்னிடம் இல்லையே!' என்று நீர் கூறியபோது, அவர்கள் தங்களிடமும் செலவுக்குரிய பொருள் இல்லாமற்போன துக்கத்தினால் தங்கள் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வடித்தவர்களாய்த் திரும்பிச் சென்றார்கள்......................" *(குர்ஆன் 9 : 92)*

தம்பி!

முஸ்லிம் உலகத்துக்கு இன்று ஒரு மகத்தான சோதனைக்காலம் ஏற்பட்டிருக்கிறது. எகிப்து முதலான முஸ்லிம் நாடுகள் ஏகாதிபத்திய வெறியர்களின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு ஆளாகியிருக்கின்றன. இந்த நிலையில் முஸ்லிம்கள் தங்களின் பழங்கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்து, வீரம், தன்னம்பிக்கை, அஞ்சாமை முதலான அரிய குணங்களையும், அன்பு தயை பொறுமை சகிப்புத் தன்மை முதலான நல்ல பண்பாடுகளையும் பற்றிப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னே பிரிட்டிஷ் பிரெஞ்சுப் போர் விமானங்கள் எகிப்தின் மீது குண்டுகளைப் பொழிந்தபோது, அந்த நாட்டு மக்கள் வியக்கத் தக்க விதமாய் அமைதியாகவும் அச்சமின்றியும் இருந்தார்கள் என்று, அமெரிக்காவின் நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் மேற்படி காட்சியை நேரில் கண்டு எழுதியிருக்கின்றார்! நெருக்கடியான நேரத்தில் இப்படி இருப்பது அவர்களின் பரம்பரைக் குணமென்றும், இஸ்லாமியப் பண்பு என்றும் அந்த அமெரிக்கப் பத்திரிகை நிருபர் வருணிக்கின்றார். இச் செய்தியைப் பத்திரிகையில் படிக்கும் போது உன்னைப்போன்ற முஸ்லிம் இளைஞர்களுக்குப் பெருமிதமும் பூரிப்பும் உண்டாகவில்லையா? தம்பி, அந்த நிருபரின் கூற்று முற்றும் உண்மை.

க்டுமையான் சோதனைகளும் பொருள் நஷ்டமும் உயிர்ச் சேதமும் ஏற்படும்போது முஸ்லிம்கள் தைரியத்தை இழக்கமாட்டார்கள் என்று நம் திருமறை முழங்குகிறது. கஷ்ட காலத்தில் பொறுமையுடன் இருப்பவர்களே உண்மையான முஸ்லிம்கள் என்றும் இறைவன் கூறுகின்றான். இத்தகைய பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் இஸ்லாமிய வரலாற்றில் பல சான்றுகள் காணக்கிடைக்கின்றன. ஆனால் அவசியப்படும் போது தற்காப்புச் சேனையில் சேர்ந்து போர் புரியத் தங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று கண்ணீர் உகுத்துக் கதறியழுத இளைஞர்களைப் பற்றி நீ கேள்வியுற்றதுண்டா? அத்தகைய நிகழ்ச்சியொன்று நபிகள் நாதரின் காலத்தில் நடந்துள்ளதென்பதற்கு நம் திருமறையில் ஒரு ஆதாரம் காணக்கிடைக்கின்றது.

தம்பி! இக் கட்டுரையின் தலைப்பிலுள்ள திருமறை உரையில் அடங்கியுள்ள இஸ்லாமிய வரலாறு என்னவென்பதையே இப்போது நீ தெரிந்துகொள்ளப் போகின்றாய் :

∴ ∴ ∴

பொழுது புலர்ந்தது; கிலந் தெளிந்தது. மதீனா நகரின் வெளியேயுள்ள மைதானத்தின் நடுவே உயரிய கொடிக் கம்பமொன்று காணப்பட்டது. அக் கம்பத்தின் உச்சியினின்றும் இளம்பிறைக் கொடியொன்று பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. அடிவானத்திலிருந்து அப்பொழுதே எட்டிப் பார்த்த காலைக் கதிரவனின் செம்பொன் மயமான ஜோதியில் அக்கொடி பிரகாசித்தது. காலைப்பொழுதில் வீசும் இளந் தென்றலால் அக் கொடியானது கம்பீரமாக ஆடி அசைந்த வண்ணம், “வாருங்கள்; வந்து கூடுங்கள்!” என்ற மௌன வசனங்களால் முஸ்லிம்களை அழைத்துக் கொண்டிருந்தது. அக் கொடியின் ஆத்மிக அழைப்பானது முஸ்லிம்களை அவர்களது இல்லங்களில் இருப்புக்கொள்ள இடமளிக்கவில்லை. கண்ணியம், அபிவிருத்தி, பெருமை, செல்வாக்கு, முன்னேற்றம் ஆகியவற்றை அடையப் பெறுவதற்காகத் தங்களை அக்கொடியானது அழைப்பதாகவே அம் முஸ்லிம்கள் எண்ணிக் குதூகல மடைந்தனர். இஸ்லாத்தின் சின்னமாகிய இப் பிறைக் கொடியானது எத்தனையோ போர்க்களங்களில் முஸ்லிம்கள் கண்ட வெற்றிக்குத் தூண்டுகோலாய் நின்று துணைபுரிந்துள்ளது. எச் சந்தர்ப்பத்திலும் இக் கொடியானது தாழ்த்தப்படவில்லை; தோற்கடிக்கப்பெற்றுப் புறமுதுகு காட்டியதுமில்லை.

தம்பி! இத்தகைய வெற்றிகளுக்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் தோள்வலி நிறைந்த தோழர்களே! இறைவனின் வாக்குகள் அவர்களது வாழ்க்கையின் போக்கையே மாற்றியமைத்துவிட்டன. தர்ம யுத்தத்திலும், சத்தியத்தைத் தாங்கிப் பிடிப்பதற்கெனப் புரியப்படும் போரிலும் பங்கெடுத்துக் கொள்ளுவதில் அடையப்பெறும் இன்பத்தைவிடப் பேரின்பம் இவ்வுலகில் எதுவுமில்லையென அத் தோழர்கள் மன மொழி மெய்களால் நம்பினர். தம்பி! அவர்க

ளாது ஒப்பற்ற தலைவரான நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் உதாரணமானது அத் தோழர்களுக்கு அபாரமான துணிவை யூட்டியது. அச்சமென்ற வார்த்தை அவர்களது அகராதியினின்றும் அறவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டது.

:   :   :

ஒரு மணி நேரத்திற்குள் இஸ்லாத்தின் தலைநகரான மதீனாவின் வீதிகளினின்றும் சந்து பொந்துகளினின்றும் மனித வெள்ளமானது கரைபுரண்டோடக் காணப்பட்டது. குதிரைப்படை வீரர்கள் தமது புகழ்பெற்ற அராபிய மட்டங்களின்மீது ஆரோகணித்து சத்தியக் கொடியின் பக்கம் நோக்கி விரைந்து சென்றவண்ண மிருந்தனர். கிராமாந்தரப் பகுதிகளினின்றும், பட்டி தொட்டிகளினின்றும் பாலைவனப் போர்வீரர்கள் தங்கள் தங்களது ஷேய்குமார்களின் தலைமையின்கீழ் அவரவர்களது குலச் சின்னங்களைத் தாங்கிக் கும்பல் கும்பலாய்ச் சென்றுகொண்டிருந்தனர். கதிரவன் உச்சிவானத்தை யடையு முன்னரே மாபெருங் குதிரைப் பட்டாளமொன்று பிறைக்கொடியைச் சுற்றி வட்டமிட்டு அணிவகுத்து நின்றது.

இப் போர்க் குழுவினரில் புத்தம் புதிய இளைஞர்கள் மட்டுமின்றி பத்ர், உஹத், அஹ்ஜாப், ஹுனைன் முதலான பிரபல யுத்தங்களில் பங்கெடுத்து வீர விருதுகள் பெற்ற தீரர்கள் பலர் காணப்பட்டனர். இவர்களது முகங்களில் தோன்றிய வடுக்கள் மேற்படி யுத்தங்களில் இவர்கள் ஆற்றிய அரும்பெருஞ் சாதனைகளின் வீர வரலாறுகளை

பரீதா-அப்துல் லத்தீப்



மணமகன்

ஆடுதுரை, ஆவணியாள்புரம் ஜனாப் கே. முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களின் ஏகப் புதல்வி பரீதா பேகத்துக்கும், தஞ்சை ஜில்லா திருவாளப் புத்தூர் அ. நெய்னா முஹம்மது சாஹிப் அவர்களின் புதல்வர் ஜனாப் அப்துல் லத்தீப் அவர்களுக்கும் 29-10-56ல் திருவாளப் புத்தூரில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

மணமக்கள்

நல்வாழ்வு பெறுக!

நீடூழி வாழ்க!

விளக்கின. இப்பொழுது இவர்கள் மேற்கொண்டுள்ள படையெடுப்பின் காரணம் முன்னரே இவர்களுக்கெல்லாம் அறிவிக்கப்பட்டிருந்தது.

தம்பி! அண்மையிலிருந்த உரோம் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த மாகாணமொன்று மண்ணுசை கொண்டு, இஸ்லாத்தின் புதிய இராஜ்யத்தை அபகரித்து, இறைவனின் திருக்கரங்களால் ஏற்றி வைக்கப்பெற்ற சத்தியப் பிரகாசத்தை—சுதந்தர ஜோதியை—சமத்துவ தீபத்தை அணைத்து விடுவதென முடிவுகட்டி அதற்கெனப் பெரும்படை திரட்டும் பணியில் முனைந்து நின்றது.

அண்டை, அயல் தேசத்தினருடனே மதத்தினருடனே சண்டை பிடிப்பதென்பது முஸ்லிம்களுக்கு எடுத்ததன்று. மனிதனை மனிதன் நேசிக்கவேண்டுமென்பதே இஸ்லாத்தின் கட்டளை. எனினும், இஸ்லாத்தின்மீதும் முஸ்லிம்களின்மீதும் வேண்டுமென்றே பலவந்தமும் பலாத்காரமும் ஏளனமும் அவமதிப்பும் திணிக்கப்படுமாயின், கண்ணியக்

மலாயா நண்பர்களுக்கு

பினங்கு. மலாயன் ஹோமியோ ஸ்டோர்ஸில் பணியாற்றி. மலாயா முழுதுமுள்ள பல ஆயிரக் கணக்கான. அன்பர்களின் நோய்களுக்குச் சிகிச்சை யளித்து குணப்படுத்திய. ஹோமியோபதி டாக்டர் ஏ. குலாம் ரசூல், M .H. P. A. (Londan); அவர்கள். சில முக்கிய காரியங்களின்நிமித்தம் இந்தியாவுக்கு வந்து, எங்கள் காரியாலயத்தில் தங்கி இருக்கிறார்கள். ஏற்கனவே அவர்களிடம் சிகிச்சை செய்து கொண்டவர்கள், அவசியமானல், கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

புதிதாக சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிறவர்களும், எங்களுக்கு விவரம் எழுதி, பார்சல் மூலமாக மருந்துகளைப் பெற்று நிவர்த்தி பெறலாம்.

இருமல், இளைப்பு. ஆஸ்த்மா. இருதய பலஹீனம், தாது நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, இந்திரியம் நீத்துப்போதல், துரித ஸ்கலிதம். சொப்பனஸ்கலிதம். ஆண்குறி துவண்டு சுருங்கிப் போதல், பெண்களுக்கான தடைபட்ட குறைந்த, தாமதிதர். வலியுள்ள மாதவிடாய். பெரும்பாடு வெள்ளைப் போக்கு, இடுப்புவலி, ஆகிய நோய்களும், மூலம், பவுத்திரம். சூலை. வயிற்றுவலி. போன்ற நாள்பட்ட, பிறரால் தீராதென கைவிடப்பட்ட நோய்களும் சுலபமான, அபாய மற்ற முறையில், குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்யப்படும். பதில் வேண்டுவோர், இரண்டு ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.

MADRAS HOMOEOPATHIC FOUNDATION
BIG STREET, RAJAGHIRI
SOUTH INDIA

குறித்த இஸ்லாத்தின் கோட்பாடுகளில் எத்தகைய தயக்கத்திற்கோ, தாமதத்திற்கோ, தடுமாற்றத்திற்கோ, பின் வாங்குதலுக்கோ சிறிதும் இடமில்லை. சத்தியத்தை நிலைநாட்டும் உத்தமப் பணியில் ஒரு முஸ்லிமுக்கு சாவு ஏற்படுவது அவனது வாழ்க்கையில் இம்மையிலும் மறுமையிலும் அடையக்கூடிய! பேறுகளெல்லாவற்றையும் விடப் பெரும் பேறாகும்!

எல்லா முஸ்தீப்புக்களும் ஏற்பாடாகிவிட்டன. முன்னேறிச் செல்ல மனிதனும் மிருகமும் தயாராயிருந்தனர். மேலும் தாமத மேற்படுவதைச் சகித்துக் கொள்ள அவர்கள் தயாராயில்லை. படை கிளம்பவேண்டுமென்பதை அறிவிக்கும் யுத்த முரசம் ஒலித்தது; ஜயபேரிகை கொட்டியது; துந்துபி முழங்கிற்று. குதிரைப் பட்டாள வீரர்கள் தமது குதிரைகளின் கடிவாளக் கயிறுகளைத் தளர்த்திவிடத் தயாராகிவிட்டனர். எதிரிகளுடன் வாட்போர் புரியும் பெருமையும் புகழும் பெற அவர்கள் துடியாய்த் துடித்தனர்.

கும்மாளமும் குதூகலமும் நிறைந்த அந்நேரத்திலே அச்சேனை சமுத்திரத்தினின்றும் சில முஸ்லிம் இளைஞர்கள் வெளியேறித் தலை கவிழ்ந்தவண்ணம் தலைநகரை நோக்கித் திரும்பி நடந்து சென்றுகொண்டிருந்தனர். அவர்களின் அருகிற் சென்று அவர்களது முகங்களை நெருங்கிப் பார்த்தபோது, அவர்களின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்தோடியது! அவர்கள் நடந்து சென்ற பூமியானது அக்கணமே இரு கூறுகளாகப் பிளந்து தங்களை விழுங்கிவிடக் கூடாதா என ஏங்கியவர்களே போன்று அவர்கள் காணப்பட்டனர்!

தம்பி! இவர்கள் யார்? இவர்களுக்கு இப்பொழுது இத்தரணியில் நேர்ந்த சங்கடந்தான் என்ன? இஸ்லாத்தின் வீரர்கள் யாவரும் தேசியத் தொண்டர்களே! தாய் நாட்டிற்காகவும் இஸ்லாத்திற்காகவும் சேவை புரியும் இலவசப் போர் வீரர்களே! இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தேவையான கத்தி, கவசம், ஈட்டி, கேடயம், குதிரை ஆகிய போர்த் தளவாடங்களையும் ஆயுதங்களையும் அவரவர்களே சேகரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

துயரமே குடி கொண்டவர்களாய் மதீனாவை நோக்கித் திரும்பி நடந்து சென்றுகொண்டிருந்த அந்த இளைஞர்கள் மிக ஏழைகள். அவர்களிடம் குதிரைகள் இல்லை. விலை கொடுத்துக் குதிரைகள் பெற அவர்களிடம் பணமுமில்லை. இப்படையெடுப்பு மிக நீண்ட காலப் பிரயாணங்கொண்டது. கால்நடையாய்ச் சென்று அதனைச் சமாளிப்பதென்பது முடியாத காரியம். எவ்வளவோ முயன்று பார்த்தும் அவர்களுக்குக் குதிரைகள் கிடைக்கவில்லை.

தம்பி! நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடஞ் சென்று இத் துரதிருஷ்டசாலிகள் தங்கள் குறைகளை முறையிட்டுக் கொண்ட

னர். பெருமானார் (ஸல்) அவர்களாலும் இவர்களது குறையைத் தீர்க்க முடியவில்லை. எனவே, இவ் வீர சிகாமணிகள் கை சோர்ந்து, மெய் தளர்ந்து துயரமே உருவெடுத்தோராயினர். அழுதழுது அவர்களது கன்னங்கள் வீங்கிவிட்டன! கவிழ்ந்த தலை நிமிராது வீதிகள் தோறும் கண்ணீரைச் சிந்திக் கொண்டும், சின்னஞ்சிறு குழந்தைகளே போன்று தேம்பித் தேம்பி யழுதுகொண்டும் அவர்கள் வீடு திரும்பினர். இவ் வரலாற்றின் சுருக்கத்தைத்தான் இறைவன் தனது திருமறையாம் திரு குர்ஆனின் 9-92 வாக்கியங்களின் வாயிலாய்ச் சுட்டிக் காட்டுகின்றான்.

தம்பி!

இவ்வுலகின்கண்ணுள்ள எந்த மதமும் அடையப்பெறாத அளவு அத்துணை விரைவில் அதிசயிக்கத்தக்க வண்ணம் உலகின் முன்னணியில் இஸ்லாம் நிற்பதைக்கண்டு, சரித்திரம் அதன் சரியான காரணந் தெரியாது இன்னமும் தனது கண்களைத் துடைத்துத் துடைத்துப் பார்த்துக் கொண்டேயுள்ளது.

மனித சரித்திரம் கண்டறியாத ஒரு நாடு—நாகரிகந் தெரியாத ஒரு நாடு—பிறந்த பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து வந்த ஒரு நாடு—ஒரு மந்திரவாதியின் மந்திரக்கோலால் தட்டப்பெற்றவுடனே திடீரெனத் தோற்றமளிப்பதேபோல், திரு நபி (ஸல்) அவர்களின் தோற்றத்தால் புத்துணர்ச்சியும் புது வாழ்வும் பெற்றுத் தனக்கென ஒரு தனி ராஜ்யத்தையும், ஒரு தனி நாகரிகத்தையும், ஒரு தனி கலாசாரத்தையும், ஒரு தனிப் பண்பாட்டையும் இவ்வுலகில் நிலைநிறுத்திக்கொண்ட அதிசயத்தைப் பற்றி நீ சிந்தித்ததுண்டா தம்பி! கண்கட்டு வித்தையே போன்று ஒரு குறுகிய காலத்திற்குள் இஸ்லாம் இத்தகைய பெரும்புகழைப் பெற்றுக் கொண்டதன் இரகசியத்தை இப்பொழுது நீ புரிந்து கொண்டாயல்லவா?

நேர்மைக்காகவும் சத்தியத்திற்காகவும் உயிர்த்தியாகம் புரிய சந்தர்ப்பம் கிட்டாததன் காரணமாய் பச்சிளங் குழந்தைகளைப்போல் கண்ணீரும் கம்பலையுமாய்த் தேம்பித் தேம்பி யழும் பண்பாடுகள் நிறையப் பெற்ற அக்கால முஸ்லிம் மைந்தர்களே இஸ்லாத்தின் வெற்றிக்குக் காரணமாய் விளங்கினர். இஸ்லாம் தனது பெருமைக்கும் புகழுக்கும் இத்தகைய இளைஞர்களுக்கே பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இன்னமும் இஸ்லாம் தனது மேன்மைக்காகவும் மறுமலர்ச்சிக்காகவும், இந் நவநாகரிக உலகில் தனது புகழும் பெருமையும் வளரவும் குன்றாது தலைநிமிர்ந்து நிற்கவும் இவ் வரலாற்றில் வரும் வீரப் புதல்வர்களைப் போன்ற முஸ்லிம் இளைஞர்களையே பெரிதும் எதிர்பார்த்து நிற்கின்றது.

தம்பி! அவசியமும் அவசரமும் ஏற்படும்போது இந்த இளைஞர்களைப்போல் நீயும் உன் கடமையைச் செய்யத் தயங்கமாட்டாயென்று நம்புகிறேன்.

உனது அன்புள்ள,
"நூர்"

வெளிவந்து விட்டது!   வெளிவந்து விட்டது!!

மௌலானா அப்துல்ஹை லக்னவீ (ரஹ்)அவர்களின்

குத்பா கொத்து

தமிழ் மொழி பெயர்ப்பு

உத்தமபாளையம், அல்ஹாஜ் மௌலவி

S. S. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் (பாகவி)

ஜும்ஆ குத்பாவில் ஓதப்படும் விஷயம் என்னவென்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நன்னோக்கங் கொண்டு, வட இந்தியாவில் புகழ் பெற்ற ஹஜ்ரத் அப்துல் ஹை மௌலானா மர்ஹூம் அவர்களால் எழுதப்பட்டதும், நமது தென்தேசத்தில் பெரும்பாலான இடங்களில் ஓதப்படுவதுமான அரபி குத்பாவை தமிழில் மொழிபெயர்த்து, குத்பாவில் எந்தெந்த விஷயங்கள் அரபியில் இருக்க வேண்டுமோ அவைகளை அரபியிலும், இதர பாஷையில் இருக்கத் தகுந்ததை தமிழிலுமாக அச்சிட்டு, இதனையே பேஷ் இமாம்கள் குத்பாவில் ஓதி விட்டால் குத்பாவின் ஷரத்துக்கள் அத்தனையும் முற்றிலும் நிறைவேறி விடுவதற்கான முறையில் அரபி பிளாக்குகளுடன் அச்சிட்டு விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. இது ஷாபி, ஹனபி இருவருக்கும் பொதுவானது. இதை இரண்டு பாகங்களாக வெளியிட்டிருக்கிறோம்.

1-வது பாகம் முஹர்ரம் முதல் ரமலான் முடிய 9-மாதங்களுக்குள்ள குத்பாக்கள் சேர்ந்து அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு கட்டியது. **விலை ரூ. 5—0—0.**

2-வது பாகம் :—ஷவ்வால், துல்காயிதா, துல்ஹஜ் ஆக மூன்று மாதங்களின் குத்பாவும், பெருநாட்கள் குத்பாவும், நிக்காஹ் குத்பாவும் துஆவும் சேர்க்கப்பட்டு கலிகோ பைண்டு கட்டியது. **விலை ரூ 2—8—0.**

ஷை இரண்டு பாகமும் சேர்ந்தது கலிகோ பைண்டு கட்டியது விலை ரூ 7—8—0.

கேட்லாக் தேவையுள்ளவர்கள் எழுதவும்.

கிடைக்குமிடம் :

தஃலீமுல் இஸ்லாம் புக் டிப்போ

612, திருவல்லிக்கேணி, ஐரோட், சென்னை—5.

6.69-நல.1956

முற்போக்குப் பாதையிலோர்

ஒரு

முஸ்லிம் தீவு

அரபிக் கடலின் நடுவே லட்சத் தீவு என்று நாம் அழைக்கும் தீவுக் கூட்டங்களிலிருந்து தெற்கே வெகு தொலைவில் மினிகாய் என்னும் தீவகம் ஒன்று இருக்கிறது. இது மலையாளக் கரையிலிருந்து 2:0 மைல்கள் தூரத்தில் இளம் பிறை வடிவில் அமைந்துள்ளது. இத்தீவகம் ஆறு மைல் நீளமும், அரைமைல் அகலமும், ஏறத்தாழ மூன்று சதுர மைல்கள் பரப்பளவும் கொண்டுள்ளது. 150 அடி உயரமுள்ள கலங்கரை விளக்கமொன்று சுமார் 80 ஆண்டுகளாக இங்கே நிலைத்து விளங்குகிறது.

இங்கு வாழும் மக்களனைவரும் முஸ்லிம்கள். இவர்கள் தீவின் நடுப்பகுதியில் ஒரு சிற்றூர் போன்று அமைத்துக் கொண்டு, ஒரே தொகுதியாக வாழ்கின்றனர். இங்குள்ள மக்கட் தொகை 4000 என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. சராசரியாக ஓர் ஆயிரம் ஆடவர்கள் இந்தியாவின் தூரத் துறைமுகங்களுக்கும், அந்நிய நாடுகளுக்கும் எப்பொழுதும் மாலுமிகளாகச் சென்றவண்ணமிருக்கின்றனர். பஞ்சாயத்து சபை, அரசினர் ஆரம்பப்பள்ளி, மருத்துவ விடுதி, கம்பியில்லா தந்தி நிலையம், இன்னோரன்ன நவீன கால வசதிகள் இங்கே அமைக்கப் பட்டுள்ளன. இவ்வூர் மக்கள், பணத்தின் அவசியத்தைக் குறித்துச் சிறிதளவே கவனம் கொள்கின்றனர். சமூகப் பழக்க வழக்கம், அன்றாட வாழ்க்கை இவற்றின் தேவைகளில் அக்கறை கொண்டுள்ளனர். தீவின் உட்பகுதியிலும், வெளியுலகத்துடனும் இவர்கள் செய்யும் வாணிபம் எல்லாம் பண்டமாற்று முறையிலேயே நடைபெறுகின்றன. பொறாமை, பூசல், கலக்கம், கவலை இவற்றிற்குக் காரணமான சொத்துப் பிரச்னைக்கு இவர்கள் முக்கியத்துவம் அளிக்காமல் வியக்கத்தக்க முறையில் ஒன்று பட்ட வாழ்வு நடாத்தி வருகின்றனர். மற்றொரு விந்தை யாதெனில், போலீஸ் எனப்படும் புறக்காவலாளர் படை ஒன்று இத்தீவிற்காக நிலையாக நிறுவப் பட்டிருந்த போதிலும், ஊர்முழுதும் ஓரிடத்தில் கூட போலீஸ்காரரைக் காண்பதரிது! ஏனெனில், செம்மையான ஊராட்சி, செவ்வனே

நடந்து வரும்போது, சட்ட வரம்மை மீறுபவரும் இல்லாததினுல், போலீஸ்காரருக்கு வேலையில்லாமல் போய்விட்டது போலும்!

தாயே குடும்பத்தின் தலைவி

இங்குள்ளோர் அனைவரும் இஸ்லாம் மதத்தையே பின்பற்றுபவர்களா யிருந்தபோதிலும், மாதர்கள் கோஷா முறையைக் கடை பிடிப்பதில்லை. அத்துடன் சமூக, பொருளாதாரத் துறைகளில் பூரண சுதந்திரத்தைப் பெற்றுப் பயனடைகின்றனர். தாயே தலைமுறை வழியாகக் கொண்ட பழக்கம் இங்கு நிலவி வருகிறது. மலையாளப் பகுதிகளில் வழக்கத்தி லிருப்பதுபோல இம்மக்கள் "தர்வாத்" என்னும் கூட்டுக் குடும்பங்கள் அமைத்து அதன் மூலம் நிலச்சொத்துக்களை நிர்வகித்து வருகின்றனர். குடும்பத்தின் பெண்டிருக்கு வீடுகள் உரிமையாக அளிக்கப்படுகின்றன. ஆண்கள் அவரவர்களுக்குத் திருமணம் நிகழும் வரை அவ்வீட்டில் தங்கி யிருப்பதற்கும், அதுவரை அக்குடும்பத்தை நிர்வகித்து நடத்துவதற்கும் உரிமை யுள்ளவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு இளைஞனும் தனது திருமணத்திற்குப் பின்னர் மனைவியின் வீட்டிற்குச் சென்று, அவளுடைய குடும்பப் பெயரையே சூட்டிக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வரவேண்டும்.

மங்கை விரும்பியவாறு மணவாளன்

இந்தியாவின் முக்கிய பகுதிகளில் வதியும் மற்ற முன்னேற்றமடைந்துள்ள இனங்களை விட இங்குள்ள பெண்டிர் சீரிய உரிமைகளும், சிறந்த சலுகைகளும் பெற்றுள்ளனர். தக்க வயதையடைந்த வாலிபனுக்கும், பருவம் எய்திய மங்கைக்கும் குறித்த காலத்திலேயே திருமணம் நடைபெறுகின்றது. ஒவ்வொரு பெண்ணுக்கும் தான் விரும்பிய வாலிபனைத்தேர்ந்தெடுத்து, வாழ்க்கைத் துணையாக்கிக்கொள்ளும் உரிமையுண்டு. பொதுவாக பெண்களெல்லாம் கற்றறிந்தவர்களாக உள்ளனர். அரசினர் ஆரம்பப் பள்ளிகள் நிறுவப் படுவதற்கு முன்னர் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெண்மணியும் அவரவர் குழந்தைகளுக்குத் தாங்களே கல்வி புகட்டிவந்தனர். கடந்த பொதுத் தேர்தலின் போது ஆண்களும், பெண்களும் சரிசமமாக அவரவர்கள் உரிமையைப் பயன் படுத்தி வாக்களித்தனர். ஊர் உரிமை சம்பந்தமான காரியங்களில்; பெண்களுக்குத்தான் அதிகச் செல்வாக்கு உண்டு. பெண்களுக்கெனத் தனியா அமைக்கப்பட்ட 'வாரங்கில்' என்ற மன்றத்தில், பல் வேறு தொகுதிகளின் தலைவிகளின் கீழ் அந்தந்தப் பிரிவுக்குள்ள பிரதிநிதிகள் ஒன்று கூடி உள்விவகாரம், குடும்ப சிக்கல், சமூக, பொருளாதார பிரச்னைகள் முதலிய வற்றைச் குறித்து விவாதிப்பார்கள். ஆனல் அங்கே எந்த ஆடவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்!

இதைப் போன்றே ஆண்களில் பல பிரதி நிதிகளும், மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட "மூ

பன்" என்ற தலைவனின் கீழ் ஒன்றுகூடி அத்தீவின் பதிற முக்கிய பிரச்னைகளை ஆராய்வார்கள். இறுதியில் இவ்விரு திறத்தாரின் தீர்மானங்களும் கலந்தாலோசிக்கப்பட்டுத் தெளிவான ஓர் முடிவுக்குக் கொண்டுவரப் படும்.

பொது வாழ்வு

இத்தீவிற்கு வனப்பையும், வளத்தையும், செழிப்பையும் சிறப்பையும் அளிக்கும் தென்னை மரங்களே இங்கு நிறைந்து வளருகின்றன. ஆடவர்கள் கொப்பரை எடுத்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் வீட்டிலிருந்தவாறே தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கும் வேலையைச் செய்து வருகின்றனர். இங்கே மீன் பிடிக்கும் தொழில் வெகுவாக முன்னேறி வருகிறது. ஒரு நாளைக்கு சராசரியளவில் ரூ. 500 வரையும், அதிக அளவில் ரூ. 3000 வரையும் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப் படுகின்றன. இவை யனைத்தையும் உப்பிட்டு வெயிலில் உலர்த்தி இந்தியாவின் சில முக்கிய இடங்களுக்கும், இலங்கை, மலேயா போன்ற வெளியிடங்களுக்கும், பக்குவப்படுத்தி சிறு கலங்கள் மூலம் ஏற்றுமதி செய்கிறார்கள். படகுகள், சிறுமரக்கலங்கள் முதலியன கட்டுவதில் இவ்வூர்வாசிகள் திறமை மிக்கவர்களாய் விளங்குகின்றனர்.

படகுப் போட்டி நடத்துதல் இவர்களிடை மிகப் புகழ்வாய்ந்ததொரு விளையாட்டாக உள்ளது. இப்போட்டிக்காக அவர்கள் தயாரிக்கும் பாம்பு போன்ற உருவமைந்த படகுகள் விரைந்து செல்வதிலும், உருவமைப்பிலும் அழகிய வேலைப்பாடுகளிலும், இந்தியாவில் கட்டப்படும் படகுகளையெல்லாம் விட ஈடிணையின்றி சிறந்து விளங்குகின்றன.

பொது சுகாதாரம், உடல் தூய்மை இவற்றில் இங்குள்ள மக்கள் ஒவ்வொருவரும்—சிறுவயதினர் கூட—மிகவும் கவனம் செலுத்துகின்றனர். குழந்தைகளெல்லாம் திறந்த கழிகால்களையும், பொது வழிகளையும் அசுத்தம் செய்யாமலிருக்கப் பயிற்சி கொடுக்கப் படுகின்றனர். அப்படி யாராவது இவ்வரம்புகளை மீறி நடந்தால் கடுமையாக எச்சரிக்கப் படுகின்றனர். குளித்தல், துவைத்தல் போன்ற காரியங்களுக்குத் தனித்தனி குளங்களும், குடி நீருக்கென்று தனித்ததோர் இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆண், பெண் இரு பாலருக்கும் வெவ்வேறாக குளங்கள் பகுக்கப் பட்டுள்ளன. குடிக்கும் நீரில் குளித்தல், குளிக்கும் நீரில் துவைத்தல் போன்ற குற்றங்களை யாரும் செய்வதரிது.

கண்ணியம், கட்டுப்பாடு இவற்றினின்றும் வழுவாது ஒழுகிவரும் விரிந்த நோக்குடைய இம் மக்களிடையே தான், இன்று முன்னேற்றத்தின் சிகரத்தில், நாகரிகத்தின் சின்னமாக விளங்கும் மாபெரும் நாடுகளிலெல்லாம் பேச்சளவில் மாத்திரம் இருந்துவரும், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இம் மூன்றும், ஒருங்கே திகழக் காண்கின்றோம்.

நபிகள் நாயகம் (ஸல்)

(அக்டோபர் இதழ் மீலாத் மலரின் தொடர்ச்சி)

இதற்கிடையில் மெதுவாக இடைவிடாமல் இஸ்லாம் வளர்ந்துகொண்டேயிருந்தது. முஹம்மது நபி(ஸல்) அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியிலிருந்து அவர்களைப் பின்வாங்கச் செய்யவே முடியாதென்று குறைஷிகள் நன்கு தெரிந்து கொண்டனர். எனவே, திருநபியவர்களை ஆதரித்துவந்த அவர்களின் குடும்பத்தினரான பனீஹாஷிம் களுக்கு பலவித இன்னல்களும் இடையூறுகளும் இழைத்து வருவதென்று குறைஷிகள் முடிவு செய்துகொண்டனர். நாயகம் அவர்களின் குடும்பத்தினரை குறைஷிகள் தங்கள் உறவு முறையிலிருந்து விலக்கி வைத்தனர். ஆயினும், குறைஷிகள் தங்களுடைய குறிக்கோளில் வெற்றிபெற முடியவில்லை.

பதின்மூன்று வருடகாலம் நபிபெருமான் அவர்களுக்கு உறவினர்களால் இழைக்கப்பட்டுவந்த கொடுமைகளும் இன்னல்களும் சொல்லுந்தரமல்ல. அவ்வளவையும் அல்லாஹ்வின் தூதர் அதிகப் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள். இறுதியில் உற்றார் உறவினர் அனைவரின் ஆதரவும், திருநபியவர்களுக்குச் சிறிதும் இல்லாமற் போய் விட்டது. உள்ளூரிலே ஆதரவில்லாமற் போய் விட்டதால் தாயிஃப் நகருக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குத் தாம் கண்ட உண்மைகளைக் கூறுவதென்று தீர்மானித்தார்கள். ஆனால், தாயிஃபிலும் திருநபி அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது. தாயிஃப் நகர மக்கள் முஹம்மது நபியவர்களின் பிரசாரத்தைக் கேலிசெய்து கேவலமாகப் பேசியதுடன் அவர்களைக் கற்களால் அடித்து விரட்டவும் செய்தார்கள், கால்களிலிருந்து இரத்தம் சிந்தும் வரையில் திரு நபியவர்களை ஓட ஓட கற்களால் அடித்தனர்.

ஒவ்வொரு நாளும் எதிரிகளின் கொடுமை அதிகமாகிக் கொண்டேயிருந்தது. மக்கா வாசிகளின் மிருகத்தனமான தாக்குதல்களிலிருந்து தமது மக்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று நபி பெருமான் (ஸல்) விரும்பினார்கள். ஆதலால், தம்மைப் பின்பற்றிய சுமார் நூறு முஸ்லிம்களை அபிஸீனியாவுக்கு அனுப்பி அந்த நாட்டுக் கிறிஸ்துவ மன்

வாழ்க்கை வரலாறு

னரிடம் அடைக்கலம் தேடிக்கொள்ளச் செய்தார்கள், இப்பொழுது நபி பெருமானுக்கு ஆதரவாயிருந்த முஸ்லிம்களும் மக்காவிலிருந்து வெளியேறி விட்டனர். காரிருளில் ஒரு பேரொளி போல் விளங்கிய கதீஜா நாயகியும் காலமாகி விட்டார்கள். திரு நபியவர்களை ஆதரித்து நின்ற அபூதாலியும் ஆண்டவனடி சேர்ந்து விட்டார்கள். அருமை மனைவியும், அன்பு மிக்க சிறிய தந்தையும் ஒரே சமயத்தில் மறைந்து விட்டதால் குறைஷிகளுக்குக் கொண்டாட்டமாகிவிட்டது. அவர்களின் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவார் எவருமில்லை. இந்த நிலைமையை குறைஷிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். நபிகள் நாதரையும், அவர்களின் தோழர்களையும் கொன்று விட்டால் இஸ்லாமும் அழிந்து விடும் என்று குறைஷிகள் கனவு கண்டனர். ஒரு நாள் இரவு நபிகள் நாயகம் (ஸல்) தமது இல்லத்திலே உறங்கும்போது அவர்களைப் படுகொலை செய்து விடுவதென்று இரகசியமாகக் குறைஷிகள் ஒரு முடிவு செய்து கொண்டனர். எதிரிகளின் இந்த சதிச் செயல் எம்பெருமானுர் அவர்களுக்கு இறைவனாலேயே அறிவிக்கப்பட்டது. ஆதலால் அன்றிரவே மக்காவை விட்டுப் புறப்படுவதென்று நபி பெருமான் முடிவுசெய்து கொண்டார்கள். தமக்குப் பக்கத் துணையாக அபூபக்ர் என்னும் உயிர்த் தோழரையும் உடனழைத்துக் கொண்டார்கள். மக்காவிலிருந்து 150 மைல் தொலைவிலுள்ள மதீனு நகரை நோக்கி இருவரும் புறப்பட்டனர்.

உலக வரலாற்றில் மிகவும் முக்கியமான இந்த நிகழ்ச்சி கி. பி. 622-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதியன்று நிகழ்ந்தது. இதனைத்தான் ஹிஜ்ரீ என்றும், இஸ்லாமிய ஆண்டின் துவக்கமென்றும் கூறுகின்றோம்.

நபிகள் நாயகம் (ஸல்) மக்காவை விட்டு வெளியேறி விட்டார்கள் என்ற் செய்தியறிந்த குறைஷிகள் சும்மாயிருக்கவில்லை. அவர்களை மிக வேகமாகப் பின் தொடர்ந்தனர். தங்களைத் துரத்திக் கொண்டு வரும் எதிரிகளிடமிருந்து, தங்களைத் தற்காத்துக் கொள்ள விரும்பிய திரு நபியும், அவர்களின் தோழரும் வழியில் இருந்த 'தௌர்' என்னும் மலைக்குகையில் மூன்று நாட்கள் ஒளிந்துகொண்

டிருந்தனர். பின் தொடர்ந்து வந்த எதிரிகள் இக்குகை யின் சமீபத்தில் வந்தபோது அவர்களின் காலடி சப்தம் ஒலிக்கக் கேட்ட அபூபக்ர்(ரலி) அச்சமும், அவநம்பிக்கை யும் கொண்டு விட்டார்கள். "ஏ, இறைவனின் தூதரவர் களே! நாம் இருவர் மட்டும்தானே இங்கிருக்கின்றோம். விரோதிகள் அநேகர் இருக்கின்றனரே! இவர்களிடமிருந்து நாம் எப்படித் தப்பிப்பிழைக்க முடியும்?" என்று நபிகள் திலகத்தை நோக்கி அபூபக்ர்(ரலி) கேட்டார்கள். உடனே நபிகள் நாயகம் தமது தோழரைப் பார்த்து, "நீங்கள் அஞ்சவேண்டாம். இங்கு நாம் இருவர்மட்டும் இல்லை. மூன்றாவதாக அல்லாஹ்வும் நம்முடன் இருக்கின்றான்" என்று மறுமொழி கூறினார்கள்.

மிக்க நெருக்கடியான நேரத்திலும் நபி பெருமான் இறைவன் மீது எத்துணை ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந் தார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இந்த நம்பிக்கையே நபிகள் நாதரின் வெற்றிக்கு அவர்களின் வாழ் நாள் முழுதும் உறுதுணையாக இருந்ததென்பதில் ஐயமில்லை.

நபி பெருமானும், அவர்களின் தோழரும் எட்டு நாட் களுக்குப் பின் மதீனாவை அடைந்தார்கள். ஆனால் மதீனா வுக்குச் சென்ற பிறகும், விரோதிகள் வாளாயிருக்கவில்லை. ஆயிரம் மக்காவாசிகளைக்கொண்ட ஒரு பெரிய சேனையைத் திரட்டிக் கொண்டு மதீனாவை நோக்கிப் புறப்பட்டனர். மதீனாவிலிருந்து முப்பது மைல் தொலைவிலுள்ள 'பத்ர்' என்னுமிடத்தில் 313 மனிதர்களைக் கொண்ட முஸ்லிம் சேனையை எதிர்த்துப் போராடினர். 1000 பேர்களைக் கொண்ட எதிரிகளின் சேனை 313 முஸ்லிம்களால் முறி யடிக்கப்பட்டு விட்டது! மக்காவிலிருந்து 120 மைல் தொலைவில் இந்த முதல் யுத்தம் நடை பெற்றது.

இந்த முதற் போரில் அடைந்த தோல்வியினால் மக் கத்துக் குறைஷிகள் எவ்வித பாடமும் கற்றுக்கொள்ள வில்லை. மீண்டும் அபூஸுஃபியான் தலைமையின் கீழ் திரண்டு சென்று 'உகத்' என்னுமிடத்தில் முஸ்லிம்களை எதிர்த்து நின்று போர்புரிந்தனர். மதீனாவிலிருந்து 12 மைல் தொலைவிலும், மக்காவிலிருந்து 138 மைல் தொலைவிலும் இந்த இரண்டாவது போர் நிகழ்ந்தது. இந்த உகத் யுத்தத் திலும் இறுதி வெற்றி இஸ்லாத்துக்கே கிடைத்தது.

இதற்கிடையில் எதிரிகளின் பலம் வீண்விரயமாகி

விட்டதால் அவர்கள் முஸ்லிம்களை எதிர்த்து நிற்க வலிமை யற்றவர்களாகி விட்டனர். ஆதலால் ஹிஜ்ரீ ஆறாவது ஆண்டில் மகான் முஹம்மது நபி அவர்களுடன் எதிரிகள் ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டனர்.

பின்னர், இரண்டு ஆண்டுகள் சென்று யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே ஒரு யுத்தம் எழுந்தது. இந்தப் போரிலும் முஸ்லிம்களே வெற்றி பெற்றனர்.

இறுதியாக கி. பி. 630-ல் நபிகள் நாயகம் பதினாயிரம் மனிதர்களைக் கொண்ட பெரிய சேனை யொன்றைத்திரட்டிக்கொண்டு மக்காவுக்குள் பிரவேசித்தார்கள்.

எந்தப் பிறந்தகத்திலிருந்து எட்டு ஆண்டுகளுக்கு முன் துரத்தியடிக்கப் பட்டார்களோ, அதே நகருக்குள் பதினாயிரம் பேர்களுடன் இன்று பிரவேசித்து ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் அதனைக் கைப்பற்றிகொண்டார்கள்!

எட்டு ஆண்டுகளுக்கு முன் எம்பெருமான் அவர்களுக்கு எண்ணத்தொலையாத கொடுமைகள் விளைத்த எல்லா மனிதர்களும் அங்கு இருக்கத்தான் செய்தனர். முன்னால் தாங்களிழைத்த கொடுமைகளை யெல்லாம் நினைத்துப் பார்த்த அம்மனிதர்கள் இன்று அஞ்சி நடுங்கியதில் ஆச்சரியமில்லை. ஆயினும் நபிகள் நாயகம் தமது உயிருக்கு உலை வைக்கத்துணிந்த மனிதர்களைக் கூட மன்னித்து விட்ட புதுமைக்கும் பெருந்தன்மைக்கும் உலக வரலாற்றிலேயே ஒப்புவமை கிடையாது.

மக்கா வெற்றிகொள்ளப்பட்டு விட்டது. விரோதிகள் சரணடைந்து கிடக்கிறார்கள். இந்நிலையில் அவர்களைப் பார்த்து எம்பெருமான் கூறினார்கள், “ஏ, மக்கா வாசிகளே! இன்று உங்கள் மீது எத்தகைய பழிக்குப்பழி வாங்குதலும் கிடையாது. இறைவன் உங்களை மன்னிப்பானாக. அவனே பெருங்கருணையும், பேரன்பும் உடையவன். நீங்கள் இன்று சுதந்தர மனிதர்களாகி விட்டீர்கள்.

எல்லையற்ற அதிகாரங்களைத் தமது கையிலே வைத்துக் கொண்டிருக்கும் ஒருவர் எதிரிகளின் மீது சரியாகப் பழி தீர்த்துக் கொள்வதற்கு மாறாக மன்னித்து விடுகின்றார்! இதைப்போன்ற ஒரு பெருந்தன்மைக்கும், மன்னிக்கும் குணத்திற்கும் மானிட வரலாற்றிலேயே ஒரு சிறந்த முன் மாதிரியை இஸ்லாத்தின் திருநபியவர்களிடந்தான் காண்கின்றோம்.

அல்லாஹ்வின் இல்லமாக விளங்கிய கஅபாவிலே வைக்கப் பட்டிருந்த 360 விக்ரஹங்களும் உடனே அப்புறப் படுத்தப்பட்டுவிட்டன. இதற்குப் பின்னர் இரண்டே ஆண்டுகளில் அரேபியா முழுதும் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டது, அல்லது திருநபியவர்களுக்கு விசுவாசப் பிரமாணம்செய்து கொடுத்தது எனக் கூறலாம்.

மா நபியவர்கள் தமது மறைவுக்கு முன்பே அவர்களின் சீர்திருத்தப்பணியில் பரிபூரண வெற்றியடைந்து விட்டார்கள். அராபிய சமுதாயத்தில் மலிந்துகிடந்த அருவருக்கத்தக்க அனுச்சாரங்களனைத்தும் அடியோடு ஒழிக்கப்பட்டன. சூதாட்டமும், பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தலும், மதுவருந்துதலும் மறைந்தன. பெண்களுக்குப் பெருமை யளிக்கப்பட்டது. ஒரு ஆண் மகன் எண்ணற்ற பெண்களை மனைவிகளாகக் கொள்ளும் இழிநிலை ஒழிக்கப்பட்டது. ஒரு பெண் அநேக ஆண்களை மணக்கும் அநாகரிகம் அடியோடு அழிக்கப்பட்டது. பற்பல கூட்டங்களாகப் பிரிந்து தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக்கொண்டிருந்த அராபியர்களை ஒரே சகோதரத்துவ மக்களாய்ச் செய்வதில் மகத்தான வெற்றி பெற்றார்கள் எம்பிரான் முஹம்மது நபி (ஸல்).

மாபெரும் பாலைவனமாக விளங்கிய அரேபியா, இருபத்து மூன்றே ஆண்டுகளில் ஒரு அழகிய பூங்காவாக மாறி விட்டது.

நபிகள் திலகத்தின் திருத்தொண்டு பூர்த்தியானவுடன் ஒரு நாள் 1,20,000 மனிதர்கள் 'மினு' என்னும் மைதானத்தில் திரண்டு நின்றனர். அவர்களுக்கு மத்தியில் நபி பெருமான் நிகழ்த்திய சொற்பொழிவின் சில பகுதிகள் வருமாறு:

"ஏ மக்களே! எனது வார்த்தைகளைக் கேளுங்கள். அடுத்த வருடம் நான் உங்கள் மத்தியில் இருப்பேனோ, இல்லையோ, நான் அறியேன்.

"உங்களின் உயிர்களும், சொத்தும் புனிதமானவை. நீங்கள் இறைவன் முன்னிலையில் உயிர்த்தெழும் வரையில் ஒருவரின் உயிரையோ, உடமைகளையோ மற்றவர் பறித்துக் கொள்ளுதல் கூடாது.

"உங்களுடைய ஒவ்வொரு செயலுக்கும் அந்த இறைவன் கேள்வி கணக்குக் கேட்பான். மனிதர்களே! உங்கள் மனையியர் மீது உங்களுக்கு உரிமையுண்டு; உங்கள் மீது

உங்கள் மனைவியருக்கும் உரிமை உண்டு. உங்கள் மனைவி களை அன்பாகவும் பிரியமாகவும் நடத்துங்கள்.

"உங்கள்மீது வைக்கப்பட்ட நம்பிக்கைக்குப் பாத்திர மாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளுங்கள். தீய செயல்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இரத்தத்துக்கு இரத்தம் என்பது அறியாத காலத்தின் கொள்கை. பழிக் குப் பழி வாங்குதல் என்ற பழக்கம் இன்று ஒழிக்கப்பட்டு விட்டது.

"ஏ மக்களே! எனது வார்த்தைகளைக் கேளுங்கள் அவைகளைப் புரிந்து கொள்ளுங்கள். எல்லா முஸ்லிம்களும் ஒருவர் மற்றவருக்குச் சகோதரர் என்பதை அறிந்துகொள் ளுங்கள்."

நபி பெருமான் (ஸல்) தமது இறுதிக்காலத்தில் நிகழ்த் திய பெரிய சொற்பொழிவின் சில வாக்கியங்களே இவை.

நபிகள் நாயகம் இவ்வுலகிலிருந்து மறைவதற்குச் சில மணி நேரம் முன்னதாக அவர்களின் மரணப் படுக்கையைச் சுற்றிலும் மக்கள் குழுமி நின்றனர். அப்போது நபி பெரு மான் சொன்னார்கள்: "எந்த மனிதருக்காவது நான் தீங் கிழைத்திருந்தால் அதற்குப் பதிலாக அவர் என்னைத்தண் டித்துக் கொள்ளட்டும். அவருக்கு என் முதுகைக் காட்டு கின்றேன். யாருடைய ஒழுக்கத்தைப் பற்றியாவது நான் இழிவாகப் பேசியிருந்தால் அவர் என்னை எல்லாருடைய முன்னிலையிலும் அவமானப் படுத்தட்டும். மற்றவருக்கு உரிமையுள்ள எந்தப் பொருளையாவது நான் அபகரித்துக் கொண்டிருந்தால், அவர் தமக்கு உரிமையுள்ளதை என் னிட மிருந்து பெற்றுங்கொள்ள முன் வருவாராக."

அரபு நாடு முழுதும் தமது காலடியில் கிடந்தபோது, உலகத்திலேயே வல்லமையுடன் விளங்கிய ஒருவர் கூறிய வார்த்தைகளே இவை!

நபிகள் நாதரின் இன்னுயிர் பிரிந்த வேளையில், "அல் லாஹ் ஒருவனைத் தவிர எனக்குத் துணையாக வேறு எது வும் தேவையில்லை" என்ற சொற்கள் அவர்களின் வாயி லிருந்து வெளிப்போந்தன. அன்றுதான் ரபீயுல் அவ்வல் பிறை 12, திங்கட் கிழமை—கி. பி. 632 ஜூன் 8-ஆம் தேதி. அப்போது அவர்களுக்கு வயது 63.

உலகங்களுக்கெல்லாம் அருட்கொடையாக அவதரித்த இம் மாநபி அவர்களின் மீது அல்லாஹ்வின் அருள் மாரி என்றும் இடைவிடாது பொழிந்து கொண்டிருக்குமாக!

ஸல்லல்லாஹு அலாமுஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்!

பெண் புத்தி

"சும்மா யோசிக்காதிங்க, நான் சொல்றதைக் கேளுங்கோ." என்று ஆரம்பித்தாள் கதீஜா. 'சரி, கபூர் தூங்கிட்டானா, பார்.' என்று தாழ்ந்த குரலில் கைஜாடை காட்டிச் சொன்னார் சுலைமான். அங்கிருந்தபடியே எட்டிப்பார்த்தாள். கபூர் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தான். நாள் முழுவதும் நன்றாய் உழைத்தவனல்லவா அவன்?

உடனே தன் கையிலிருந்த புகையிலையில் கொஞ்சம் திருகி வாயில் போட்டுக்கொண்டு பேசத்தொடங்கிவிட்டார் கதீஜா; "முதலில் இந்த பயலை வீட்டைவிட்டுத் துரத்தியாகணும். இல்லாவிட்டால் கண்டவரிடம் கதையளக்க ஆரம்பிச்சுடுவான். அப்படி இப்படி என்று நம் மேலேயே புகார் கொண்டுவருவான். பிறகு போலீஸ், பொறாமை என்று பல சங்கடங்களும் வரும்......ஆமாம் நான் சொல்லிட்டேன்." என்று பொரிந்து தள்ளினான்.

"பிறகு நம் கடைக்கு ஆளு!' என்று சொல்லிக்கொண்டே கயிற்றுக்கட்டிலில் சாய்ந்துகொண்டிருந்த சுலைமான் எழுந்து உட்கார்ந்தார்.

"இவன் இல்லாவிட்டால் அதோடு கடையை முடியாகணுமா என்ன? வேறு ஒரு பையனைப் பிடிச்சா போச்சு!"

"இருந்தாலும் இவன் மாதிரி உண்மையானவனா........." என்று அவர் சொல்லிமுடிக்கக்கூட இல்லை, அதற்குள் 'சும்மா அளக்காதிங்க...' என்று எழுந்து விட்டாள் கதீஜா.

எப்போதும் அப்படித்தான். கதீஜாவின் பேச்சு ஓங்கித்தானிருக்கும். அவள் சுபாவமே அப்படி. 'சரி, முதலில் அவனை அன்பாய் அழைத்து வந்தவன் நானாயிற்றே. இப்போ நான் அவனை எப்படிப் போகச் சொல்றது......உம்......"

"அப்படி வாங்க வழிக்கு! அந்த வேலை உங்களுக்கு வேண்டாம். நானே கவனிச்சுக்கிறேன்" என்று பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்து எழுந்தாள் கதீஜா.

உடனே ஒரு நீண்ட சோகப் பெருமூச்சுவெளிப்பட்டது சுலைம

னிடமிருந்து. என்ன தான் மனிதன் தனது சவுகரியத்துக்கென்று காரி யங்களைச்செய்து கொண்டு போனு லும், மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறதல்லவா! பிறருக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்தா லும் அதற்குத்தெரியாமல் ஒரு காரி யமும் செய்யமுடியாதே! தொப் பென கட்டிலில் சாய்ந்தார் சுலே மான். ஆனுல் இரவு வெகுநேர மாகியும் அவருக்குத் தூக்கம் வர வேயில்லை.

அந்தப் பக்கத்தில் பெட்டிக்கடை சுலேமான் என்ருல் தெரியாதவர் கள் ஒருவரு மே இருக்க மாட்டார்கள். ஆதியில் அக் கிராமத்து மக் களின் சவுகரி யத்தை உத்தே சித்து, புளி மிளகாய் உப்பு சாமான்களை வைத் து கொண்டு பெட்டிக்கடை திறந்தவர் அவர்தான். நேர்மையான வர். குறைவா ன லாபம் வைத்து அதிக மாய் வியாபா ரம் செய்து வந்தார். அவர் மனைவி கதீஜாவை எப்படிச் சொ ல்வதற்கில்லை. அதிகாரம் செலுத்தும் மிடுக்கும் முரட்டுப் பிடிக்கும் அவ ளுக்கு உண்டு. தன் யோசனைப்படிதான் தன் கணவன் நடந்தாகவேண்டும் என்று அபிமானிப்பவள். சுலேமானும் அவள் மீதிருந்த அன்பினுல் சற்று விட்டுக்கொடுத் து வாழ்க்கையை நடத்தி வந்துவிட்டார். சற்று வயதாகவே, உதவிக்கு ஒரு பையன் இருந்தால் தேவலை என்றிருந்தது அவருக் கு. அதற்கேற்ருற்போல் அன்று மதியத்தில்



பள்ளிவாசல் சென்று திரும்புங் கால் வழியில் சிறுவன் கபூர் கண் களைக் கசக்கிக்கொண்டு நின்றிருந் தான். அன்பாய் அணுகி விசாரித் தார் சுலேமான். அனாதையென்று தெரிந்தது. உடனே அவன் மேல் இன்னதுஎன்று சொல்ல முடியாத ஒருவித புரிவு ஏற்பட்டு விட்டது அவருக்கு. கையோடு அழைத்து வந்து விட்டார். அன்றையிலிருந்து கபூர் அவர் வீட்டுப் பையனுகவே ஆகிவிட்டான்.

கபூரை தன்னோடு வைத்துக் கொண்டு வியாபாரம் எல்லாம்

சொல்லிக்கொடுத்தார். இடையில் எப்படி எப்படியோ சிறுவனுடைய நேர்மையை யெல்லாம் கூட பரீட்சித்துப் பார்த்துவிட்டார். அத்தனையிலும் பையன் தேர்ந்து விட்டான். பிறகு வாராவாரம் பக்கத்தூர் சந்தைக் கடைக்குச் சென்று சரக்குப் பிடித்து வரவும் கபூரையே அனுப்பத்தலைப்பட்டு விட்டார் சுலைமான். இவரைவிட சூட்டிகையாக கொள் முதல் பண்ணிவந்தான் கபூர்.

சிறுவன் கபூரும் அவர்மீது அளவில்லாத அன்பும் மரியாதையும் செலுத்திவந்தான். ஒரு வேளை சோற்றுக்கு வழியில்லாது அனாதையாயிருந்த அவனுக்கு வாழ்வளித்த வள்ளலல்லவா அவர்?

சில வருஷங்கள் சென்றன.

வழக்கப்படி ஒருதடவை கபூர் சந்தைக் கடைக்குச்சென்று சரக்குப் போட்டுக்கொண்டு திரும்பிய பொழுது, வழியில் ஏதோ ஒரு சிறு தகரப்பெட்டி கிடந்தது. அதையெடுத்து தன் கை பையில் போட்டுக்கொண்டு நடந்தான். சூரியன் மறையும் வேளையாகிவிட்டதால், அதைத்திறந்துப் பார்க்கக் கூட நேரமில்லை அவனுக்கு.

"எண்டா கபூர், இன்றைக்கு இத்தனை நாழி?' என்றார் சுலைமான், "பெருநாள் சமீபிக்கிறதல்லவா! ஒரே கூட்டம். வெளியூர் சரக்குகள் வேறு போட்டிக்கு வந்து குவியத் தொடங்கின. பார்த்துத் தேர்ந்து வாங்கி வருவதற்குள் நேரம்போனதே தெரியவில்லை" என்றான்.

வாங்கி வந்த சரக்குகளை யெல்லாம் கணக்குப் பார்த்து விட்டு, "இதிலென்னடா?" என்று கை பையை எடுத்துக் கவிழ்த்தார் சுலைமான். அப்பொழுது கதீஜாவும் அங்குதான் இருந்தாள். உள்ளிருந்து அந்த தகரப்பெட்டி தொப்பென விழுந்து திறந்துகொள்ளவே, உள்ளிருந்தன வெல்லாம் சிதைந்தன. 'வழியில் கண்டெடுத்தேன் அதை' என்று கபூர் சொல்லி முடிப்பதற்குள், அதனுள்ளிருந்து விழுந்த நோட்டுக் கத்தையைப் பார்த்து விட்டாள் கதீஜா. சுலைமான் கூட தன் பார்வையைத் திருப்பினார். 'வெடுக்' கென அதை வாரிச்சுருட்டிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள் கதீஜா. சிறுவன் அதைப் பொருட் படுத்தவேயில்லை. ஏதோ என்னவோ என்று இருந்து விட்டான்,

ஆனால் அன்று இரவு வெகுநேரம் சென்று, சுலைமானும் கதீஜாவும் தனிமையில் அந்நோட்டுக் கத்தையைப் பிரித்து எண்ணினபொழுது சரியாய் முப்பது நூறு ரூபாய் நோட்டுகள் இருந்தன! 'ஆ மூவாயிர ரூபாய்!' என்று சொல்லிக் கொண்டாள் கதீஜா.

அதைக்கண்டு கதீஜாவின் மனம் இன்பக்கடலாடியபொழுது, சுலைமானின் மனம் எண்ணாத எண்ணங்கள் எண்ணின. ஆனால் கதீஜா தான் உடனுக்குடன் அநேக யோசனைகளைச் சொல்லி காரியத்திலிறங்கிவிட்டாள்!

மறு நாள் பலபல வென்று விடிந்து கொண்டிருந்த பொழுதே 'என்னடா இன்றைக்கு இத்தனை தூக்கம்!' என்று கபூரை மொலு மொலு வென்று பிடித்துக்கொண்டாள் கதீஜா. அலறிக்கொண் டெழுந்தான் கபூர். 'நீ சோம்பல் முறித்துக் கொண்டு கடை திறந்தால் விளங்கினாற்போல்தான்!' என்று சீறி விழுந்தாள். அப்பொழுதே. 'உங்களைத்தானே!' என்று சுலைமானை அதட்டி எழுப்பி, 'வர வர கபூர் சோம்பேறியா யிட்டான். இனி மேல் நம்ம கடைக்கு அவன் லாயக் கில்லே. இப்போதே கணக்குத் தீர்த்து அவனை வெளியே அனுப்பிச்சுட்டு மறுவேலை பாருங்கோ.' என்று தீர்ப்புக் கூறினாள்.

சுலைமானுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. அதற்குள் கபூரின் கைலியையும் தொப்பியையும் கொண்டு வந்து எதிரில் போட்டாள் கதீஜா. "உம். உம் இப்போதே புறப்படு!' என்று கடிந்தாள். கண்கலங்கி நின்றான் கபூர். சுலைமான் எழுந்து வந்து ஏதோ கண

குப்பார்த்துவிட்டு, கொஞ்சம் பணத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தார். அப்போழுது அவர் கரம் கூட சற்று இலேசாய் நடுங்கியது. ''உம், உம் இன்னும் ஏன் நிற்கிறான். உங்க வாயாலே போகச் சொல்லுங்களேன்'' என்று உள்ளிருந்தபடியே கத்தினாள் கதீஜா. அப்போதுதான் ''போடா கபூர்'' என்று ஈனக்குரலில் சொன்னார் சுலைமான். உருகிய உள்ளத்துடன் கண்களில் நீர் மல்க திரும்பித் திரும்பிப்பார்த்துக் கொண்டே சென்று விட்டான் கபூர்.

அக் கிராமத்தை விட்டு வெளியேறிய கபூருக்கு, தான் எப்படிப் பிழைப்பதென்று குழப்பமாக இருந்தது. மையிருட்டில் வழி தவறிய குழந்தையைப்போல் ஒன்றும் தெரியாமல் திகைத்தான், எதை எதையோ யோசித்து மனத்தைக் குழப்பிக்கொண்டபோது, அவனுக்கு சந்தைக்கடையில் பலசரக்கு சாமான்கள் விற்கும் சேட் நினைவு வந்தது.

கபூரின் சுறுசுறுப்பையும் சலிப்பில்லாத உழைப்பையும் கண்ட சேட்டுக்கு அவனைத் தன்னிடம் வேலைக்கு வைத்துக்கொள்ள அளவற்ற ஆசை உண்டு. ஒன்றிரண்டு தடவை அவனை வாய்விட்டுக்கேட்டும் விட்டார். ''அது நடக்குமா? என்னை சின்ன பிள்ளையிலிருந்து வளர்த்த வராச்சே அவர்'' என்று சொல்லி அவ்வப்பொழுது அவர் ஆசைக்கு அணை போட்டிருந்தான் கபூர்.

இப்பொழுது வேறு ஒன்றும் யோசிக்காமல் நேரே அவரிடம் தான் சென்றான் கபூர். நடந்த விபரமொன்றையும் சொல்லவேயில்லை அவருக்கு. அவரும் அதிகம் ஒன்றும் விசாரிக்காமல், உடனே தன் கடையில் சேர்த்துக் கொண்டு விட்டார். சுலைமானைவிட்டுப்பிரிந்ததில், அவனுக்கு அளவற்ற ஏக்கம் இருந்தும் கூட, புது முதலாளிக்கு உண்மையாகவே உழைத்துவந்தான் கபூர்.

கிராமத்தில் அம்மூவாயிர ரூபாயும் கதீஜாவின் கையில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடி நின்றது. அப்பணத்தை எடுத்து வெளியில் விடுவதற்கு ஒருநாளுக்கொரு யோசனை சொல்லிவந்தாள் சுலைமானுக்கு. ஆனால் அவரோ வழக்கப்படி வாய் திறவாது சும்மா தானிருந்தார்.

கடைசியில், ''இப்பொழுது அப்பணத்தை யெடுத்து வெளியில் விட்டால் அனைவரும் நம்மீது சந்தேகப்படுவார்கள். அதனால் இப்போ என் நகை நட்டுக்களைக் கழட்டித்தறேன். அடகு வைத்துப் பணம் வாங்கி வாங்க. கடையை விரிவாக்கிக்கொண்டு வியாபாரம் செய்து வருவோம். கொஞ்ச நாளுக்கப்புறம் இப்பணத்தை யெடுத்து வெளியில் விடலாம். வியாபாரத்தில் சம்பாதித்தது என்று ஆகிவிடு மல்லவா'' என்றாள். சுலைமான் அதற்கும் 'சரி' என்று சொல்லவில்லை. ஆனால் எல்லாம் கதீஜாவின் இஷ்டப்படியே நடந்தன.

'என்னடியம்மா இப்படி கருக மணியோடு இருக்கிறயே!' என்று கேட்கத்தொடங்கிய கிராமத்துப் பெண்களுக்கெல்லாம். 'உம் எல்லாநகையும் வியாபாரத்திலே கிடக்கு' என்று நீட்டி முழக்கிச் சொல்லத் தொடங்கினாள் கதீஜா.

பெரும் வியாபாரத்தில் பணம் அதிகம் புரளத்தொடங்கவே, சுலைமான் பக்கத்தூர் பாங்கியில் கணக்குக் கூட வைத்துக் கொண்டு விட்டார்.

இரண்டு வருடங்கள் ஓடின. திடீரென்று விலைவாசிகள் விழத் தொடங்கவே, நஷ்டத்தின் மேல் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது சுலைமானுக்கு. வாங்கின கடனுக்கு வட்டி கூட கட்டமுடியவில்லை. அதோடு கிராமத்தில் அப்பொழுது திருடர் பயமும் சேரவே, ஒரு நாள் சுலைமான் அந்த மூவாயிர ரூபாயையும் எடுத்துக் கொண்டு பாங்கியில் போடப் போனார்.

ஆனல் அந்த பாங்கு குமஸ்தா நோட்டுக் கத்தையை வாங்கிப் பார்த்துவிட்டு சுலேமானை உள்ளே அழைத்தான்: 'இது ஏது உங்களுக்கு?' என்று இரகசியமாய்க் கேட்டான். 'ஏன்? ஏன்?' என்று பதைபதைத்தார் சுலேமான். 'அத்தனையும் போலி நோட்டுகள்! அரசாங்கத்தாரும் இந்த நம்பருள்ள நோட்டுகளைத்தான் தேடிக்கொண்டிருக்கிருர்கள்' இது தெரிந்தால் போதும். உடனே உங்களை உள்ளே தள்ளிவிடுவார்கள்.''

அண்ட சராசரங்களும் சுலேமானின் கண்களுக்கு முன் சுற்றிச் சுழன்றன. அவைகளுக்கு நடுவே கபூரின் கள்ளம் கபடமற்ற முகம் அவரைப்பார்த்துப் பரிகாசம் செய்வதைப்போல இருந்தது.'

''நீங்கள் தான் ஒரு யோசனை சொல்லவேணும்'' என்று கையைப் பிடித்துக்கொண்டார் சுலேமான்.

''யோசனை என்ன! இதுதான் சரியான வழி. இப்படி வாங்க!'' என்று சற்று மறைவான இடத்திற்கு அவரை அழைத்துக் கொண்டுபோய், அந்நோட்டுக்கத்தைக்கு ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்துக் காட்டினன் அந்த குமஸ்தா.

தலையில் கையை வைத்துக் கொண்டு வீடுதிரும்பினர் சுலேமான். ''ஐயோ, பெண்புத்தி பின் புத்தி' என்பது சரியாகிவிட்டதே'' என்று அவர் மனம் இரத்தக் கண்ணீர் உகுத்தது.

விஷயமறிந்து கதிஜாவும் கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

எப்பொழுதுமே ஒரு மனைவி தன் கணவனுக்குத் தகுந்த யோசனை சொல்லவேண்டுமே யொழிய, பிறருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய யோசனையில் இறங்கவே கூடாது. தன் யோசனையை வற்புறுத்தி கணவன்மேல் திணிக்கவும் கூடாது.

மறு நாளே சுலேமானின் உடம்புக்கு வியாதி வந்து விட்டது. படுகேடாய்ப் படுத்துவிட்டார். நகைகளனைத்தும் கடனில் மூழ்கியேவிட்டன. கடையில் சரக்கு இருந்தால் தானே வியாபாரம் நடக்கும்! தன் ஆருயிர் கணவருக்குச் சரியான சிகிச்சை செய்யக்கூட வசதியில்லாது தவியாய்த் தவித்தாள் கதிஜா. நாட்கள் செல்லச்செல்ல இன்றைக்கோ அல்லது நாளைக்கோ என்றாகி விட்டது சுலேமானின் உடல் நிலை,

அன்று மாலை இருட்டுகிற சமயம், திடீரென்று கபூர் வந்தான் அங்கே. ''ஆ! நான் பாவியாயிருந்தாலும், என்னை வளர்த்த தோஷத்துக்கேனும் அத்தாவின் மோசமான உடல் நிலையை எனக்குத் தெரிவிக்கக் கூடாதா? இப்பொழுதுதானே கேள்விப்பட்டேன் நான்!'' என்று அலறினன் ''ஆ! நீ பாவியல்ல, கபூர்! உன்னை வெளியேற்றிய நான்தான் பாவி.'' என்ருள் கதிஜா, துக்கத்தால் அவள் தொண்டையடைத்தது. கபூரும் விம்மி விம்மி யழுதான்.

அந்த அரவம் கேட்டு மெதுவாய் கண்களைத்திறந்தார் சுலேமான். 'ஆ! கபூர்!' என்று எக்கிப்பிடித்து அவனை தன் மார்போடு அணைத்துக் கொண்டார், 'நீயே என் கடமையுள்ள மகன்!' என்று முணுமுணுத்தார். ''இதோ நான் சேர்த்துவைத்திருந்த நூற்றையம்பது ரூபாய்! செலவு செய்துகொள்ளுங்கள்'' என்று கதிஜாவிடம் நோட்டுக்கத்தையைக் கொடுத்துவிட்டு 'வழியிலேயே டாக்டரையும் கண்டுவரச் சொல்லியிருக்கிறேன்.' என்ருன் கபூர். 'ஆ! எனக்கு வாழ்வளிக்க வந்த கபூர் நீயேதான்' என்று அவன் காலடியில் அப்படியே உட்கார்ந்து கொண்டு விட்டாள் கதிஜா.

அப்பொழுது அம்மூவர் கண்களிலும் வழிந்தோடிய கண்ணீர் தரையை நனைத்தது.

சந்தாதாரர்கள்

★

கடிதங்கள் எழுதும்போதும் பணம் அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிடவும்.

—மானேஜர்.

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு, கோடிக் கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து, தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எல்லாவித படை, சொறி சிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுக் கடி, சேற்றுப்புண், எச்சிற்றழும்பு, எக்ஸிமா முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

சிறிய சைஸ் பாட்டல் 1-க்கு விலை அணு 0—6—0.
பெரிய „ „ „ „ „ 0-12—0.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை. தெ. ரயில்வே.

மலேயா (பினுங்கு ஏஜெண்ட்)
ஆர். ஏ. அஹமதுஷா முஹம்மது சுல்தான் அன் கம்பெனி.,
101. பினுங்கு ஸ்ட்ரீட், பினுங்கு.

மலேயா (சிங்கப்பூர் ஏஜெண்ட்)
ஏ. சையத் முஹம்மது கம்பெனி,
178, கிராஸ் ஸ்ட்ரீட், சிங்கப்பூர். டெலிபோன் நெ. 26918

இலங்கை (கொழும்பு ஏஜெண்ட்)
எம். சி. ஏ. ஹமீதா அன் கம்பெனி,
20, டாம் ஸ்ட்ரீட், கொழும்பு.

இலங்கை (நீர் கொழும்பில் கிடைக்குமிடம்)
ஏ. எம். எல். அலியா மரைக்காயர் அன் ஸன்ஸ்,
பிரபல மருந்துக் கடை,
160, மெயின் வீதி, நீர் கொழும்பு.

9. "பாவமும் பரிகாரமும்"

குற்றம் புரிவது மனித இயற்கை வானவர்கள் மட்டுமே ஒரு பாவமும் அறியாதவர்கள். பாவச் செயல்களை மட்டுமே செய்து கொண்டிருப்பது ஷைத்தானின் செய்கையாகும். ஆனால் பாவம் செய்த பின் அதற்காக வருந்திப் பச்சாதாபப்பட்டு இறைவனிடத்தில் மன்னிப்புப் பெறுவதே மனிதனின் செயலாகும்.

பாவ மன்னிப்பு வேண்டாதிருப்பதற்கு எந்த மனிதனுக்கும் வழியில்லை. நாயகமவர்களே நாளொன்றுக்கு 70 தடவை இறைவனிடம் மன்னிப்பு கேட்டார்கள். நெறி தவறியவர்கள் நேர்வழிக்குத் திரும்பி, செய்த தவறுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டால் இறைவன் மன்னிப்பான் என்று திருமறை திரும்பத் திரும்பக் கூறுகிறது.

குற்றம் புரியாத மனிதனே இல்லை. ஆனால் பாவத்துக்காகப் பச்சாதாபப்படுவோரே மனிதர்களிற் சிறந்தவர் என்று நாயகம் கூறியுள்ளார்கள். பாவமன்னிப்பு பெற்றவன் பாவமே செய்யாதவனைப் போன்றவன் என்றும் கூறியுள்ளார்கள். எனவே பாவங்களைப்பற்றியும், அவைகளுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

பாவம் செய்தவனின் மனத்தைப் பொறுத்தே, இறைவன் அவனை மன்னிப்பான். விஷத்தை உண்டவன் உயிர் போய்விடும் என்று அஞ்சுவதுபோல், பாவத்தைச் செய்தவன் தண்டனைக்குப் பயப்பட வேண்டும். இறைவனுக்கு மாறு செய்ததற்காக வெட்கப்பட வேண்டும். செய்த குற்றத்துக்காக வருந்தி, மீண்டும் பாவம் செய்வதில்லை என்று உள்ளத்தில் உறுதி கொள்ள வேண்டும். இதன் பிறகு மன்னிப்பு கோரினால் ஏற்றுக்கொள்வான்.

நன்மை செய்தல் தீமையை அழித்து விடுகிறது. ஒவ்வொரு பாவமும் அதைச் செய்தவன் உள்ளத்தில் அழுக்கேற்றுகிறது. நன்மை செய்தால் அவ்வழுக்கு அகற்றப்படுகிறது. எனவேதான் ஏதாவது தீமை செய்துவிட்டால் உடனே நன்மையான காரியத்தைச் செய்யும்படி நாயகம் கூறியுள்ளார்கள். தொழுகை நோன்பு போன்ற காரியங்களில் கடமைக்கு மேல் நாம் செய்பவைகளெல்லாம் பாவங்களுக்குப் பரிகாரமாகின்றன.

மொத்தத்தில் ஒருவனுடைய நன்மை அதிகமா அல்லது தீமை அதிகமா என்பதைப்பொறுத்தே இறுதி நாளில் இறைவன் தீர்ப்பளிப்பான். எனவே, நன்மையான காரியங்களையே நாடிச் செய்யவேண்டும். தீமைகளை அறவே செய்யாதிருக்க முயற்சித்தால் தான், குற்றங்களைக் குறைவாகச் செய்வோம்.

பெரும் பாவங்களைச் செய்வதால் பெரு நஷ்டத்துக்கு ஆளாக வேண்டும். ஏனெனில், அவைகளுக்கு ஈடான நன்மைகளைச் செய்வது கடினமாகும். பெரும் பாவங்களைச் செய்யாமல் தன்னைக் காத்துக் கொண்டவன் செய்யும் சிறு குற்றங்களை மன்னித்து விடுவதாக இறைவன் கூறுகின்றான்.

பெரும்பாவங்களை விட்டு விட்டு, இறைவனிடம் மன்னிப்புப் பெறலாம் என்று நினைத்து சிறு பாவங்களை மட்டும் செய்து கொண்டிருப்பதும் கூடாது. ஏனெனில், தொடர்ந்து செய்யும் சிறுபாவம் பெரும்பாவமாகிவிடு

உலகப் புகழ் வாய்ந்த தத்துவ மேதை அல்-கஸ்ஸாலியவர்கள் தமது தாய் மொழியான பாரசீக மொழியில் எழுதிய நூல்களுள் மிகப் பெரியது 'கீமியா-யெ ஸஆதத்.' பாரசீக இலக்கியத்தில் மனித ஒழுக்கம் பற்றிய இதற்கு இணையாக வேறு ஒரு நூல் கிடையாது / சுமார் ஆயிரம் பக்கங்களையுடைய இம் மாபெரும் நூலை அறிஞர் கஸ்ஸாலியவர்கள் ஒரே வருடத்தில் எழுதி முடித்தார்கள் என்பது இலக்கிய வரலாற்றில் ஒரு புதுமை / அல்-கஸ்ஸாலியின் 'அற்புதப் படைப்பு' என்று பெயர் பெற்ற 'இஹ்யா' என்னும் அரபு நூலின் சுருக்கமே கீமியா-யெ ஸஆதத். ''சாதாரண அறிவுள்ள பொது மக்களும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு பாரசீக மொழியில் இதனை எழுதினேன்.''. என்று அல்-கஸ்ஸாலி கூறுகின்றார்கள்.

இதற்கு ''கீமியா-யெ ஸஆதத்'' என்று பெயரிட்டதின் காரணத்தையும் கஸ்ஸாலி தமது சுருக்கமான முன்னுரையில் உரைக்கின்றார்கள். குறைந்த விலை மதிப்புள்ள பித்தளையையும் செம்பையும் தங்கமாக மாற்றவல்லது 'அல்கெமி' என்னும் ரஸாயனம். இதைப் போன்று மனிதர்களை மிகத் தாழ்வான எண்ணம், செயல்களிலிருந்து மிக உயர்ந்த ஒழுக்க நிலைக்கு உயர்த்த வல்லது இந்த நூல் என்பது அறிஞர் கஸ்ஸாலியவர்களின் கருத்து.

வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் இந்நூலில் எழுதப் பெற்றுள்ளது.

பாவமும் மன்னிப்பும் பற்றி இக்கட்டுரையில் கஸ்ஸாலியவர்களின் கருத்துக்கு விளக்கம் தரப்படுகின்றது.

றன்றது. சிறு செயலானாலும் நிலையான நற்செயல் சிறந்த நன்மையாவதுபோன்று, சிறுதவறும் விடாமற்செய்வதால் பெரும்பாவமாகின்றது. மேலும், அப்பாவத்தை விட்டுவிட மனமில்லாததால் மன்னிக்கப்பட வழியில்லை. ஏனெனில், ஒருமுறை ஒரு குற்றத்தைச் செய்தவன், அதற்காக வருந்தி மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாமலிருக்க உறுதி பூண்டால்தான் மன்னிக்கப்படுவான்.

ஒரு பாவத்தைச் செய்து அதைப்பற்றிச் சந்தோஷப்பட்டாலும் அப்பாவம் மன்னிக்கப்படாது. தீமை செய்து பெற்ற இன்பத்தைச் சுவைத்தால் அத்தீமையை விரும்புவதற்குச் சமமாகும். எனவே, அவ்வின்பத்தைத் துன்பமாகக் கொள்ள வேண்டும்.

பிறருக்குத் தெரியாமல் செய்த பாவத்தைப் பற்றிச் சிலர் சந்தோஷப்படுவார்கள். குற்றம் செய்யும்போது இறைவன் பார்த்துக் கொண்டிருந்தான் என்று எண்ணி இவர்கள் வருந்துவதில்லை. இத்தகையோரின் குற்றமும் மன்னிக்கப்படுவதில்லை.

ஒரு பாவத்தை இலேசாக எண்ணுவதும் குற்றமாகும். எந்தச் சிறுபாவத்தைச் செய்தாலும் அதைப் பெரிதாகவே எண்ணவேண்டும். சிறு குற்றம் செய்தாலும் அதைக் குத்திக் காட்டும் மனச்சாட்சி ஈமான் உள்ளவர்களிடமே இருக்கும்.

சிறு பாவமாயினும் நிலையான தீமையைச் செய்வதும் பெருங் குற்றமாகும். நிலையான நன்மையைச் செய்தவன் இறந்த பின்னும் நன்மையை அடைந்து கொண்டிருப்பான். ஏனெனில், கிணறு வெட்டுதல், பள்ளிக் கூடம் கட்டுதல் போன்ற நன்மையான காரியங்களைச் செய்தவன் இறந்த பின்னும், அவன் செய்கையின் பயனை பிறர் அடைந்து கொண்டிருப்பார்கள். அதற்கான நற்கூலி அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும். இதைப்போன்றே ஒரு நிலையான தீமையைச் செய்தவன் இறந்த பின்னும் தொடர்ந்து பாவத்தைச் செய்து கொண்டிருப்பவனாகின்றான்.

ஒரு குற்றத்தைப் பகிரங்கமாகச் செய்தலும் பெரும்பாவமாகும். இவ்வாறு செய்பவன் பிறரையும் வழி தவறும்படிச் செய்கின்றான். பிறரை நன்மை செய்யும்படித் தூண்டியவனுக்கு நற்கூலி கிடைப்பதைப் போன்றே பிறர் தவறுவதற்குக் காரணமாயிருப்பவனும் தவறு செய்பவனாவான். இவன் இறந்த பின்னும், இவனால் வழி கெட்டோர் தீமையிலேயே நிலைத்திருப்பதால் இவனும் தீமை செய்து கொண்டே இருப்பவனைப் போன்றவனாவான். இத்தகையோர் மன்னிப்புப் பெறுவதும் மிகக் கடினமாகும். ஒருவன் இறந்தவுடன் அவன் செய்த தீமைகளும் அழிந்துவிடவேண்டும்.

ஒரு சாதாரண மனிதன் செய்யும் சிறு குற்றத்தை அறிஞ் ஒருவன் செய்தால் அது பெரும் பாவமாகக் கொள்ளப்படும். ஏனெனில், அறிஞனும், மக்

யிடையே நன்மதிப்புப் பெற்ற வனும், மக்கள் தலைவனும் தவ றிழைத்தால் சாதாரண மக்களும் அக்குற்றத்தைச் செய்வார்கள். இவ்வகையில் ஒரே குற்றம் சில ரிடத்தில் சிறு பாவமாயும், சில ரிடத்தில் பெரும் பாவமாயும் இருக்கின்றது. சாதாரண மக்க ளிடத்தில் குற்றமற்ற ஒரு செய்கை அறிஞனிடத்தில் பாவ மாயிருப்பதும் உண்டு.

பெரியோர்கள் செய்த குற் றத்தை மறைத்துவிட வேண்டும். அதை மக்களிடத்தில் பரத்து வது பெருங் குற்றமாகும். ஏனெனில் "பெரியவர்களே செய்யும்போது நாமும் செய்தா லென்ன?" என்று எண்ணி, சாதாரண மக்கள் அப் பாவத் தைச் செய்ய முற்படுவார்கள்.

பாவங்களில் இருவகைகள் இருக்கின்றன. ஒன்று இறை வனுக்கு மாறு செய் தவை. மற்றது பிறரைத் துன்புறுத்தியவை. இறைவனுக் காகச் செய்ய வேண்டிய கட மைகளை நிறைவேற்றாமல், தனக் குத் தானே தீங்கிழைத்துக் கொண்ட குற்றத்தை இறைவன் நாடினால் மன்னிப்பான். ஆனால் பிறருக்குத் தீங்கிழைத்தவன் இறைவனிடத்தில் மன்னிப்புப் பெற முடியாது. துன்புறுத்தப் பட்டவனே துன்புறுத்தியவனை மன்னிக்க வேண்டும். குற்றத்தை மன்னிக்கும் பண்பு இறைவ னிடமுள்ளதைப் போன்று மனிதனிடமில்லை. எனவே, ஒரு வனுக்கு இழைக்கப்பட்ட குற் றத்தை அவனே மன்னிக்கும் வரையில் இறைவன் மன்னிக்க மாட்டான். ஆதலால் சிறு பாவமாயினும், அதனால் பிறர் மனம் புண்பட்டால் அது பெரும் பாவமாகும்.

இறைவனிடத்தில் நாளைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ள லாம் என்று எண்ணி இன்று ஒரு குற்றத்தைச் செய்வதும் பாவமாகும். மரணம் எப்போது வருமென்று அறிய முடியாத தால், எக்காலத்திலும் குற்ற மற்றவனாய் மரணமடைவதற்குத் தயாராக இருக்கவேண்டும். மர ணம் வருமுன் மன்னிப்புக் கோரும்படி இறைவன் கட்டளை யிடுகிறான். எல்லா பாவங்களை யும் தொடர்ந்து செய்து விட்டு உயிர் போகும்போது மன்னிக் கும்படி மன்றாடினால் இறைவன் மன்னிப்பதில்லை.

இறைவனுடைய மன்னிப்பின் மீது அதிக ஆதரவு வைத்து சிலர், பாவங்களைச் செய்துகொண்டே இருப்பார்கள். இத்தகையோர் இறைவனின் தண்டனை பற்றிய அச்சத்தை மனத்திற் கொள்ள வேண்டும். மற்றுஞ் சிலர், அதிக மான பாவங்களைச் செய்து, இறைவன் மன்னிப்பான் என்ற நம்பிக்கையையும் இழந்து, 'தலைக்குமேல் சென்றபின் சாண் போனாலென்ன, முழம் போனா லென்ன' என்ற நிலையில் பாவங் களைச் செய்துகொண்டேயிருக் கின்றனர். இத்தகைய மன நிலையை உண்டாக்கிய வைத் தானை விட்டும் விலகி, செய்த தவறுகளை விட்டு விட்டு, நல்ல வர்களாக இருக்க முயற்சித் தால் இறைவன் மன்னிக்க வழியுண்டு. முடிந்தவரை நல்ல

வர்களாக இருக்க முயலவேண்டும். அமைச்சர்ப் பதவியை விட உயர்ந்த அரச பதவி கிடைக்க வில்லை என்பதற்காக, அமைச்சர்ப் பதவியையும் விட்டுவிட்டு வேலைக்காரனாகின்றவன் அறிவிலியல்லவா?

உதாரணமாக, தொழுகையின் போது உள்ளம் ஈடுபடவில்லை என்பதற்காக, தொழுகையையே விட்டுவிடக் கூடாது. அவ்வாறு தொழுவதைவிட தொழாமலிருப்பது மேல் என்ற எண்ணத்தை ஷைத்தான் ஊட்டுவான். பாவிகள் ஷைத்தானுக்கு வழிபட்டுவிடுவார்கள். இவர்களைவிடச் சிறந்தவர்கள் முற்றும் தொழாமலிருப்பதை விட உடல்மட்டுமாவது தொழுவது நல்லதென நினைத்துத் தொழுகையை விடமாட்டார்கள். ஆனால் ஷைத்தானுக்கு எதிராக உள்ளத்தையும் தொழுகையில் ஈடுபடுத்துபவர்கள் உத்தமர்கள்.

எனவே, குற்றம் புரிந்துவிட்டால் உடனே அதற்கான பரிகாரத்தைச் செய்துவிட வேண்டும். பிறருக்குத் தீங்கிழைத்துவிட்டால் உடனே அவர்களிடம் மன்னிப்புப் பெறவேண்டும். தீமைக்குப் பிராயச் சித்தமாக நன்மையைச் செய்யவேண்டும், உடனுக்குடன் இறைவனிடம் மன்னிப்புக் கோரி, குற்றமற்றவனாக மரணமடைய எப்போதும் மனிதன் தன்னைத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

அ. அப்துற் ரஹீம்

வெளிவந்துவிட்டது!

வழுக்கலில்

ஊன்று கோல்

அப்துற்-ரஹீம்

மனிதனின் வாழ்வுப் பாதை மலர் வழியல்ல. வழுக்குமிடமும் சறுக்குமிடமுமுள்ள பயங்கரப் பாதையது. துன்பமும் துயரமும் குறுக்கிடும் வழியது. எனவே அப்பாதையில் நடந்து செல்ல தைரியம் வேண்டும்; தன்னம்பிக்கை வேண்டும்; உறுதி வேண்டும்; வழுக்கலையும் சறுக்கலையும் சமாளித்துத் தடைகளையும் வென்று வாழ்வுப் பாதையில் நடைபோட வேண்டும். அவற்றிற்கெல்லாம் உறு துணையாய் இருப்பது கையிலிருக்கும் ஊன்றுகோல். இந்நூலும் அத்தகைய ஊன்று கோல்தான்.

விலை ரூ. 1—12—0 வி. பி. தபால் செலவு தனி

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்,

155-156, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை-1

தாயகக் கவிதையில்

நாயகத் திருமேனி

தொகுத்தவர்:

பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ.

அனைத்துலகுக்குமோர் அருட்கொடையாகத் தோன்றிய அண்ணல் முகம்மது நபி (ஸல்) அவர்களின் திருப்பெயர், நானில மக்களின் செவிகளுக்குத் தேன் பாய்ச்சும் செவ்வியினையுடையது; உள்ளொளி பெருக்கி உயர்வினைக் கொடுக்கும் இயல்பினையுடையது.

முஸ்லிம்கள் வாழும் மூலை முடுக்குகள் முதற்கொண்டு மாநகர்கள் ஈறாக இதயத்தின் இன்பகீதமாக எழுகின்ற அப்பெயர் நாளொன்றுக்கு ஐவேளை நானிலத்தை வலம் வருகின்றது. முஸ்லிம்கள் பேசும் உலக மொழிகளனைத்திலும் பெருமானாரவர்களின் சீரிய புகழும் சிறந்த வாழ்வும் சித்திரிக்கப்பட்டுள்ளன. கவி பாடிக் கன்னித் தமிழ் வளர்த்துச் செவிநாடும் புகழ் பெற்ற செந்தமிழ் நாட்டின் சொல்லேருழவர்கள், புவி நாடும் புனிதத் திருமேனியைப் பொருத்தமுறப் போற்றியுள்ளனர். இந்நாட்டு மண்ணிலே பிறந்து வளர்ந்த இஸ்லாமியப் பெரும் புலவர்கள் சூட்டிய சொன்மாலைகள் வாடாத நன்மாலைகளாக இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. காலத்தின் கோலத்தால் மாறுமல், ஞாலத்தார் நாள்தோறும் நினைவு கூரத்தகுந்த அப்பைந்தமிழ்ப் பாமாலைகள் சில இதோ தொகுத்துத் தரப்பட்டுள்ளன:

1) செங்கதிர்பரப்பி யுலகெலாம் விளக்கித், திரிதினகரனும்
[வெண்ணமுதந்
தங்கியகிரணச் சசியுமந்தரத்திற் றவழ்தருமுடுக்குல மனைத்தும்
பொங்கொளி யெவையுஞ் சுவனநாடனைத்தும் பூதலம்விசும்பு
[மற்றனவு
மிங்கெழின் முகம்ம தொளிவினிலென்று விவர்க்கெவையுவமை
[சொல்லுவதே.

(சீரு : உமறுப்புலர்)

2) நீதிநூன்மறையின் முறைவழி நடாத்து நிருமலப் புனிதரை
[யிலங்குஞ்
சோதியையனந்த ஞானரைக்குன்றிற் றோன்றிய சுடரெனச்
[சிறந்த,

மீர்தவக்குன்றை வேதநாயகன்மீர் மறைவளம் பழுத்த நாவேந்தை,
ஆதிநூன்முடிவி னின்றமெய்ப்பொருளை யகுமதை
[யென்றுகாண்குவனே

(முதுமொழி மாலை : உமறுப்புலவர்.)

3) ஆண்பிள்ளை ஆலகபிபிள்ளை யாதியருள் பெருகும்
தேன்பிள்ளை யூறுஞ் சிவப்பிள்ளை யாதி தெரிசித்திடும்
வான்பிள்ளை முத்து மிஃராஜுப்பிள்ளை மனதுக்குள்ளே
கோன்பிள்ளை யார்க்குங் குருப்பிள்ளை யானமுகம்மதுவே.

(ஞானப்புகழ்ச்சி : பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லா)

4) எப்புவி யினிலு மிருந்தர சியற்று
மேகபூ ரணவரோ தயத்தை
யற்புதவடிவை ஞான லோசனத்தை
யளவிலா னந்தவா ருதியை
யொப்பகன் றகண்ட வெளியில்வா மொளியை
யுள்ளிரு ளகற்றுசெஞ் சுடரை
மைப்புயற் கவிகை நபிகணு யகத்தை
வாழ்த்தல்செய் வாய்களே வாய்கள்.

(இராஜ நாயகம் : வண்ணக்களஞ்சியப் புலவர்)

5) பூவுலவு வாசம் பொருந்தியபோ லெவ்வுயிர்க்கும்
பாவுலவு மாதி பராபரன்முன் னன்மணியாய்
மேவுலவ் யெல்லா மிகவாக வந்துதித்த
மூவுலகுங் காக்கு முகம்மதுற்ற சூல்நபியே.

(இன்னிசை: செய்கப்துல் காதிர் நயினர் லெப்பை ஆலிம் புலவர்)

6) அதுனன் கிளையி லாகிய வொளியே
விதிர்தரு மணியே கதிர்புரி யணியே
வினையருந் தருவே நனையிருந் தருவே
கருத்தொழுங் குருவே திருத்தெழுங் குருவே
சோதிமா திவமே நீதிமா தவமே
மதிபணி திருவே விதியணி கருவே.

(மக்காக் கலம்பகம் : செய்கப்துல் காதிர் நயினர் லெப்பை ஆலிம்
புலவர்)

7) சிகராழி யன்றிருத் தேரோ னெழுந்த செழுங்கிரிபோற்
பகராழி மேவு தவிசா சனத்தின் பயின்றமிசை
நகராழி பேசக் கலிமாக் குபேர னவில விண்டோர்
மகராழி சூழ்புவி வேந்தே முகம்மது மாணிக்கமே.

(மாணிக்கமாலை : செய்யிது முகியித்தீன் கவிராசர்)

8) வெற்பூரு மற்புயமும் பொன்னடியுங் காணேனே
பொற்பூர் மிகாம்புயமும் பொன்னடியுங் காணேனே
அற்பூரு மின்சொன்மறை யாரமிர்தச் செவ்வாயிற்
கற்பூர வாடைகமழ் காசிமுஸ்த பாநபியே.

(இன்னிசை : காசிம் புலவர்)

9) காலும் புவனமு நீருங் கனலியும் வானுந் திரிதரு பசுபர்ச்
காயந் தனைநிலை யாமென் றுறுபவ சாரந் தருமனு பவமாயை
சாலும் படியிபு லீசன் கலைவிடை தானின் றெரிநர குழலாதே
சாரங் கனிகலி மாவிண் டுமதிரு தாள்வந் தடையவு
[மருள்வீரே
நாலும் பருமறை நாலும் புவிபதி னாலும் பரவிய மகுமூதே
நாளுந் துணைமகு பூவென் றுருதிரு நாயன் றனியருள்
[பெறுதூதே.
யாலும் பறவைவி ணூரும் கதிர்மதி யாரும் பிரவலம் வருகாபர
வாளுந் திறலப்துல் லாதந் திடமக வாய்வந் தருணபி
[பிறசூலே.
(திருப்புகழ் : காசிம் புலவர்)

10) பாவ நிலமே வெட்டி ஞான பயிரே நட்ட பாவ லர்கடா டொட்டு
[வரைகாணுப்
பாரவறிவே பெற்று நேம முறையா திக்க பாவ கமுரு மட்டை
[பருள்வீடு
காவ லுடனே புக்க நீதி நேறியெ சொற்ற காரணமகா சித்தி
[பகலாத
காவடியதே பற்றி யேத மறவே பத்தி கால வினிதே வெற்றி
[தருவீரே
தேவ வருளே பெற்ற வேத நபிமார் சுற்று தேவ தருவே பச்சை
[மயிலோரே
தேக மிசைகா தத்தினை மணமே மொய்த்த தேக
[மழியாநிட்டை யுடையோரே
ஏவ லினிதே தொட்டு பாவ நினைவே விட்ட வேறு தலுளார் சட்ட
[நெறிதேறு
மேர நபிமா மக்கள் சோப னமரு மக்க மேர்ப ரிதிபோ
[லுற்ற விறசூலே.
(சந்தத் திருப்புகழ் : அப்துல் காதிறுப் புலவர்.)

11) வெங்குபிரியன் மங்கிடத் தீன்பயிர் மேன்மையாக விளைத் திசுலா
நெறி,
பொங்கிடத் துனியால மடங்கலும் பொற்பிற் செய்தபுனித
முகம்மதே
யுங்கண்சீர்பத மெங்கள் பவந்தனை யோட்டிப் பொன்னுலகத்திற்
[புகுத்தியே,
சங்கைநல் குந்தருமஷபாஅத்தின் சல்லல்லாகு அலைகிவசல்லமே.
(சலவாத்துச் சதகம்: மீரு னயினார்ப் புலவர்.)

12) அந்தரக் கவனர் பூவிட் டைம்பொறி யடைக்கி வைகுங்
கந்தரத் தவரு நுந்தங் கருணைதாங் கிலரே லீற்றி
ஞெந்தற வுழல்வ ரன்றிக் கதியெய்தி நுகராரின்ப
நந்தரத் தேரிமக்கா முகம்மது நபியுல்லாவே,
(முனாஜாத்து : சைனுத்தீன் புலவர்)

13) அமலிற் சிறந்த அபூபக்கரி னடியி லரவங் கடித்தவிடம்
தமது கரத்தாற் சலவாத்தைச் சாற்றி நீச்கும் பார்த்திபரே
விமல நிதியே கண்மணியே வினவு மடியேன் முகம் பார்த்துக்
கமலப் பதந்தந் தருள் புரியும் ஹாமீ முகம்ம துறசூலே
(முனாஜாத்து : ஷாகுல் ஹமீதுப் புலவர்.)

14) கோதிலா வறிவு கூறிடு நபியே
காதமெய் மணந்தான் கமழ்ந்திடுநபியே
எத்திம்கள் நபியே யாறசூல் நபியே
முஸ்தபா நபியே முகம்மது நபியே
சித்தர்கள் நபியே ஜெயம்வளர் நபியே
கத்தீபு நபியே நாசிம் நங்நபியே

(குறமாது : மீரான் கனி யண்ணாவி)

15) கண்ணுக் கடங்கா தொளிர்முத்தைக் கனமாய்க் குயிற்றி [மாற்றுயர்ந்த
கனகமிழைத்த தூணிறுத்திக் கதிர்கொள் விட்ட மதிற் சேர்த்து
விண்ணின் மதிநேர் துகிலதனால் விந்தை பெறவே தொட்டில் [கட்டி
விழிக ளிமையாப் பெண்களொடு மேன்மை யமரர் பரவிநிற்கத்
தண்ணார் மணியே நன்மணியே தவத்தோ ரிதயத்துறுமணியே
தரும நாளுந் துதித் திறைஞ்சுந் தகமைக் கடலே தூங்கிவிழி
நண்ணி யரசர் வணங்குகின்ற நாதா தாலோ தாலேலோ
நயினார் முகம்மதிறசூலே நபியே தாலோ தாலேலோ,

(றசூல் நாயகப் பிள்ளைத் தமிழ் ; மீரான் சாகிப் புலவர்)

16) மதிக்கத்தரு மருள் வாழற பாதிய மாண்டவுத்த
மதிக்கத்தரு வமையில்லாதவேதத்தர் வாயினிக்கு
மதிக்கத்தரு நிகர்சொல்லி கையண்ணன் மதினத்தினர்
மதிக்கத்தரு ணற்குமேலா மொளியர் மலர்ப்பதமே.

(திரு மதீனத்து யமகவந்தாதி : பிச்சை யிபுறாகீம் புலவர்)

17) அருளே வடிவா யமைந்த மதினத்தீர்
தெருளே பெறவடியார் செப்பும்—பொருள் சேர்
பனுவலறி தோறும் பரிந்தழுத லன்றோ
மனுவாய்ப் பிறந்தார்க்கு வாழ்வு.

(திருமதீனத்து வெண்பாவந்தாதி : பிச்சை யிபுறாகீம் புலவர்)

18) வாயிருக்கப் புகழ்ந்தேத்த மனமிருக்க நினைந்துருக
மேயிருக்க நிதம்பணிய வீணாளே கழிக்கிற்பேன்
றுயிருக்குந் தகைத் தென்னத் தகைமதின வேந்தீரென்
பேயிருக்குமெனை முருக்கிற் பெரும்பதம்பெற்றுய்வேனே.

(திருமதீனப் பதிற்றுப் பத்தந்தாதி : பிச்சை யிபுறாகீம் புலவர்)

19) கடையுக மதிலொரு நாதர்நீர்
கருணைகொ ணெறியுடை வேதர்நீர்
மிடைதரு மறிவிலர் சூதர்நீர்
விதியினர் புகழ்மகு மூதர்நீர்!

(திருமதீனக் கலம்பகம் : பிச்சை யிபுறாகீம் புலவர்)

20) மலராவன கமழ்பொய்கையுஞ் சோலைவளமுமென்றும்
புலராவன மக்க நாயகர் பாதத்தைப் போற்றுதற்கு
வலராவன நன்கலைத்துங் கொள்வாரிழிமாக்கள் சொலும்
அலராவன வவர்க்கென் செய்யுமாட்சி யடங்கலுமே.

(திருமக்காத் திரிபந்தாதி : குலாம் காதிறு நாவலர்)

21) கல்லா லெறிந்திருகாற் காயமுறக் கண்டகொடும்
பொல்லாப் புலையருக்கும் புத்திவரக் கையேந்தி
அல்லாத் திருச்சமுகத் தானதுஆக் கேட்டுவந்த
நல்லா ருமைப்போலும் நானிலத்தி லுண்டேயோ
நாதநபி நாயகமே நானிலத்தி லுண்டேயோ!

(நபிகள் நாயக மஞ்சரி : கா. ப. சேகு தம்பிப் பாவலர்)

22) தேமலரே! காமலரே! தேற்றவரு மாமலரே!
தூமலரே நறுமலரே! தூதுரைத்த நாயகமே!
சீமானே! கோமானே! சிந்தையொளிர் பூமானே!
ஈமானுக் குறுதிதரும் எம்மானே நாயகமே!

(நாயகமே! : கா. அப்துல் கபூர்)

"பிராண மித்ரா"

நீத்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, துரித ஸ்கலிதம். ஸ்திரீகளை மனத்தில் நினைத்தவுடனே தொட்டவுடனே இந்திரியம் வெளியாதல், நபுஞ்சகம், இந்திரிய ஒழுக்கு, சொப்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, தேகம் மெலிதல், நடுக்கம், வீரிய மின்மை முதலிய ராஜ உறுப்புக்கள் சம்பந்தமான சகலமும் நீங்கி, பீமன் பலம் பெற நிகரற்ற காயகல்பமாகும். 'பிராண மித்ரா சாப்பிடும் காலத்தில் 'மதன் லேபம்' ஆண்குறி வளர்ச்சிக்குக் குறியின் மேல் தினமும் பூசிக்கொண்டு வரவும். பத்தியமில்லை. பூரண குணத்திற்கு 2 டின் "பிராண மித்ரா" அவசியம் சாப்பிடவும். 1 டின் விலை ரூ 6—0—0. (20 நாள் மருந்து)

வி. பி. ஆர்டர்களுக்கு ரூ 5 முன்பணம் அனுப்ப வேண்டும்.

இலங்கை அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா 1 ஜீவமித்ரா, 1 மதனலேபம் மூன்று மருந்துகளின் விலை ரூ 18-75 சதம். இலங்கை தபாற் செலவு ரூ 2-50 சதம். இலங்கை சுங்கத் தீர்வை ரூ 4-57 சதம். மலாய் அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, ஒரு ஜீவ மித்ரா, ஒரு மதன லேபம் ஆகிய மூன்று மருந்துகளின் விலை ரூ 18-12-0, மலாய் நாட்டிற்கு தபால் செலவு ரூ 6-0-0.

முக்கிய கவனிப்பு ;-மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்தின் கிரயத்தையும் தபால் செலவையும் சேர்த்து ஏர்மெயில் மணியாடர் மூலம் அல்லது 37 ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வரங்ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். முன்பணம் இல்லாமல் மருந்துகளை அனுப்ப முடியாது.

மலாய் நாட்டிலுள்ளவர்கள் எமது பதிலைக் கோருபவர்கள் 1 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும். 'பெண் இன்பம்' என்னும் விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

டாக்டர் கே. கே. ராமன், (ரிஜிஸ்டர்டு).
கேரள வைத்தியசாலை (மு. 10).
தபால் பெட்டி நெ. 473, வேப்பேரி, சென்னை-7.

பக்தியும் பகுத்தறிவும்

இ. ஜி. முஹ்யித்தீன்

ஹஜரத் இபுராஹீம் நபி (அலை) அவர்கள் தமது சமுதாயத்தினிடம் ஏக தெய்வக் கொள்கையைப் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்கள். அதற்காக

"இவரை வெட்டி விடுங்கள்; அல்லது நெருப்பில் தள்ளி எரித்து விடுங்கள்" என்று கூறுவதைத் தவிர (வேறு) விவாத பூர்வமாகப் பதில் கூற அந்த மக்களால் முடியாது போயிற்று. எனவே, அவரை (இபுராஹீம் நபி அவர்களை) நெருப்பிலிருந்து அல்லாஹ் இரட்சித்துக் கொண்டான். நன்னம்பிக்கையுடையவர்களுக்கு இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன" (அல்குர்ஆன். 29: 24)

இந்தத் திருகுர்ஆன் வாக்கியத்துக்கு விரிவுரையாக, ஹஜரத் ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இபுனல் அரபி (ரலி) அவர்கள் தமது "புஸூஸல் ஹி(க்)கம்" என்ற புகழ் பெற்ற நூலில், தரும் விபரங்களைத் தழுவி இக்கட்டுரை வரையப்படுகின்றது.

ஹஜரத் இபுராஹீம் நபி (அலை) அவர்களை நெருப்புக் கிடங்கில் உயிருடன் தள்ளி விடுவதென்று, அவர்களுடைய 'கௌம்'கள் (அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட கூட்டத்தினர்) முடிவு செய்து விட்டனர். இந்த முடிவை எதிர்ப்பவரோ, ஆட்சேபிப்பவரோ அந்தக் கூட்டத்தாரிலேயே யாருமில்லை. எனவே, அஃதொரு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்ட—மாற்றப்பட முடியாத—தீர்ப்பாகவே அமைந்து விட்டது.

அவ்வாறு உயிருடன் நெருப்புக் குண்டத்தில் தள்ளப்படுவதற்கு ஹஜரத் இபுராஹீம் நபியவர்கள் செய்த "குற்றங்கள்" இரண்டாகும்: தங்கள் ஜாதியாரால் வணங்கப்பட்டு வந்த எந்தவிக்கிரகத்தையும், "துலில்" என்றழைக்கப்பட்டு வந்த பிரதம விக்கிரகத்தையும் தமது "நாயகனாக" ஏற்றுக் கொள்ள அவர்கள் மறுத்தது முதல் "குற்றம்". எல்லாம்வல்ல அல்லாஹ்வே தமது ஏகநாயனென்று "பிடிவாதமாக" சாதித்தது இரண்டாவது "குற்றம்". இந்தத் "தெய்வ நிந்தனைக் குற்றங்க"ளுக்காகத்தான் இந்தக் கடுமையான தண்டனை!

ஆதலின், ஹஜரத் இபுராஹீம் (அலை) அவர்களை உயிரோடு எரிப்பதற்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட நெருப்புக் குண்டத்தில் விறகுகள் கொண்டுவந்து நிரப்புவது ஒரு "புண்ணிய" காரியமென்று அந்த நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பறை சாற்றப்பட்டது! ஏன், துரிதமா

த்தீப்பிடிக்க விறகுகள் மேல் நெய்யூற்றி "உதவு"வது அதை விடப் பெரிய "புண்ணிய கைங்கரிய" மெனவும் தண்டோரா போடப்பட்டது!

"இந்தப் புண்ணியத் தன்மை வாய்ந்த மகோற்சவத்"தில் எல்லா மக்களும் கலந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பத்துடன் "பக்தர்கள்" ஊருராய், தெருத் தெருவாய், ஏன், விடு வீடாய், இவ்வுத்சவம் நடக்கப்போகும் தேதி, மணி, நிமிடம் ஆகிய விபரங்களைப் பற்றிச் சளைக்காமல் பிரசாரம் செய்தனர்.

எனவே, ஆடவர்கள் ஒட்டகங்களிலும், கோவேறு கழுதைகளிலும் விறகுகளை ஏற்றிக்கொண்டு வந்து இராப் பகலாய் நெருப்புக் குண்டத்தை நிரப்பிக் கொண்டிருந்தனர். பெண்டிரோ தங்கள் மென்மையான கரங்களில் நெய் நிரம்பிய கிண்ணங்களை ஏந்திய வண்ணம் மைல் கணக்காக நடந்து வந்து விறகுகளை நெய்யால் நனைத்து மகிழ்ந்தனர். "தெய்வ நிந்தனைக்குற்ற"ங்கள் இழைத்த ஒருவரை உயிரோடு தியில் தகனம் செய்யும் திரு விழாவைப் பார்க்க, நாட்டின் பல திசைகளிலிருந்தும் 'பக்த கோடிகள்' ஆயிரக் கணக்கில் வந்து கூடிய வண்ணமிருந்தனர்.

போதுமென்ற அளவுக்குக் குண்டத்தில் விறகுகள் குவிக்கப்பட்டு விட்டன. நெய்யும் பஞ்சமின்றி ஊற்றி முடிந்தது. விடிந்தால் தீ மூட்டுந் "திருநாள்!"

அருணனுக்கு இடப்பட்ட கட்டளையில் எந்த மாறுதலுமில்லை. எனவே, தயங்கித் தயங்கி, உதய மானுன் ஆதித்தன். மேகக் கூட்டங்கள் எதிர்பார்த்தபடி, அவைகளுக்கும் எந்தப் புது உத்திரவும் அளிக்கப்படவில்லை.

தீ மூட்டும் வைபவத்துக்கென்று "தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்யடியார்கள்" குளித்து முழுகித் தூய உடையணிந்து கையில் தீவட்டியுடன் தீ மூட்டும் நேரத்தை எதிர் பார்த்தவர்களாய் நெருப்புக் குண்டத்தைச் சுற்றித் தயாராயிருந்தனர்.

ஹஜரத் இபுராஹீம் நபி (அலை) யவர்களை, அவ்வைபவத்துக்கென்றே நன்கு அலங்கரிக்கப் பட்ட ஒரு தொட்டிலில், எல்லா பக்த கோடிகளும் நன்கு தரிசிக்கும் வண்ணம், உட்கார வைத்தனர்.

குறிப்பிடப்பட்ட நேரத்தில் பஜனை கோஷத்துடன் குண்டத்தைச் சுற்றிலும் தீ மூட்டப்பட்டது. பயங்கர ஜுவாலையுடன் தீ பிடித்து எரிந்தது. நெருப்புக் குண்டத்துக்கு நேரே உயரப் பறக்க நேர்ந்த துர்ப்பாக்கியப் பறவையினங்கள் சூடு தாங்கவியலாமல் நெருப்புக் குண்டத்தில் துடி துடித்து விழுந்து மடிந்த கோரக் காட்சி, அஃது எத்துணைப் பெரிய கொடிய அனல் வீசும் நெருப்புக் குண்டம் என்பதைச் சற்றே விளக்கிற்று! அது மட்டுமன்று; எல்லாம் வல்ல ஏக நாயனை அல்லாஹ்வின் பொறுக்கி எடுக்கப் பட்ட பக்தர்களில் ஒருவரும், விக்கிரக ஆராதனைச் செப்பவர்களையும் மன்னித்தருளும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தித்த (அல் குர்ஆன், 14 : 36) கருணை வள்ளலுமான ஹஜரத் இபுராஹீம் நபி (அலை) அவர்கள் எறியப்பட விருந்த அந்நெருப்புக் கிடங்கில் 'நாங்கள் விழுந்து மடிந்தேனும் தியை அணைத்துப் பார்ப்போம்' என்று சபதம் செய்து கொண்டே அப்பறவையினங்கள் குண்டத்தில் விழுந்திருக்க வேண்டும்!

ஈடு இணையில்லாத மிருகத் தனத்துக்கோர் எடுத்துக் காட்டான இக்கொடிய நிகழ்ச்சியின் உச்சமான அரக்கநிலை ஒன்றிருந்தது: அக்கொடிய பயங்கர நெருப்புக் கிடங்கைச் சூழ்ந்திருந்த இலட்சக் கணக்கான விக்கிர பக்தர்களில் யார் மனத்திலும், ஹஜரத் இபுராஹீம் நபியவர்களுக்காக, இரக்கமென்ற ஈரம் ஒரு சிறிதும்

கரியவில்லை! அப்பயங்கரத் தீ அங்கே குழுமியிருந்த மக்கட் கூட்டத்தினரின் மனத்திலிருந்து இரக்கமென்ற ஈரத்தை முதலில் தீய்த்திருக்க வேண்டும்!

எனவே, இபுராஹீம் நபி (அலை) அவர்கள் நெருப்பில் தள்ளப்பட இன்னும் சிறிது நேரமே இருந்தது. அப்போது பகுத்தறிவு பேசிற்று:

"இபுராஹீமே! வேடிக்கைப் பார்ப்பவர்களில் நீரும் ஒருவரா? உம்மையன்றோ நெருப்பில் தள்ளப் போகின்றனர்! நெருப்பின் தன்மையே தெரியாத-ஓடும் பாம்பை எட்டிப் பிடிக்கும்—பச்சிளங் குழவியே போல் கவலையற்று வீற்றிருக்கிறீரே! ஆயிரமாயிரமடிகளுக்கு அப்பாற் பறக்கும் பறவையினங்கள் இக்கொடிய தீயின் சூடு தாங்கமாட்டாது சுழன்று துடித்து விழுவதை நீர் பார்க்கவில்லையா? அப்படிப்பட்ட இந்த நெருப்புக் கிடங்கில் உம்மைத் தூக்கி வாரிப் போட்டால், உமது கதி என்னவாகும்? ஒரு யோசனை சொல்கிறேன், கேளும்: உமது ஏகதெய்வக் கொள்கையை மனத்திலேயே அழுத்தமாக வைத்துக் கொள்ளும்; மனத்தில் சிறிதுகூட எண்ணாமல், உமது கூட்டத்தார் வணங்கும் "துலில்" என்ற பிரதம விக்கிரகத்தை மட்டில் உமது "நாயனென்று" வாயால் மட்டும் சொல்லிவிடும். அப்போதுதான் நீர் இப்பேராபத்திலிருந்து தப்புவீர். இப்படி வாயால் மட்டில் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை! இணை வைத்தலும் அறவேயில்லை! ஏனெனில், உமது நாயனான அல்லாஹ் இருதயத்திலுள்ளதையே அதிகம் பார்க்கிறான். உமது உள்ளத்தில் அவன் மீதுள்ள பக்தியை அவன் நன்கறிவான். ஆதலின், மனத்தில் நம்பிக்கையில்லாமல், வாயால் மட்டும் வேறொன்றைத் தெய்வமென்று—அதிலும், ஆபத்து நேரத்தில் — கூறிவிட்டதற்காக உமதிறைவன் உம்மைக் குற்றவாளியாக்க மாட்டான்! சீக்கிரம் எழுந்திரும். உரக்கக் கூறிவிடும், வாயால், 'துலில் என் நாயன் தான்' என்று".

ஹஜரத் இபுராஹீம் (அலை) அவர்களின் (உண்மையான ஏக தெய்வ) பக்தி பகுத்தறிவுக்குப் பதில் கூறிற்று:

"பகுத்தறிவே! இது என்ன பேச்சு! ஏக நாயனாகிய அல்லாஹ்வையும், 'துலில்' என்ற விக்கிரகத்தையும் பற்றிய விஷயம் பிறகு இருக்கட்டும். சாதாரணமான காரியத்தில்கூட மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு. வாயால் மற்றொன்றைக் கூறுவது ஒரு முஸ்லிம் (ஆண்டவனுக்கு முற்றும் கட்டுப்பட்டு நடப்பவன்) செய்யக்கூடாத காரியம். மனத்திலுள்ளதையே வாய் பேச வேண்டும். அல்லாஹ்வின் ஏகத்துவக் கடலில் மூழ்கி விளையாடும் பக்தர்களின் செயல் உனக்குப் புரியாது. உனக்குப் புரியாத காரியங்கள் நடக்கும் போதுதான், நீ அதிகப் பிரசங்கியாகி விடுகின்றாய்! உன் யோசனை எனக்குத் தேவையில்லை!"

இதைக் கேட்ட பகுத்தறிவுக்குக் கோபம் வந்து விட்டது! எனவே, மீண்டும் அது பேசிற்று: "இபுராஹீமே, மூட நம்பிக்கைக்குப் "பக்தி" யென்று, தெரியாத உலகம் பெயர் வைத்து விட்டது! அந்த மூடநம்பிக்கையான "பக்தி" வயப்பட்ட நீர் அநியாயமாகச் சாம்பலாய்ப் போகப் போகிறீர். நெருப்பின் தன்மையையாவது சிறிது எண்ணிப் பாரும். அதில் உம்மைத் தூக்கி வாரிப்போட்டால் நீர் என்ன ஆவீர், என்பதைச் சிறிதே சிந்தித்துப் பாரும்!"

பக்தி நிதானமாக, "எனதிறைவனின் திருவுளப் பொருத்தமே எனது பாக்கியமாகும். அதைத் தவிர வேறெந்த சிந்தனைக்கும் என் மனத்தில் இடமேயில்லை. எனவே, நீ வாளாவிருப்பது சாலவும் நன்று. ஏனெனில், இஃதுனக்கு அறவே புரியாத விஷயம்!" என்று பதிலுரைத்தது.

பகுத்தறிவைப் பார்த்து, "இஃது உனக்கு அறவே புரியாத விஷயம்" என்று கூறினால், அதன் கோபம் அதிகமாவதற்கு யாரைக் கேட்க வேண்டும்? எனவே படபடப்புடன் பேசியது பகுத்தறிவு. "இபுராஹீமே! கண்ணுக்கெதிரே ஜுவாலை விட்டெரியும் கடுந்தீயைப் பார்த்துங்கூட, அதன் கொடிய தன்மையைப் புரிந்து கொள்ள நீர் மறுக்கும்போது, மூடநம்பிக்கையான உமது பக்தியின் போதை எத்துணைக் கடுமையானதென்பது புலனாகிறது. நெருப்பின் ஜுவாலை உமது பக்தியால் ஒரு சிறிதும் தணியப் போவதில்லை. அதன் இயற்கையான அதிகாரத்தை அது செய்தே தீரும். உமது பக்திப் போதை தீயின் கனலில் கருகும்போது, உமக்கு ஒரு சமயம் உணர்வு வரலாம். ஆனால் அதற்கு முன்பே நீர் சாம்பலோடு சாம்பலாய்ச் சமைந்து விடுவீர் என்பது திண்ணம்......"

இபுராஹீம் நபி, இடைமறித்து, "போதும் நிறுத்து! உடம்பின் துடிப்பிலிருந்து பலம் பெறும் நீ, நிச்சயமாக இபுலீசுக்கு அடிமையாகவே இருக்கின்றாய். உன்னைத் தூண்டிவிட்டே ஷைத்தான் ஓய்வு பெறுகிறான். உனது கர்வம் மண்டைக் கேறியவர்களை நிச்சயமாக, அல்லாஹ் நேசிப்பதில்லை. பணிவென்பது இயற்கையிலேயே இல்லாத உன்னை நானும் வெறுக்கிறேன். எனினும், சற்று கவனமாய்க் கேள்: நெருப்பின் தன்மையைப் பற்றியல்லவா நீ என்னைப் பயமுறுத்துகிறாய்? அந்த நெருப்புக்கென்று எந்த ஒரு தனி அதிகாரமும் இல்லை. சகல பொருள்களின் மீதும் ஆற்றலுடையவனும், எல்லாப் பொருள்களின் 'தன்மை'களையும், அவைகளின் இயற்கையான 'அதிகாரங்களை'யும் தன் இஷ்டப்படி கூட்டவும், குறைக்கவும், மாற்றவும், அறவேயில்லாதபடி அழிக்கவும் ஆற்றல் பெற்றவனே எனது நாயன். காரியத்தை வெளிப்படையாகச் செய்து காட்டினால்கூட ஒப்புக் கொள்ள மறுக்கும் விடாகண்டனை உன்னை விவாதித்து ஒப்புக் கொள்ள வைப்பது மிகக் கடினம். நன்னம்பிக்கையால் ஏற்படும் உறுதியின் வைரத்தன்மை, சத்திய நெறி வழுவாத நடவடிக்கையால் சமையும் மனத்தெளிவின் சாந்தி நிலை ஆகிய இரண்டும் ஒருங்கே சேர்ந்தமைந்த மகான்கள் செய்யும் காரியங்கள் எப்போதும் உனக்குப் புதிராகவே இருந்து வந்திருக்கின்றன. இறுதி நாள்வரை அவை உனக்குப் புதிராகவே இருந்து வரும். எனவே, முடிவாகக் கூறுகிறேன்: உனக்கிது அறவே புரியாத விஷயம்' என்று கூறி முடித்தார்கள்.

அவ்வளவுதான்! ஹஜரத் இபுராஹீம் நபியவர்கள் அப்படியே தொட்டிலுடன் நெருப்புக் குண்டத்தில் தூக்கி வாரியெறியப்பட்டார்கள்.

ஆனால், அதோ! "குல்னா யா நாரு கூனீபர்த(ன்)வ் வஸலாமன் அலா இப்ராஹீம்" ("இபுராஹீமுக்குச் சுகந்தரக் கூடிய வகையில், நெருப்பே! நீ குளிர்ந்து போகக் கடவாய்! என்று நாம்

குழந்தைச் செல்வம்

எனது நண்பரும் பொதுநலப் பிரியருமான ஆயப்பாடி ஜனாப், என். எம். முகையித்தீன் அவர்கள் 30—9—50 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தந்தையானார் என்ற செய்தி கேட்டுப் பெருமகிழ்வெய்துகிறேன்.

தாயும், சேயும், தந்தையும் நீடூழி வாழப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பன்
ஜே. எம். எ. ரஹீம்
சுங்கைப் பட்டாணி,
கிட்டா, மலேயா.

தினமும் ஐந்து வேளைகள் தொழுது, ரமலானில் நோன்பு நோற்று, கணவனுக்கு அடிபணிந்து நடக்கும் ஒரு கற்புடைய பெண்ணிடம் 'நீ விரும்பும் எந்த வாயில் வழியாகவும் சுவர்க்கத்துள் நுழையலாம்' என்று கூறுங்கள்.

—நபிகள் நாயகம்

ஆணையிட்டோம்'' —அல்குர்ஆன். 21 : 69) என்று தெய்வக் சட்டளை பிறந்தது.

வருணனைக்கப்பாற்பட்ட குளுமை நிறைந்த அழகிய பூங்காவாய் மாறிவிட்டது நெருப்புக் குண்டம்! இபுராஹீம் கலீலுல்லாஹ் அவர்கள் நிம்மதியாகத் தொட்டிலாடிக் கொண்டிருந்தார்கள் பூங்காவின் மத்தியில்! பார்த்து இன்புறக் கூடிய காட்சிதான் அது. ஆனால் ஆங்குக் கூடியிருந்த மக்கட் கூட்டம் எதிர்பார்த்த காட்சி முற்றிலும் வேறு!

இலட்சக்கணக்காக அங்குக்கூடியிருந்த மக்களின் ஆச்சரியத்தையெல்லாம் ஒன்றுச் சேர்த்துப் பார்த்தாலும் பாவம். ஏழைப் பகுத்தறிவின் வியப்புக்கு ஈடாகாது! கண்களைக் கசக்கிப் பார்த்தது, தலையைச் சொறிந்து சொறிந்து நிதானத்தைப் பெற முயன்றது பகுத்தறிவு! ஏனெனில் ''இது என்ன விந்தை! ஏன் நெருப்பு இபுராஹீமைச் சுடவில்லை? நெருப்பின் 'தன்மை' என்னவாயிற்று?'' என்ற வியப்பு பகுத்தறிவின் நிதானத்தையே தடுமாறச் செய்து விட்டது!

அன்று நின்றது பகுத்தறிவு நெருப்புக் குண்டத்தின் ஓரத்திலே குழம்பிய மூளையுடன், பக்தி காரியத்தில் செய்துகாட்டிய விசித்திர மாறுதலின் புதிரைப் புரிந்து கொள்ள முடியாமல்! ஆச்சரியத்தில் ஆழ்ந்த பகுத்தறிவு, அன்று மூக்கின் மேல் வியப்புக் குறியாக வைத்த விரலை இன்றுவரை எடுக்கவேயில்லை; நெருப்புக் குண்டத்தை விட்டு அசையவுமில்லை! இடையிடையே பக்தியை ''மூட நம்பிக்கை'' யென்று திட்டிக் கொண்டும்—ஏனெனில் திட்டுவதில் அதற்கு ஒரு திருப்தி—அதே சமயத்தில் இந்தப் புதிரைப் புரிந்து கொள்வான் வேண்டித் தலையைச் சொறிந்து கொண்டும் இன்றுவரை அங்கேயே நின்ற வண்ணமிருக்கிறது! ஏன், அஃது உலக இறுதி நாள் வரை அந்த நெருப்புக் குண்டத்தை விட்டு அசையப் போவதில்லை! ஏனெனில் தோல்வியை ஒப்புக்கொள்வதென்பது பகுத்தறிவின் இயற்கையிலே இல்லை!

ஆசிரியர் வரலாறு

சய்யிதினா முஹ்யித்தீன் இபுனல் அரபி யவர்கள் ஸ்பெயின் தேசத்தில் முர்ஸியா எனும் ஊரில் ஹிஜ்ரி 560ல் பிறந்தார்கள் (கி. பி. 1165, ஜூலை 29). புஸூஸல் ஹிக்கம் என்ற நூலை 1230ல் எழுதி முடித்தார்கள். ''புஸூஸல் ஹிக்கம்'' (''ஞானக் கதிரொளி'') 27 அத்தியாயங்களையுடையது. ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் ஒவ்வொரு நபியின் பெயர் இடப்பட்டுள்ளது. முதல் அத்தியாயத்தின் பெயர், ''ஆதம் (அலை) அவர்களைப்பற்றிய ஞானம்'' என்பதாம். ஐந்தாம் அத்தியாயத்தின் பெயர் ''ஹஜரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப்பற்றிய ஞானம். இந்நூலின் இறுதி அத்தியாயம் ஹஜரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப்பற்றியது.

ஒரு நூறு நூல்களுக்கு அதிகமாகவே இவர்கள் எழுதியுள்ளதாயும். அந்த நூல்களில் பெரும்பான்மையானவை ஐரோப்பிய நூல் நிலையங்களில் இருப்பதாயும் பேராசிரியர் நிக்கல்ஸன் எழுதிய 'இஸ்லாத்தில் ஸூபித்துவம்'' எனும் நூலில் காணப்படுகிறது.

'சூரிய வாளை விடக் கொடுமையானது பெண்களின் கண்ணீர்' என்றார் ஒரு அறிஞர். சாதாரணமாகக் கண்ணீரைக் கண்டு அஞ்சாத நான் இம்மொழி அர்த்தமற்றதென்று நினைப்பேன். ஆனால் இன்று வாஸந்தியின் கண்களிலிருந்து பெருகி வழிந்த கண்ணீர் என் இதயத்தையும் சற்று உருக்கி விட்டதென்றே கூறவேண்டும். எனினும் நான் வாய்திறந்து ஒன்றும் கூறவில்லை.

சற்று நேரம் அமைதியாகச் சென்றது. கடலிலிருந்து வீசிய காலை இளங்காற்று தேகத்தைத் தீண்டிச் செல்லும் போது சற்று நடுக்கம் ஏற்பட்டது. மெரீனா ரஸ்தா ஓரமாக இதழவிழ்ந்த—ஆனால் மணமற்ற-மலர்ச் செடிகள் ஏதோ அதிசயத்தைப் பார்க்கும் குழந்தைகளைப் போல் ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தன.

ஸ்டியரிங்கிலிருந்து எழுந்த வாஸந்தி கிழக்கே முகத்தைத் திருப்பி, தூரத்தில் தெரியும் கடலை வெறித்து நோக்கினாள். அவள் கண்கள் சிவந்து கலங்கி யிருந்தன. பெருமூச்சு விட்டபடியே பார்த்துக்கொண் டிருந்தாள்.

"வாஸந்தி, உங்கள் போக்கு ஒன்றும் எனக்குப் பிடிபடவில்லை. இதெல்லாம் என்ன விளையாட்டு?" என்று கூறி அமைதியைக் கலைத்தேன்.

உடனே அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. சற்றுநேரம் கழித்து, "ஆமாம் விளையாட்டுத்தான்!" என்று மெதுவாகக் கூறினாள்.

இந்தப் பெண்ணின் பிடியிலிருந்து இன்று நாம் விடுபட்டு விட வேண்டும்; நமது இலட்சியமென்ன, போக்கு என்ன? சினிமாவுக்குக் கதை எழுதப் போய் இவளிடத்தில் அகப்பட்டுக்கொண்டோமே என்ற எண்ணம் என்னை வாட்டிக்கொண்டிருந்தது.

"வாஸந்தி, நீங்கள் செய்யும் காரியங்கள் எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. இந்தப் படத்துடன் எனது சினிமா தொடர்புக்கு முழுக்குப் போட்டுவிட வேண்டியதுதான்!"

"நீங்கள் ஏன் சினிமாவுக்கு முழுக்குப் போட வேண்டும்? நான் என் வாழ்க்கைக்கே முழுக்குப் போட்டு விட்டால் போகிறது!"

"நான் வாழ்க்கையில் கஷ்டப்பட்டவன். இப்போது அக்கஷ்டத்துக்கு முடிவு கண்டு, புது வாழ்வைத் துவங்கியிருப்பதாக நினைத்தேன், ஆனால்..."

"நான் உங்கள் வாழ்க்கையின் மத்தியில் வந்து அதைக் கெடுக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்,"

"ஆமாம். இல்லையானால் அர்த்த ராத்திரியில் எனக்கு உதவி செய்வதாக வந்து என்னை இங்கு அழைத்து வருவீர்களா? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?"

"நினைப்பவர்கள் என்னவேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு போகட்டும். ஆனால்...ஆனால்..."

"உங்களுக்கு இது மிகவும் அற்பமாகத் தோன்றலாம். ஆனால் எனக்கு அப்படியல்ல!"

வாஸந்தி இதற்கு ஒன்றும் பதிலளிக்கவில்லை. சிறிது நேரம் சென்றது.

"வாஸந்தி, உங்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து என்னை வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுங்கள். மணி நாலரையாகப் போகிறது!"

வாஸந்தியின் பெருமூச்சுதான் எனக்குப் பதிலளித்தது. இந்த மாதிரி குழந்தையின் பிடிவாதத் தன்மையுடன் இருப்பவள் என்னுடைய நிலைமையை உணர்ந்து கொள்வாள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

"வாஸந்தி, யாராவது இந்நேரத்தில் நம்மைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" என்றேன் மீண்டும்.

அவளது உதடுகள் அசைந்தன. அமைதியாகப் பேசினாள்: "ஆம் பார்த்துப் பரிகசிப்பவர்கள் பார்க்கத்தான் செய்தார்கள். நன்றாகப் பார்த்துவிட்டுத்தான் போனார்கள்!"

என்னை யாரோ திடீரென்று தாக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. 'நின்று நன்றாகப் பார்த்து விட்டுத்தான் போனார்'களாமே!

"என்ன சொல்கிறீர்கள் வாஸந்தி?"

என் குரல் தடுமாறியது உடல் பீதியால் நடுங்கியது.

வாஸந்தி நிதானமாகச் சொன்னாள்; "சற்றுமுன் காரை நிறுத்தி நின்று நம்மைப் பார்த்து விட்டுச் சென்றார்களே அவர்களைத்தான் சொல்கிறேன்!"

"அவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"தெரியாமலென்ன? நன்றாகத் தெரியும்! உங்களை அவர்களுக்குப் பிடிக்காது என்பதும் எனக்குத் தெரியும்!"

திக்பிரமையுடன் நான் அப்படியே உட்கார்ந்துவிட்டேன். என்ன வெட்கக்கேடு? எனக்குப் பிடிக்காதவர்கள் இந்த நேரத்தில் நானிருக்கும் நிலைமையைக் கண்டால் சும்மா இருப்பார்களா? வெறும் வாயில் அகப்பட்ட அவலின் நிலையல்லவா வந்து விட்டது!

காரின் முன்பக்கத்துக் கண்ணாடி மீது பட்டாம்பூச்சி யொன்று வந்து உட்கார்ந்தது. அதைத் தொடர்ந்து வந்த அழகான மற்றொரு

பட்டாம் பூச்சி அருகில் அமர்ந்தது. முதற் பூச்சி பறந்தது. இரண்டும் இப்படியும் அப்படியுமாக ஆடின. சற்று நேரத்துக்குப்பின் வெளியே பறந்து சென்றன.

“இந்த ஜந்துக்களுக்கு இருக்கும் உற்சாகம்கூட மனித இனத்துக்கு இல்லையே!” என்று மீண்டும் ஆரம்பித்தாள் வாஸந்தி.

“இப்பொழுது என்னதான் சொல்கிறீர்கள், வாஸந்தி?”

“உங்களிடம்...அன்புப் பிச்சைக் கேட்கிறேன்!

“ஹூம்! அன்புப் பிச்சை! வெட்கமில்லாமல் ஒரு ஆணிடம் ஒரு பெண் சொல்லும் வார்த்தையா இது?”

“ஸார், நீங்கள் எவ்வளவோ எழுதுகிறீர்கள்! எவ்வளவோ விஷயங்களை அறிந்தவர்கள்! ஆனால் உங்களுக்குப் பெண்ணுள்ளம் எப்படிப்பட்டது என்பது தெரியாதா?” அவள் குரலில் ஏக்கம் தொனித்தது; எனக்கு அது அருவருப்பை உண்டு பண்ணியது.

“ஆனாலும் இப்படிப் பேயாகத் திரியும் பெண்ணைப் பார்த்த தில்லை!”

“ஹூம். சொல்லுங்கள்! நன்றாகச் சொல்லுங்கள்! என் விதி அப்படி!...ஏதோ ஒரு தேசத்தில் ரோடில் அனாதையாகத் திரிந்தேன். ஆனால் பேயாகத் திரியவில்லை. அப்போது என்மீது பரிதாபப்பட்டு இந்த நாட்டுக்கு என்னை அழைத்து வந்தார் ஒருவர். அவரால் என்னைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டு, அவர் நோய்வாய்ப் பட்டதும் மீண்டும் அனாதையாகி விடுவேனோ என்ற பயம் ஏற்பட்டது. அப்போது கூட நான் பேயாகத் திரியவில்லை. படாதிபதி என்னை அழைத்து வந்து என்னைத் தன் சொந்தக் குழந்தையாக ஏற்று முன்னுக் குக் கொண்டு வந்தார். ஆனால்...ஆனால்...இன்று ஆமாம்...இன்று நான் பேயாகத் திரியும் நிலைமை ஏற்பட்டு விட்டது என்று தான் எண்ணுகிறேன்!”

“வாஸந்தி...!”

“தெருவில் அனாதையாகத் திரியும்போது பெற்றோரில்லையே என்ற ஏக்கம்! அதைத்தீர்த்து பெற்றோரினும் மேலான பாசத்தையூட்டி வளர்க்க முன் வந்தார் ஒருவர்! வளரும் பருவத்தில் உண்ணவும் உடுக்கவும் இல்லையே என்ற ஏக்கம்! என்னை மகளாக ஏற்ற அக்குறையையும் நீக்க ஒருவர் முன்வந்தார்! இன்று என்னைப் பிரியமுடன் 'வாஸந்தி' என்றழைக்க...”—வாஸந்தியின் கண்களில் நீர் நிறைந்தது. குரல் தளதளத்தது.

“வாஸந்தி, நான் விவாகமானவன், குழந்தையையும் மனைவியையும் பராமரிக்கக் கடமைப்பட்டவன்”

“ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் என்...”

“வாஸந்தி, நீங்கள் என் சகோதரி. இப்போதல்ல—எப்போதுமே சகோதரியிடம் காட்டும் அன்பை உங்களிடம் காட்டக் கடமைப்பட்டவன். என் தங்கை ஸகினா என்னிடம் எவ்விதம் பிரியமாக இருப்பாளோ அவ்விதமே நீங்களும் என்னிடம் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.”

"ஒரு வாய்ச் சோற்றுக்கு வழியில்லையே என்று வருத்தப்படும் ஏழைக்கு உணவளிப்பாரைக் காணோம், 'போதும் போதும்' என்று வெறுப்பவரை விரும்பியழைத்து உண்டிபளிக்கின்றது இவ்வுலகம்! ஒரு முடக்குப் பாலுக்கு வழியில்லையே என்று தவிக்கும் அனாதைக் குழந்தையை ஆதரிப்பாரில்லை; பாலைக் குடிக்க முடியாமற் குப்பை மேட்டில்கொட்டும்சீமான் வீட்டுக் குழந்தைக்கு புட்டி புட்டியாய் கிடைக்கிறது பால்!...ஹூம்...எல்லாம் உலக விநோதம் தான்!"

"வாஸந்தி! சம்பந்தா சம்பந்தமில்லாமல் நீங்கள் பேசுவது வேடிக்கையாகவே இருக்கிறது!"

"என்னை ஆதரித்து அன்பைச் சொரிய நீங்கள் இருக்கிறீர்கள் என்று இதுவரை நம்பியிருந்தேன்! என் எண்ணம் வீணாகி விட்டது!,

"உங்களைத் தான் என் சகோதரியாகக் கருதுகிறேனே, வாஸந்தி!"

"ஹூம், யாருக்கு வேண்டும் உங்கள் சகோதர அன்பும் பாசமும்!"

"நீங்கள் நல்ல இடத்தில் விவாகம் செய்துகொண்டு சுகமாக வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்!"

"புரடியூஸர் கூட அப்படித்தான் சொன்னார். ஆனால் எனக்குத் தங்களைச் சந்திக்கும்வரை அந்த எண்ணமே தோன்றவில்லை!

"வாஸந்தி, உங்கள் விவாகத்துக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்!"

"யார் விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று யாரிடம் வந்து அழுதது? நீங்கள் ஒன்றும் எனக்காக ஏற்பாடு செய்ய வேண்டாம்!"

"வாஸந்தி! நான் சொல்வதைக் கேளுங்கள்!"

"இதுவரையில் எத்தனையோபேர் வந்து என் மனத்தைக் கலைக்கப் பார்த்தார்கள். என் அழகுக்காக, என் அந்தஸ்துக்காக, என் இளமைக்காக என்னை வசப்படுத்த வந்தார்கள். இந்த நெருப்பினிடம் ஒரு அணுகூட நெருங்க முடியவில்லை! ஆனால்... ஆனால்!"

"வாஸந்தி. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்!"

"நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம்! நான் கேட்கவும் வேண்டாம்! என்விதி-என்னுடன் பிறந்த இவ்விதி என்னை இவ்விதம் அலைக்கழித்து வைக்கிறது! நான் அனாதையாகவே—அன்பின் பிம்பம் எதையும் காணாமல் வாழ்ந்து சாக வேண்டும் என்றிருக்கும் போது எதற்கு ஆசைப்பட்டு என்ன பயன்!..."

என்ன பேசுவதென்று எனக்கு விளங்கவில்லை. அவள் என்னை வீட்டில் கொண்டு போய் விடுவதாகவும் தெரியவில்லை. ஆனால் காலம் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு எண்ணம் வந்தது. கதவைத் திறந்து கொண்டு காரை விட்டிறங்கினேன். திரும்பிப் பாராமல் விடுவிடென்று லாயிட்ஸ் ரோடை நோக்கி நடந்தேன்.

பங்களாவின் வாசலைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்த போது, பொழுது விடிந்து கருமை நிறம் மாறிக்கொண்டிருந்தது. காலை ... பின் குர்ஆனை எடுத்து வைத்துக்கொண்டு

"ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்ருதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி" என்று ஓதும் என் நஸீமாவின் இனிய குரல், காலையிளங் காற்றில் இலேசாக மிதந்து கொண்டு வந்தது!

10

வீட்டை அடைந்தவுடன் நிம்மதியாகப் படுத்து நன்ருகத் தூங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு வந்தேன்; ஆனால் படுக்கையில் சாய்ந்தபோது தூக்கமே வரவில்லை. அசதியின் காரணமாகச் சிறிது கண்ணை மூடுவேன்—திடீரென்று விழிப்பு ஏற்பட்டு விடும்! பின்னர் புரண்டு படுத்து மீண்டும் தூங்க முயற்சித்தால், "என்னை அப்படியே விட்டு வந்தீர்களே, அது நியாயமா?" என்று வாஸந்தி என்னிடம் கேட்பது போல ஒரு பிரமை ஏற்படும். தூக்கம் வேண்டும், தூக்கம் வேண்டும்" என்று என் மனம் கத்தும்—ஆனால் கண்ணிமைகளோ வேலை நிறுத்தம் செய்வதாகத் தோன் ும். இவ்விதம் இரண்டாங் கெட்ட லையில நேரம்சென்றுகொண்டிருந்தது.

"இப்போ என்ன ராத்திரியா ாமி?" என்று ஒரு கீச்சுக் குரல் கட்டபோது விழித்துக் கொண்டேன்.

"உஸ், சும்மா இரு ஹஸீனு! அத்தா தூங்கட்டும்; தொந்தரவு காடுக்காதே!"—இது என் தங்கை ன் குரல்.

"ஏதோ ஒரு ஊரிலே நாம் வேலை செய்யும்போது அவங்களெல்லாம் தூங்குவாங்கண்ணு சொன்னீங்களே மாமி?"

"அதுவா! உனக்குத் தனியாகச் சொல்கிறேன் வா!"— ஹஸீனாவை ஸகீனா அழைத்துக்கொண்டு செல்வதை அறிந்து கொண்டேன்.

மீண்டும் சிறிது தூங்கி விழித்தபோது யாரோ வெளியே ஒரு ஆண் குரல் பேசுவது எனக்குக் கேட்டது. என் மனைவி பதிலளித்துக் கொண்டிருந்தாள். "இப்போது அவர்கள் தூங்கிக்கொண்டிருக் கிறார்கள்; பார்க்க முடியாது" என்று நஸீமா சொல்வதற்கு அந்த ஆண் குரல், "இன்று ராத்திரி வண்டிக்கே நான் ஊருக்குப் போகவேண்டுமே அம்மா! இப்பொவே மணி நாலரையாகிறது! அவரைக் கொஞ்சம் எழுப்புங்கள்!" என்று சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தது!

"சரி, தூங்கியது போதும்!" என்றுநினைத்துக்கொண்டே படுக் கையைவிட்டெழுந்தேன். முகத்தை நன்றாக அலம்பி மேற் துண்டால் துடைத்துக்கொண்டு வெளியே வந்தபோது புதுப் பணக்காரரின் தம்பி உட்கார்ந்திருந்ததைக் கண்டேன்.

"என்ன, வாருங்கள், சௌக்கியமா? எப்போது வந்தீர்கள்?" என்று கூறி அவரை வரவேற்றவாறு அவருக்கு எதிரில் கிடந்த நாற் காலியில் போய் உட்கார்ந்தேன்.

"நான் வந்து மூன்று வார மாகிறது. இதற்கு முன்னால் இரண்டு தடவைகள் வந்தேன். நீங்கள் இல்லை"

"ஆமாம் நான் ஊருக்குப் போயிருந்தேன்!" என்று பதிலளித்து, உள்ளேபோய் "நஸீமா காபி போடு!" என்று கூறினேன்.

மீண்டும் வெளியே வந்தபோது கையில் ஒரு அச்சிட்ட காகிதத்தை வைத்துப் பிரித்துக் கொண்டிருந்தார் வந்தவர். பின்னர் அதை என் னிடம் நீட்டி, "இதோ இதைப் படித்துப் பாருங்கள்!" என்றார்.

அதில், "பித்தலாட்டக்காரர்களுக்கு எச்சரிக்கை" என்ற தலைப் பில் ஒரு நீண்ட கட்டுரை அச்சிடப்பட்டிருந்தது. எங்கள் ஊர் வாலிபர் களின் சீர்திருத்த வேகம் அதன் வாசகம் ஒவ்வொன்றிலும் பிரதி பலித்தது.

"இது சம்பந்தமாகத்தான் உங்களிடம் சில வார்த்தைகள் பேசி விட்டுப் போகலாமென்று வந்தேன்!" என்றார் இளைய புதுப் பணக்காரர்.

"இதில் நான் செய்வது என்ன இருக்கிறது?"

"உங்கள் ஆதரவுதான் இதற்குக் காரணம் என்று நன்றாகத் தெரி கிறது. இந்த மாதிரி கலாட்டாக் காரியங்களுக்குத் தயவு செய்து இடம் கொடுக்காதீர்கள்."

"நான் கலாட்டா எதற்கும் இடம் கொடுப்பதில்லையே."

"இந்த நோட்டீஸை அச்சடித்துப் பரப்பும் நம் ஊர் இளைஞர்கள் உங்களைத்தான் முன் மாதிரியாகக் காட்டுகிறார்கள்!"

"தவறான வழியில் மனிதன் செல்லக்கூடாது" என்று நான் அவர்க ளிடம் சொல்லி சமூகச் சீர்திருத்தத்தின் அவசியத்தை வற்புறுத்தியிருப் பது வாஸ்தவம்தான். ஆனால் அதற்காக எந்த தனிப்பட்டவரையும் ... என்றும் சொல்லியிருக்கிறேன். மேலும்

இதில் யாரையும் அவர்கள் தாக்கவோ அல்லது கண்டிக்கவோ இல்லையே! வெளிப்படையாகத்தானே எழுதியிருக்கிறார்கள்?"

"நீங்கள் சொல்வது உண்மைதான். இருந்தாலும் பரம்பரையாக இருந்துவரும் வழக்கத்தைக் கைவிடும்படி கேட்பது நியாயமா?"

"பரம்பரையாக என்பது என்ன சமாதானம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. மேலும் நம் முன்னோர்கள் ஏதோ ஒரு காரணத்தால் அவ்விதத் தவற்றைச் செய்திருக்கலாம் அதனால் நாமும் அப்படிச் செய்ய வேண்டு மென்பதில்லையே!"

மேலும் எப்படிப் பேச்சைக்கொண்டு போவது என்று அவருக்குத் தெரியவில்லை. ஆகவே மொட்டைக் கடித சமாசாரத்தை அவரிடம் சொல்லி அதனால் ஏற்படும் அவரது முகமாறுதலைக் கண்டுபிடிக்கலாமா என்று நினைத்தேன். ஆதலால்; நானே மீண்டும் பேச்சை ஆரம்பித்தேன்:

"எனக்கு ஒரு மொட்டைக் கடிதம்கூட வந்திருக்கிறது. நான் இப்போது செய்துவரும் காரியங்கள் எதுவும் சரியில்லையாம். 'உனது நடவடிக்கைகளில் மாறுதல் ஏற்படாவிட்டால் கத்திக்கோ அல்லது கைத்துப்பாக்கியின் தோட்டாவுக்கோ நீ பதிலளிக்க நேரிடும்' என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறது"

"யார் அப்படி எழுதியிருக்கிறார்கள்?" என்று அவர் கேட்டார். அவரது முகத்தில் மாறுதல் எதுவும் தெரியவில்லை.

"கையெழுத்தில்லை. என்றாலும் கண்டு பிடித்து விடுவேன்"

"நம் ஊரிலிருந்து யாராவது எழுதினாலும் எழுதியிருக்கலாம்," என்று கூறிக்கொண்டு வந்தவர், "ஆமாம் எங்கிருந்து வந்திருக்கிறது என்றாவது தெரிகிறதா?" என்று கேட்டார்.

"அது தெரியவில்லை. ஆனால் இங்கு ஜெனரல் போஸ்ட் ஆபீஸில் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது" என்றேன்.

"இந்த மாதிரி விஷயங்களை யெல்லாம் நீங்கள் சும்மா விட்டுக்கொண்டிருக்கக் கூடாது ஷரீப்! கடைசியில் ஆபத்தைக் கொண்டு வந்து விடலாம்!" என்று அவர் என்னை எச்சரித்தார். ஊரில் யாரேனும் இவ்விதம் உங்களுக்கு எழுதியிருக்கக் கூடுமா என்று விசாரிக்கிறேன்." என்று சொல்லிவிட்டு என்னிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அவர் புறப்பட்டுப் போனதும் வீட்டினுள் செல்ல மனமன்றி அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தேன். சூரியனின் அஸ்தமன கிரணங்கள், தம் செங்கதிர்கள் மூலம் பங்களாவின் மரம், செடிகளுக்கெல்லாம் தங்க முலாம் பூசிக்கொண்டிருந்தன. ஹாலில் வைக்கப்பட்டிருந்த ரேடியோ, ரிக்கார்டு சங்கீத மொன்றை ஒலி பரப்பி விட்டு தலைவலி மருந்துகளில் சிறந்தது எது என்பதை விளக்கிக்கொண்டிருந்தது.

கேட் திறக்கும் சப்தம் கேட்டது. வெளியே காரை நிறுத்திவிட்டு பங்களாவினுள் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டேபிள்களும் வந்துகொண்டிருந்தனர். 'இதென்ன கூத்து?" என்று ஆச்சரியமடைந்தபோதிலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "வாருங்கள் இன்ஸ்பெக்டர் சார்! என்ன விசேஷம்?" என்று கூறியபடியே அவரை வரவேற்றேன்.

"ஒன்றுமில்லை. ஒரு முக்கியமான சமாசாரம்"

"உட்கார்ந்து கொண்டு பேசலாமே இன்ஸ்பெக்டர் ஸார்!".

"பரவாயில்லை, உங்களிடம் ஒரு விஷயம் கேட்டுவிட்டுப் போகவே வந்தேன்!"

"என்ன? சொல்லுங்கள்!"

"உங்கள் படத்தில் நடிக்கிறாளே வாஸந்தி அவளை நேற்று நடு இராத்திரியிலிருந்து காணோமாம்! இப்போது பதினெட்டு மணி நேர மாகிறது. இருக்குமிடம் தெரியவில்லை. ஆனால் அதிகாலை மூன்று மணிக்கு நீங்கள் இரண்டு பேரும் ஸ்டூடியோவிலிருந்து காரில் புறப் பட்டதாக அங்கு சொன்னார்கள். சுமார் நான்கு மணிக்கெல்லாம் பீச்சில் இரண்டு பேரும் இருந்தீர்களாம்! இதை ஒருவர் நேரில் பார்த் திருக்கிறார். ஆதலால் அவள் இருக்குமிடம் தங்களுக்குத் தெரியலாம் என்று கருதுகிறேன். வேறு அவளுக்கு இங்கு அறிமுகமானவர்கள் எவரும் இல்லை. அது போக எங்கே போனாலும் திரு பூதலிங்கம் பிள்ளை யவர்களிடம் சொல்லிவிட்டே போவாள். இப்போது அப்படியும் சொல்லவில்லை. ஆதலால் அவள் மறைவு பற்றிச் சந்தேகம் ஏற்பட் டிருக்கிறது."

"நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவம், ஆனால் என்னிடம் அவள் ஒன்றும் சொல்லவில்லையே!"

"என்னவோ, சூழ்நிலை சாட்சியம் தங்களுக்கு விரோதமாக இருக்கிறது!"

"அதற்கு நான் என்ன செய்யலாம், இன்ஸ்பெக்டர் ஸார்?"

"இது ஒரு கடுமையான விவகாரம். உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லி எங்களுக்கு உதவி செய்யுங்கள். நான் அப்புறம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் போய்விட்டார். நான் பிரமித்து நின்றேன்.

பிரஸிடெண்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில் ஸ்னோ டால்கம் பவுடர் ஆகியவைகள் மிகச் சிறந்தவை என்பதை நான் உபயோகித்துக் கண்டு கொண்டேன்—சாவித்திரி.

தயாரிப்பாளர்கள் :

ராதேோட் டிரேடிங் கம்பெனி,

சௌகார் பேட்டை, சென்னை-1.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலாயா, இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

நான் அறிந்த இஸ்லாம்

விசி

25 நபிமார்கள்

★

எஸ். சுந்தரமூர்த்தி

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு இனத்தாருக்காகவும் இறைவன் தன் தூதர்களை அவ்வப்போது அனுப்பி, அம் மக்களை ஆட்கொண்டான். இத்தகைய தேசிய நபிமார்களுக்குப் பின் உலக முழுவதற்கும் ஒரு தூதர் அனுப்பப்பட வேண்டியது இயற்கையேயன்றோ? அன்றியும் அது மிக இன்றியமையாததும் ஆகும். ஏனென்றால் முன்னே அனுப்பப்பெற்ற தூதர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளையெல்லாம் ஒன்று திரட்டித் தொகுத்து, அவைகளில் மக்களால் செய்யப்பட்ட மாற்றங்களை, அகற்றி உண்மையை நிலை நிறுத்தவேண்டியது அவசியமாகும். இதைப் பின்வரும் திருமறை வாக்கியங்கள் தெளிவாக்குகின்றன.

"அல்லாஹ் தன் தூதர்கள் மூலமாக இவ்வாறு கூறினான்: 'நான் உங்களுக்கு அளித்துள்ள மறைநூலையும் அறிவையும் சீர்தூக்கிப் பார்க்கும் தூதர் ஒருவர் வருவார். நீங்கள் அவரிடம் நம்பிக்கைக் கொள்வதுடன் அவருக்கு உதவி செய்தல் வேண்டும். மேலும் இறைவன் வினவினான்: 'நான் கூறுவதை நீங்கள் உறுதிப் படுத்தி ஏற்றுக் கொள்கின்றீர்களா?' அவர்கள் இவ்வாறு மறுமொழி பகர்ந்தனர்: 'நாங்கள் உறுதி மொழி கூறுகின்றோம்.' அவன் மீண்டும் கூறினான்: 'அப்படியானால் நீங்கள் சாட்சியம் கூறுபவர்களாக இருங்கள். நானும் உங்களுடன் சாட்சியம் கூறுபவர்களில் ஒருவனேயாவேன். இதன் பின் இதிலிருந்து பின்வாங்குகின்றவர்கள் என் கட்டளையை மீறி நடந்தவர்களேயாவார்கள். அவர்கள் இறைவனுடைய மதத்திற்கு வேறான தொன்றைப் பின்பற்றுகின்றார்களா? வானுலகிலும் மண்ணுலகிலும் இறைவன் விதித்துள்ளபடி நடப்பவர்கள் இறைவனிடமே திருப்பி யழைக்கப்படுவர்'. மேலும் இவ்வாறு கூறுங்கள்: 'நாங்கள் அல்லாஹ்வினிடமும், எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளிடமும் நம்பிக்கைக் கொள்ளுகின்றோம். மேலும் இபுராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யாகூப், மூசா, ஈசா- இவர்களுக்கும், இன்னும் பிற நபிமார்களுக்கும் அவர்களுடைய இறைவன் வெளிப்படுத்திய உண்மைகளிலும் நம்பிக்கைக் கொள்கின்றோம். அவர்களுக்குள் நாங்கள் ஏற்றத் தாழ்வு கற்பிக்காமல் இறைவனுக்குத்

தலை வணங்குகின்றோம். இஸ்லாம் அல்லாத வேறு சமயத்தை விரும்புகின்றவனுடைய விருப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, அன்றியும் மறுமையில் அவன் இழந்தவர்களுள் ஒருவனாகவே இருப்பான்.!' (3: 80—84).

எல்லா நபிமார்களையும் பின்பற்றுகின்றவர்கள் அனைவரும் வரப்போகும் உலக நபியை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று தெளிவான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏசுநாதர், மூசா (அலை) ஆகிய நபிமார்களும் தங்களுக்குப் பின் வரப்போகும் இறைவன் தூதரைப் பற்றி அடிக்கடி கூறியுள்ளார்கள். மேற்காட்டியபடி பல சமயங்களிலும் உள்ள உண்மைகளைச் சீர்தூக்கிப் பார்த்தவர்கள் மகான் முஹம்மது (ஸல்) அவர்களையன்றி வேறு ஒருவரும் இல்லை.

உலக மக்களுக்கு ஒரு அருட் கொடையாகவும் எச்சரிக்கையாளராகவும் முஹம்மது நபி (ஸல்) அனுப்பப்பெற்றார்கள் என்பதுடன் அவர்களே உலகச் சமயத்திற்கு ஒரு அடிப்படையையும் வகுத்துள்ளார்கள் என்று கூறுதல் வேண்டும். இந்த அடிப்படையில்தான், உலகத் தீர்க்கதரிசிகள் அனைவரும் உண்மையானவர்களென்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இக்கொள்கையின் மீதே மக்களினம் முழுவதும் ஒன்றுபட முடியும். அன்றியும் இதனால் தான் தேசிய இனங்கள் பலவற்றையும் சமமாக நடத்த முடியும். இவ்வாறு முஹம்மது நபி அவர்கள் தேசிய இனங்களைப்பற்றிய எண்ணத்தைக் குறைத்து, மன்பதை முழுவதும் ஓர் இனமே என்பதை நிலை நிறுத்தினார்கள்.

பல நாடுகளிலும் பல காலத்திலும் நபிமார்கள் தோன்றினாலும் அவர்கள் யாவரும் சமமானவர்களே. அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வைச் கற்பித்தல் மன்னிக்க முடியாத குற்றமாகும். அவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் தோன்றிய நாடு, காலம், சூழ்நிலை, மக்களுடைய அறிவுத் திறன்களுக்கேற்பவே உண்மைகளைப் போதனை செய்தார்கள். அதனால் அவர்களுடைய போதனைகளில் சிறு வேறுபாடுகள் காணப்படலாம். ஆனால் அடிப்படைமட்டும் ஒன்றாகவே இருப்பதை எல்லோரும் எளிதில் உணரலாம். மேற்போக்காகக் காணப்படும் சிறு வேறுபாடுகளைக் கண்டு அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வைக் கற்பித்தல் தவறாகும். "நிச்சயமாக உங்களுடைய (நபிமார்களுடைய) சமுதாயம் ஒரே சமுதாயமேயாகும்" (21 : 92) என்ற திருமறை வாக்கியம் இதை மேலும் வலியுறுத்துகின்றது. நபி நாயகம் அவர்களும் இவ்வாறு கூறியுள்ளார்கள்: "இறைவன் தூதர்கள் யாவரும் தாய் முறையில் உடன் பிறந்தவர்களே. அவர்களுடைய வேலையும் ஒன்றே. அவர்களைப் பின்பற்றுகின்றவர்கள்தான் வேறானவர்கள்" (புஹாரி 60; 49)

ஒவ்வொரு இறைவன்டியாரிடத்தும் ஒரு குறிப்பிட்ட நற்குணம் மிகுதியாகக் காணப்பட்டிருக்கலாம். அதைப்பற்றி மிகுதியும் திருமறையில் பேசப்பட்டிருக்கலாம். அதிலிருந்து அவரிடம் வேறு நற்குணங்கள் இல்லை என்றோ, அல்லது அவரிடமிருந்த நற்குணம், மற்ற நபிமார்களிடம் இல்லை என்றோ கொள்ளுதல் தவறாகும். நபி இபுராஹிமைப்பற்றி 'உண்மையானவர்' (19: 41) என்றும் மூசாவைப்பற்றி 'தூய்மை செய்யப்பட்டவர்' என்றும் (19: 51) ஏசுநாதரைப்பற்றி 'இவ்வுலகிலும் மறு உலகிலும் மரியாதை செய்யப்படவேண்டியவர்' என்றும் இறைவனிடம் நெருங்கி இருப்பவர்களில் ஒருவர் (3: 44) என்றும் கூறப்பட்டிருப்பதால் இத்தகைய குணங்கள் ஏனைய நபிமார்களிடம் இல்லை என்பது பொருள் அல்ல. எல்லா நபிமார்களும் ஒரு இனத்தவரே. எல்லோரும் உண்மையானவர்களாகவும், மரியாதை செய்யப்பட வேண்டியவர்களாகவுமே இருந்தனர். இவ்வாறு பல நபிமார்களை இறைவன் அனுப்பக் காரணம் என்ன? மக்களினத்தை உய்விக்க வேண்டியே இறைவன் தன் பேரருளால் அவ்வப்போது தன் தூதர்களை அனுப்பி மக்களுக்கு நல் வழியைக் காட்டினான். மக்கள் தம் மிருக இச்சைகளை ஒழித்து, உயர்ந்த நல்லொழுக்கங்களைக் கற்று அதன்படி நடந்து தெய்வீகத் தன்மை அடைய வேண்டும் என்ற ஓரே நோக்கத்துடன் தான் இறைவன் தன் தூதர்களை அனுப்பினான். மக்கள் கேளாமுன்னமே அவர்களுடைய புற வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, நீர், காற்று, முதலிய பல பொருள்களையும் படைத்தது போலவே அவர்களுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு வேண்டியவைகளையும் அவர்கள் கேளாமுன்னமே தம் தூதர்கள் மூலமாக அளித்துள்ளான். பலமுறையும் இறைவன் தன் தூதர்கள் மூலம் கற்பித்த உண்மைகளை மறந்து மனிதர்கள் தவறி நடந்தபோதிலும், மீண்டும் மீண்டும் அவர்களை நல்வழிப்படுத்த இறைவன் தனது தூதர்களை அனுப்பி வந்தான். நம் குழந்தைகள் எவ்வளவு தடவைகள் தவறிழைத்தாலும் நாம் மனம் வெறுப்படையாது மீண்டும் மீண்டும் அவர்களுக்கு நன்மைகளையே செய்கின்றோம் அன்றோ? அதுபோலவே இறைவனும் மீண்

திருமண நன்றியறிவிப்பு

19-10-56 வைகறையில் தஞ்சை ஜில்லா திருவிடச்சேரியில் நடைபெற்ற எங்களது திருமணத்திற்கு நேரில் வருகை தந்து சிறப்பித்த உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும், உள்நாடு வெளிநாடுகளிலிருந்து வாழ்த்துத் தந்திகள் செய்திகள் அன்பளிப்புகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியறிதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(என். ஹபீப் முஹம்மது
என். அப்துல் முத்தலிப்
திருவிடச்சேரி.

டும் மீண்டும் மக்களை நல்வழிப் படுத்தும் பொருட்டுத் தூதர்களை அனுப்பினன். அவனே பேரருளாளனும் பேரன்புடையோனும் அல்லவா?

நபிமார்கள் அனைவருமே தூய்மையானவர்கள். பாவம் ஒரு சிறிதும் இல்லாதவர்கள். அத்துடன் உயரிய நல்லொழுக்கங்கள் பலவும் நிறைந்தவர்கள். மக்களிடம் உள்ள இழி குணங்களை நீக்கித் தூய்மைப் படுத்தி, அவர்களை உயர்வடையச் செய்யவேண்டியதே இறைதூதர்களின் கடமை. எனவே அவர்கள் முதலில் தூய்மையாகவும், குற்றம் அற்றவர்களாகவும், உயர் ஒழுக்கமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டியது இன்றியமையாததாகின்றது. இல்லாவிட்டால், 'குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குருடும் குருடும் குழிவிழுந் தற்றே' என்பதாகவே அவர்களுடைய செயல் முடியும். அதனுல்தான் நபிமார்கள் அனைவரும் தூய்மையானவர்கள் என்பது இஸ்லாமியக் கொள்கைகளில் ஒன்ருக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. நபிமார்களைப்பற்றி இவ்வாறு திருமறை இயம்புகின்றது: "அவர்கள் மதிப்பிற்குரிய அடியார்கள். இறைவன் பேசுவதற்கு முன்பு அவர்கள் பேசுவதில்லை. இறைவன் கட்டளைப்படியே அவர்கள் செயலாற்றுகின்றனர். (21: 25-27) "நம்பிக்கைக்கு மாருக நடந்ததாக எந்த இறை தூதரைப் பற்றியும் கூறமுடியாது" (3: 160). (தொடரும்)

முஸ்லிம் முரசு

சந்தா விபரம்

(ஈத், மீலாத் மலர்களுடன்)

உள் நாடு :

இந்தியா, சிலோன்

தனி இதழ்	0	6
ஒரு வருடம்	4	8
அரை வருடம்	2	8
2 வருடம்	8	8
வெளி நாடுகள்		
தனி இதழ்	0	8
ஒரு வருடம்	6	0
அரை வருடம்	3	8
2 வருடம்	11	0

ஒரு வருடத்திற்குக் குறையாத சந்தா செலுத்துகிறவர்களுக்கு மட்டுமே ஈத், மீலாத் மலர்கள் குறைந்த விலைக்கு அனுப்பப் படும். இலங்கை நேயர்கள் வி.பி. மூலம் சந்தா செலுத்தலாம்.

மானேஜர்,

முஸ்லிம் முரசு

18, ராமசாமித் தெரு, மண்ணடி

சென்னை-1.

வாழ்வரசி

(சீனக்கதை)

தமிழாக்கம் : அப்துர்-ரஹீம்

300 ஆண்டுகட்கு மேலாக நாகரிகக் கதிர் பரப்பி நிற்கும் சீனப் பெருங்குடி மக்களின் வாழ்வை பின்னணியாய் வைத்து வரையப்பட்ட அரிய நவீனம். ஐரோப்பியரின் வருகையால் சீன அடைந்த மாறுதலையும் நவீனம் படம் பிடித்துக் காட்டுகிறது. நம் அண்டை நாடான சீனவை அறிய விரும்பும் அனைவருக்கும் இது ஒரு அரிய விருந்து.

விலை ரூ. 2—0—0

தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்

18, ராமாசாமி தெரு,

மண்ணடி, சென்னை-1.

உலகத்திலேயே மிகப்பெரிய பணக்காரர்களாய் விளங்குகின்றவர்களுள் ஹைதராபாத் நிஜாமும் ஒருவர். சென்ற மாதம் வரையில் ராஜப் பிரமுகர் பதவியை அலங்கரித்த நிஜாம், இந்த நவம்பர் முதல் தேதியிலிருந்து இந்நாட்டின் சாதாரண குடிமக்களில் ஒருவராக மாறுகின்றார்! கால மாறுதலின் வேகந்தான் என்னே!

ஹைதராபாத் நிஜாம்

கலிக்குஜ் ஜமான்

மாநிலப் புத்தமைப்புக் குழுவின் முடிவுகளுக்கேற்ப 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி நடைமுறைக்கு வந்துள்ள சட்டப்படி இதுவரை ராஜ்யங்களிலிருந்து வந்த ஏ. பி. ஸி என்ற வேறுபாடுகள் நீக்கப்பட்டு, ராஜப் பிரமுகர்களின் பதவிகளும் அகற்றப்பட்டு விட்டன. இதற்கிணங்க ஹைதராபாத் ராஜ்யம் முக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதி ஆந்திராவுடனும், பிரிதொன்று மைசூருடனும், மற்றொன்று பம்பாய் ராஜ்யத்துடனும் இணைக்கப்பட்டு விட்டது. ஹைதராபாத் ராஜ்யம் ஒன்பது மாவட்டங்களை உள்ளடக்கியது. 82168 சதுரமைல் பரப்பளவுள்ளது. இங்கு ஏறத்தாழ 190 00,000 மக்கள் வாழ்கின்றனர். கி. பி. 1712-ல் நவாப் கமருத்தீன் கலீப்கான் என்பவர் இங்கே 'அஸஃப் ஜாஹ்' வமிசத்தைத் தோற்றுவித்து அவரே அதன் முதல் நிஜாமாக விளங்கி ஆட்சிபுரிந்தார்.

அதே வமிசத்தின் ஏழாவது நிஜாமாக 1911 முதல் 1948 வரை ஆட்சி புரிந்து, அதன் பின்னர் இந்திய அரசாங்கத்தின் ராஜப் பிரமுகராகப் (1948-56) பதவியேற்றுப் பணி புரிந்த நவாப் மீர் உஸ்மான் அலிகான் பஹதூர் அவர்கள், கடந்த அக்டோபர் 31-ம் தேதிக்குப் பிறகு இந்தியத் துணைக் கண்டத்தின் சாதாரண குடிமக்களுள் ஒருவராக இருந்து வருகின்றார்!

இவர் நற்புகழ் பெற்றதொரு இஸ்லாமியக் கலீபாவின் குடும்பத்தில் தோன்றியவர். இவர் இளவரசராயிருந்தகாலை, ஆங்கிலம் கற்பித்த சர் ப்ரியன் எகர்டன் என்பவர் இவரை, "உயர்ந்த ஒழுக்கம், சிறந்த பணிவு, ஆடம்பரமின்மை, தன்னடக்கம் முதலிய நற்குணக்கள் நிறையப் பெற்றவர்" என்று பாராட்டிக் கூறியுள்ளார். இவர் இளமையிலேயே அரசாங்க அலுவல்களைத் திறமையுடன் நிர்வகிக்க சிறந்த பயிற்சிகள் அளிக்கப் பெற்றார். இவர் தமது தந்தையின் வாரிசாக 25-ம் வயதில் அரச பதவி ஏற்றார். அன்று தொட்டு இவருடைய ஆளும் திறமை, நாட்டின் நலன், கண்காணிப்பு, முற்போக்குத் திட்டங்கள் இவற்றைக் கண்டு மாற்றாரும், மற்றோரும் வியந்தனர். அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் சிறந்த மேதைகள் அவ்வப்போது ஆலோசனை கூறிவந்தனர். நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு தலையெடுக்கா வண்ணம் சிறந்த முறையில் நிர்வாகம் செய்து, இறுதியில் நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் 6 கோடி ரூபாய்க்கு ஒரு வன்மையான சேமிப்பை ஏற்படுத்தி வைத்தார். போர்க்காலங்களிலும், சமாதான காலங்களிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோதினும் நிலைமையை சமாளிக்கக்கூடிய அளவிற்குத் திட்டங்கள் தீட்டினார்.

இவ்வுலகில் வாழும் பெரும் பொருள் படைத்த ஆட்சியாளர்களுள் இவரும் ஒருவராக வைத்து எண்ணப்படுகின்றார். இவர் ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் ஹைதராபாத் அரசியலாரிடமிருந்து தமது நிலங்களுக்கு ஈடாகப் பெற்று வருகிறார். மேலும் இவர் செலுத்தியுள்ள 40 கோடி ரூபாய் அரசாங்கப் பொறுப்பில் முதலீடாக இருந்து வருகிறது. நிஜாமின் பொறுப்பிலுள்ள பொன் ஆபரணங்கள், மற்ற சொத்துக்களனைத்தும் சுமார் 100 கோடி ரூபாய்களுக்கு மேலாக மதிப்பிடப்படுகின்றன. மற்றும் ஆடம்பரமான அரண்மனை, ஆணை யிடுமுன் அடி பணிய அளவற்றோர், பாலும் தெளி தேனும் பழரசமும் வேளையறிந்து கொடுக்க வேலையாட்கள், அறுசுவையும் குன்றாது குறையாது அமுது படைத்தளிக்க அடு தொழில் வல்லுணர்கள், மல்லிகையின் மலரிதழ்கள் மஞ்சத்தில் பரப்பிவைக்க; பாதங்களில் மண் படாது பட்டுக்கம்பளம் விரித்து வைக்கக் குற்றேவலாளர், இவ்வாறு பலபேர் காத்துக் கிடக்கின்றனர். இங்ஙனம் இவர் விரும்பியதனைத்தையும் தடையின்றி எய்திட வாய்ப்புகள் பெற்றிருந்தபோதிலும் செயலற்று வீற்றிருக்கும் சோம்பேறித்தனமோ, சல்லாப கேளிக்கைகளிலீடுபடும் உல்லாசப் பொழுது போக்கோ இவர் ஒரு போதும் கொண்டது கிடையாது.

எளிமை, சிக்கனம் மெய்யொழுக்கம் இவற்றினின்றும் சிறிதும் வழுவாது இவர் வாழ்ந்து வருகிறார். நாள்முழுதும் அயராது வேலைகளைச் செய்து முடிக்கிறார். இப்படி வேலை செய்வதில் இவருக்குள்ள ஆர்வமும், ஆற்றலும் குறிப்பிடத்தக்கன. வழக்கமான விடுமுறை நாட்களில் கூட தாமே அமர்ந்து அரசாங்க பைல்களைக் கூர்ந்து கவனிக்கிறார். எல்லாத் துறைகளிலும் நாட்டில் செழுமையும் கொழுமையும் செழித்தோங்க அரும்பாடு பட்டு வந்துள்ளார்.

வீண் ஆடம்பரங்களையெல்லாம் வெறுத்து ஒதுக்கி விடுகிறார். ஒருமுறை 1937-ம் ஆண்டில் மேன்மை தங்கிய நிஜாம் அவர்கள் ஆட்சியின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. அதற்குத் தேவையான நிதிகளை மக்களே வசூல் செய்து கொடுத்தனர். அதுபோது தொன்றுதொட்டு வழங்கி வந்த ஆடம்பரப் பழக்கங்களையும் வான வேடிக்கைகளையும், யானை ஊர்வலங்களையும் அகற்றச் செய்தார். அன்று கடல் போல் பரந்து நின்ற மக்கட் கூட்டத்தில், "எனது அன்புளங்கொண்ட மக்களுக்கென என் வாழ்க்கை அர்ப்பணம் செய்யப்பட்டு விட்டது. அவர்களுக்குப் பணி புரிபவனாக என்றும் இருப்பதில் யான் பெருமிதமும் பேருவகையும் அடைகின்றேன்" என்று எல்லோர் உள்ளங்களிலும் உவகை வெள்ளம் வழிய உரை நிகழ்த்தினார்.

இவருடைய சொத்துக்கள் பொதுத் தேவைகளுக்கும், பயனுள்ள காரியங்களுக்கும் பெரும் பகுதி பயன் படுகின்றன. பிரிட்டனுக்குப் போர்க்கால கடனாகப் பல கோடி ரூபாய்கள் வழங்கி, அதன் மூலம் "பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நல்ல துணைவன்" என்ற பெயரும் பெற்றுள்ளார்,

மூன்று கோடி ரூபாய்க்கு முதலீடு செய்யப்பட்டுள்ள உஸ்மானியா பல்கலைக் கழகம், கலை, கைத் தொழில்களின் மத்திய கல்வி நிலையம், நிறைந்த வசதியுள்ள உஸ்மானியா மருத்துவ நிலையம், நிஜாம் சாகர் போன்ற நீர்ப்பாசன திட்டங்கள் முதலிய நாட்டின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் அடிகோலும் பல முற்போக்குத்திட்டங்கள் மேன்மைதங்கிய நிஜாமின் பேராதரவினாலேயே ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

இவர் தமது ஆட்சியில் அ... வரும் சமம், ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்பும் முழு சுதந்திரமும் அளிக்கப்படவேண்டும், எந்த மதத்தினருக்குரிய சின்னமா

இருந்தபோதினும் அஃது காப்பாற்றப்பட வேண்டும் என்பன போன்ற ஆணைகள் பிறப்பித்தார். தம் குடி மக்களிடை தாழ்ந்த இனத்தினரிடமும், ஏழைகளிடமும் நிறைந்த அன்பு செலுத்தினர். பல மத ஸ்தாபனங்களுக்கு வேறுபாடின்றி பணமாகவும், நிலமாகவும் நன்கொடைகள் வழங்கியுள்ளார்.

பண்டைக்கால கலை, ஓவியம், சிற்பம் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக இன்று எல்லோராவிலும், அஜந்தாவிலும் எழில் பெற்று விளங்கும் நினைவுச் சின்னங்களெல்லாம் நிஜாம் அவர்களின் நிலைத்த ஆதரவைப் பெற்று வந்திராவிடில் என்றோ அழிந்தொழிந்திருக்கும்.

இதன் பொருட்டு 30 லட்சம் ரூபாய் செலவிட்டு இத்தாலியக் கலைவாணர்களைக்கொண்டு இவை பண்டைத்திற்கும் புத்துயிரூட்டிப் பொலிவுறச் செய்தார்.

சென்னை மாநிலத்திற்கப்பாலுள்ள பத்ராசலம் கோயில் நிஜாம் அவர்களிடமிருந்து வருடத்திற்கு 20000 ரூபாய் நன்கொடையாகப் பெற்று வருகிறது.

அரசோச்சும் அதிபதியாயிருந்து, பின் அரசாங்கப் பிரமுகராகி இன்று சாதாரணக் குடிமகனாகவுள்ள நிஜாம் அவர்கள் இனி எந்தப் பதவியையோ, அதிகாரத்தையோ அல்லது தனிச் சலுகைகளையோ விரும்பவில்லை.

நிஜாம் அவர்களின் கருணைவடிவுடைய அன்புள்ளத்திற்கு இரு சான்றுகள் :

ஒரு நாள் மாலையில் இவர் தமது காரிலேறி நகரைச் சுற்றிப்பார்த்து வர எண்ணிப் புறப்பட்டார். வழியில் ஒரு ஆடு அவர் சென்ற காரின் குறுக்கே ஓடி காயம்பட்டு விழுந்து விட்டது. உடனே காரை நிறுத்தி அடிபட்ட ஆட்டை எடுத்துக்கொண்டு மீண்டும் அரண்மனைக்கே சென்று தக்க விலங்கு மருத்துவர் மூலம் நன்கு கவனிக்கச் செய்தார். சின்னாட்களில் ஆடு குணமுற்று நன்னிலை எய்தியது. பின்னர் அதன் உரிமையாளரைத்தேட எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றதால் அதைத் தாமே வைத்துக்கொண்டு தினம் தினம் கண்காணித்து அது இறக்கும் வரை பராமரித்து வந்தார்.

ஒரு முறை நிஜாம் அவர்கள் மதவிழா ஒன்றில் பங்குபெற விரும்பி, விழா நடக்க விருந்த இடத்தை வந்தடைந்தபோது ஆங்கொரு பகைவன் கைக்குண்டை அவர் மீது வீசி பெறி

டீகளில் உயர்ந்தவை

மக்தூம் டீ

மக்தூம் கோல்டன் ஸ்டார் டஸ்ட் டீ
மக்தூம் சிவப்பு லேபிள் டஸ்ட் டீ
மக்தூம் தென்னை மர மார்க் டஸ்ட் டீ

மக்தூம் அன் கோ,
தபால் பெட்டி நெ. 1769, மதராஸ்—1.

யப்போன தருணத்தில் பிடிக்கப் பட்டான். உடனே அதுகண்டு ஆர்த்தெழுந்த மக்கள் அவனை உரு குலைக்க ஓடினர், சுற்ற வாளியின் உயிர் ஆபத்தில் சிக்கி யிருந்ததை யறிந்த நிஜாம் அவர் கள் மக்கட் கூட்டத்தை விளித்து, அவனை ஒன்றும் செய்யவேண்டா மென்று உரக்கக் கூவினர். பிறகு அவனை போலீஸ் பாதுகாப்புடன் அவ்விடத்தை விட்டுக் கொண்டு போகச் செய்துவிட்டு, ஒரு சிறி தும் மனக்கலக்க முறாமல் கூட் டத்தின் மற்ற நடவடிக்கைகளை அமைதியாகக் கவனித்தார். அப் போது, "பகைவன் பலமிக்கவனு யிருந்தால் அவனைவிட இறைவன் பன்மடங்கு வலிமைமிக்கவனாக இருக்கிறான்" என்று நிஜாம் கூறினர்.

அஸஃப் ஜாஹ் வமிசத்தின் இறுதித் தலைவர் இவர்தான். ஹைதராபாத்தின் முதல் நிஜா மும், இவ்வமிசத்தைத் துவக்கிய வருமான நவாப் கமருத்தீன் கலீப்கான், மகான் ஒருவரால் ஆசீர்வதிக்கப்பட்டு ஏழு ரொட்டி களும் அளிக்கப்பட்டார். அப் போது நிஜாம் மேலும் சில ரொட் டிகள் கொடுக்குமாறு அம் மகானைக் கேட்டபோது, "இதற்குமேல் உமக்குக் கொடுக் கப்பட மாட்டாது. இணையற்ற கருணையுள்ள இறைவன், உம் மீதும், ஏழு தலைமுறைகளுக்கு ஆளப்போகும் உமது வமிசத்தின் மீதும் தனது அருள்மாரியைப் பொழிவானாக!" என்று கூறிச் சென்றுவிட்டாராம்! இவ்வாறு ஒரு கதை நிலவி வருகிறது. இது ஆதாரமற்றது என்றோ கற்பனை என்றோ பலர் மறுக்க முன்வரு வாராயினும் இன்று அந்த பக்கீ ரின் கூற்று மறுக்க முடியாத ஒரு மெய்யுரையாகி விட்டது!

ஸையத் இப்ராஹீம் சாஹிப் எம். ஏ., எல். டி., எழுதிய புதிய புத்தகங்கள்

ஹஸ்ரத் உமர் (ரலி)

இரண்டாவது கலீபா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஜீவிய சரிதை. விலை ரூ. 1—8—0

ஹஸ்ரத் காலித் (ரலி)

திரு நபி (ஸல்) அவர்களின் குறிப்பிடத்தக்க ஸஹாபா வின் வீர சரிதை. விலை ரூ. 1—8—0

தளபதி தாரிக்

ஸ்பெயின் நாட்டை வென்ற வீரரின் வரலாறு. விலை ரூ. 0—10—0

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ

ஆரம்பகால ஸூபிகள் குறிப்பிடத்தக்க மாது சிரோன் மணியின் தூய வாழ்க்கை நூல். விலை ரூ. 0—10—0

தபால் செலவு தனி

அன்பு நூல் நிலையம்

18, ராமசாமி தெரு, சென்னை-1.

கேள்வி? பதில்!

[ஒவ்வொரு நாளும் ஏராளமான அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர், லாருடைய கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள் ய அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால், பதில் அளிக்கப்படாத கேள்வி நாம் மதிக்கவில்லை என அன்பர்கள் தவருக நினைக்கவேண்டாம் என்று தெரிவித் கொள்ளுகிறேம். புனை பெயருடன் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க லாது—ஆசிரியர்.]

. எ. ரஹ்மான்,
திருச்சிராப்பள்ளி.

அம்பேத்கார் புத்தகத்தைத் வியதால் என்ன பலன் ஏற் டுள்ளது?

ஹிந்து மதத்தைத் துறந்து பிற ம் சேரப்போவதாக அம்பேத் ர் 30 ஆண்டுகளுக்கு முன்பே ால்லியிருக்கிறர். முக்கியமாக லாத்தில் சேர விரும்புவதாக ர் சொல்லிக்கொண்டிருந்தார். ல் காந்திஜி அதற்கு இடம் ாடுக்கவில்லை. ஹிந்து மதத்தி ந்து சாதிக் கொடுமையை த்துவிட்டால் அம்பேத்காரும் ரைச் சேர்ந்த எட்டு கோடி த்தப்பட்ட மக்களும் ஹிந்து திலேயே நிரந்தரமாக இருந் டுவார்கள் என்று நினைத்தார். ல் காந்திஜியின் கனவு பலிக்க லை.

ம்பேத்காரும் அவரைச் ந்த இலட்சக்கணக்கான மக் ம் ஹிந்து மதத்தை விட்டு, மதத்தைத் தழுவிக் கொண் ல் நாட்டில் எவ்வித மாறுத ஏற்பட்டுவிடவில்லை. அம் கார் மதம் மாறியது மிகவும் புரட்சிகரமான செயல்; இருப தாம் நூற்றுண்டின் சரித்திரத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சி. ஆயி னும் அதன் முக்கியத்தை, புரட் சித் தன்மையை நாட்டுப் பொது மக்கள் உணரவில்லை. இந்தியாவி லுள்ள தாழ்த்தப்பட்ட மக்களும் ஹிந்துக்களே என்று பறை சாற்று வதற்காக காந்திஜி 21 நாட்கள் உண்ணு விரதமிருந்து உயிர் விட வும் தயாராயிருந்தார். ஆனல் இன்று மூன்று இலட்சம் ஹரிஜனங் கள் புத்த மதத்தில் சேர்ந்தபோது அதை எதிர்த்து உண்ணுவிரத மிருக்க இந்நாட்டில் ஒருவர்கூட முன்வரவில்லை! அம்பேத்காரின் மன மாற்றத்தினல் எந்த அள விற்கு நாட்டிலே புத்துணர்ச்சி யும் விழிப்பும் உண்டாகியிருக்க வேண்டுமோ அதில் பத்தில் ஒரு பங்குகூட உண்டாகவில்லை. அவ ருடைய மதமாற்றம் ஒரு சாதா ரண நிகழ்ச்சியாகவே நடந்து முடிந்துவிட்டது. அம்பேத்கா ருக்கு இது ஒரு பெரிய ஏமாற்ற மாகத்தான் இருந்திருக்கும். ஏனெ னில் அவர் தமது மதமாற்றத் தினல் நாட்டிலே பெரிய மாறு தல்கள் விளையுமென்று எதிர் பார்த்தார்.

மு. அ. மு. இப்ராஹீம்,
மதுரை.

அம்பேத்கார் புத்த மதத்தை ஏற்றுக் கொண்டபோது தம்முடைய மத நம்பிக்கைகளைப் பற்றி ஒரு சில உறுதி மொழிகளைக் கூறினார். அவைகளிற் சில இஸ்லாமியக் கொள்கைகளைப்போல் இருக்கின்றன. அவை என்ன?

(1) கடவுள் அவதாரத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை.

(2) மனிதனுக்கு மறு பிறவி கிடையாது என்று நம்புகிறேன்.

இந்த இரண்டும் இஸ்லாமிய நம்பிக்கைகள். இவைகளைத் தமது புத்தமத நம்பிக்கைகளாக அம்பேத்கார் ஏற்றுக்கொண்டார்.

எம். ஏ. ஷரீப், அரியலூர்.

பிரிட்டிஷ் பிரெஞ்சு வல்லரசுகளுக்கு எகிப்து சரணடைய நேர்ந்தால்?

உலகில் நீதி நிர்மூலமாகிவிட்டது என்று அர்த்தம்; காட்டுமிராண்டிகளின் காலம் திரும்பி விட்டது என்று பொருள். எகிப்தின் சரணாகதி, உலக முற்போக்குச் சக்திகளின் சாவுமணி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எகிப்து சரணடையாது. நாஸிரையும் கைவிடாது. ஏகாதிபத்தியத்தின் இறுதிப் போராட்டந்தான் இன்று எகிப்திலே நடைபெறுகின்றது. தற்சமயம் ஏகாதிபத்தியம் வெற்றி பெறுவதுபோல் தோன்றினாலும், இறுதியில் நிச்சயமாக அதுதான் தோல்வியுறப் போகின்றது. ஏகாதிபத்திய அரசுகளின் புதைக் குழி சூயஸ் கால்வாய்தான் என்பதில் சந்தேகமில்லை.

கே. எம். ஹனீப், ரங்கூன்.

அக்டோபர் இதழ் மீலாத் மலரில் நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு என்னும் கட்டுரையில், 4-வது பாராவில் "சிறிய தந்தை அபூதாலிபினால் நபி பெருமான் ஆதரிக்கப் பெற்றார்கள்" என்று காணப்படுகின்றது. ஆனால் அபூதாலிப், நாயகத்தின் பெரிய தந்தை என்று வேறு சில வரலாறுகளில் படித்திருக்கிறேன். எதுதான் உண்மை?

பெரிய தந்தை என்றே திருத்திக் கொள்ளுங்கள். சிறிய தந்தை என்று பிரசுரமாகியிருப்பது தவறு. மன்னிக்கவும்.

ஓ. எம். எஸ். தாவூத்,
அதிராம்பட்டினம்.

முஸ்லிம் பெண்கள் சினிமா பார்ப்பது பற்றித் திருக்குர்ஆன் என்ன இயம்புகிறது?

ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் ஆண், பெண் இருவருக்கும் ஒரே விதமான ஒழுக்கத்தைத்தான் இஸ்லாம் போதிக்கின்றது.

ஏ. எம். அப்துல் வாஹித்,
விருதுநகர்.

எகிப்தில் நடைபெறும் பிரிட்டிஷ் பிரெஞ்சு இஸ்ராயீல் ஆக்கிரமிப்பை ஐக்கிய நாடு சபையில் அமெரிக்கப் பிரதிநிதி கண்டிக்கும் போது, அவருடைய குரலில் உணர்ச்சி வேகம் காணப்படவில்லையே!

அமெரிக்கர்கள் எந்தக் காலத்திலும் உணர்ச்சி வசப்பட்டவர்கள் அல்ல. அதுவும் ஒரு ஆசிய நாடு அசல் வெள்ளைக்கார நாடுகளால் தாக்கப்படும்போது அமெரிக்கருக்கு ஆத்திரமும் உணர்ச்சி வேகமும் எப்படி வரும்?

ஹங்கேரி மீது ரஷ்யர்கள் வலுத்தாக்குதல் நடத்தியிருப்பது பற்றி அந்தோனி ஈடன் வாய் திறக்கவில்லையே ஏன்?

வாய் திறந்தால் அவர் மானம் போய்விடுமே! ஒரு திருடன்மீது மற்றொரு திருடன் எப்படி அபராதம் சாட்டமுடியும்?

திரு குர்ஆன்

நாட்குறிப்பு-1957

முஸ்லிம் முரசு பாக்கெட் டயரி

★

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆகிய மூன்று தேதிகளும், இஸ்லாத்தின் முக்கிய கொள்கைகளும், கோட்பாடுகளும், தொழுகை நேரமும், விடுமுறை நாட்களும், தபால், தந்தி கட்டண விபரங்களும், வேறு பல அவசியமான செய்திகளும் இருக்கின்றன.

★

திரு குர்ஆனில் காணப்படும் சிறந்த அறிவுரைகள், பொன் மொழிகள், சட்ட திட்டங்கள் சமூக ஒழுக்க விதிகள், வாரிசு உரிமைச் சட்டங்கள் எல்லாம் எளிய நடையில் இனிய தமிழில் இதன் ஒவ்வொரு தேதியிலும் இருக்கின்றன.

★

ஒவ்வொரு இஸ்லாமிய
ஆண் பெண் கையிலும் இருக்கத்தகுந்த
இணையற்ற டயரி-முஸ்லிம் முரசு வெளியீடு

★

கெட்டியான அட்டை காலிகோ பைண்டு

விலை ரூ. 1—4—0 தபால் செலவு தனி

ரிஜிஸ்தர் தபாலில் பெற விரும்புவோர்
1-14-0 முன் பணம் அனுப்ப வேண்டும்

★

அன்பு நூல் நிலையம்

18, ராமசாமி தெரு, சென்னை-1.